Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 127

ஞாயிற்றுக்கிழமை 02 ஏப்ரல் 2023

பங்குனி 19 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## வெடுக்குநாறிமலைக்கு அமைச்சர் குழு பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 2
இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் கடற்றொழில் அமைச்சர் »15

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவினைக் கைவிடுங்கள்

### சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஏப். 2
உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை நீக்குமாறு சர்வதேச சட்டத்தரணிகள் »14

## உள்ளூராட்சித் தேர்தல் ஏப். 10 இல் இறுதி முடிவு

கொழும்பு, ஏப். 2
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்குத் தேவையான நிதி ஏப்ரல் »15

அமைச்சர்கள் வந்தால்

# வெடுக்குநாறிமலையில் சிவலிங்கம் பிரதிஷ்டை?

### நேற்று ஊர்மக்கள் மூவர் கைதாகி விடுவிப்பு

**வவுனியா, ஏப்ரல் 2**

**வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அழிக்கப்பட்ட சிவலிங்கம் உட்பட ஏனைய விக்கிரகங்கள் இன்று பிரதிஷ்டை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அமைச்சர்கள் குழு வெடுக்கு நாறிமலைக்குச் சென்று பார்வையிட்ட பின்னர் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆலய வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.** »15

## விலைகள் குறைப்பு!

### சீனி, மா, பருப்பு

கொழும்பு, ஏப். 2
இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருள்கள் மூன்றின் மொத்த விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதி »16

### பால்மா

கொழும்பு, ஏப். 2
இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை நேற்று முதலாம் திகதி முதல் குறைக்கப்பட்டுள் »14

தமிழர் தாயகத்தின்

## எட்டு மாவட்டங்களிலும் ஒரேநாளில் மிகப்பெரிய கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 2
அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட கலாசார அடிப்படையிலான இனப்படுகொலையை எதிர்த்து மிகப் பெரிய எதிர்ப்புப் போராட்டத்தை வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் ஒரேநாளில் முன்னெடுப் »14

## எமது இருப்பை பாதுகாக்க நாம்தான் போராடவேண்டும்

### அதனை மக்கள் மயப்படுத்தி தீவிரமாக்க வேண்டும் என்கிறார் சரவணபவன்



யாழ்ப்பாணம், ஏப். 2
2009 ஆம் ஆண்டு வரையில் தமிழ் மக்களுக்கு இருந்து வந்த பலத்தை இல்லாமலாக்கிய சர்வதேச நாடுகள் அதன் பின்னர் எம்மை ஒருதுளியும் திரும்பிப்பார்க்கவில்லை, இதுதான் யதார்த்தம். எமது இருப்பை தக்க வைக்க நாம் தான் போராடவேண்டியிருக்கின்றது. »14




## இனவழிப்புக்கு எதிராக சங்கானையில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 2
தமிழின அழிப்புக்கு பௌத்த ஆக்கிரமிப்புக்கு எதிராக சங்கானையில் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைக் கிளையால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப் »14

## 5 ஆண்டுகளில் படைக்குறைப்பு

கொழும்பு, ஏப். 2
அரசாங்கத்தினுள் மிகப்பெரிய மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது. புதிய ஆள் சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளது. ஆள்களின் »14

## கடலில் மூழ்கி இளைஞன் சாவு!

யாழ்., ஏப். 2
நண்பனுடன் கடலுக்குச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந் »14

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இந்துக்களுக்கு நீதிகோருகின்ற

# தமிழ்த் தலைவர்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு!

### இந்து சமயப் பேரவை அறிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 2**

**இந்து விரோதச் செயல்களுக்கு எதிராக தமிழ் அரசியல் தலைவர்கள் கிளர்ந்தெழுந்து வருவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது. தமிழ் அரசியல் தலைவர்களின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு இந்து மக்கள் நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவார்கள் என்று இந்து சமயப் பேரவையின் தலைவரான ஈசான சிவ சக்திகிரீவன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இந்து விரோதச் செயல்களுக்கு எதிராக தமிழ் அரசியல் தலைவர்கள் கிளர்ந்தெழுந்து வருவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

இது எமது நாட்டில் என்றும் இல்லாத புதியதோர் அற்புத அத்தியாயத்தை நிச்சயம் தோற்றுவிக்கப் போகின்றது. இதற்கு ஏனைய மதத் தலைவர்கள் வழங்கிவரும் ஆதரவு இலங்கைத்தீவில் பௌத்த சாம்ராஜ்யத்தை முடிவுக்குக் கொண்டுவந்தே தீரும். ஆதலால் கைக்கூலிகள் மேற்கொண்டுவரும் நயவஞ்சகச் செயல்களுக்கு இந்துக்கள் யாரும் துணைபோகாதிருக்க வேண்டுமென்று மிகுந்த அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம)

**வாடகைத்தாய் தேவை**

தனது கருப்பையால் சுமந்து பெற்றெடுத்துக்கொள்ள முடியாத தாய்க்கு IVF மூலம் இந்தியாவிற்கு சென்று இலங்கையில் குழந்தை பெற்றெடுப்பதற்கு வாடகைத்தாய் தேவை.

(இரகசியம் பேணப்படும்)

(CS24267)(J-1)

**077 699 9021**

### இனத்தின் இருப்புக்காக

## போராட்டங்களை தீவிரமாக்குங்கள்

### வாசுதேவ குருக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

தமிழினத்தின் இருப்புக்காகவும் இந்து மதத்தின் இருப்புக்காகவும் இனிவரும் நாள்களில் நாம் தீவிரமான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என்று வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

சங்கானை பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்தின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழ் மக்களை மீண்டும் ஒடுக்குவதற்கு சில தீய சக்திகள் ஒன்றுகூடியுள்ள நிலையில் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து அவற்றை முறியடிக்க வேண்டும். இலங்கையில் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கும், இந்து சமயத்தை அழிப்பதற்கும் தொல்லியல் திணைக்களம் என்ற போர்வையில் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வவுனியா நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் அழிக்கப்பட்டமையானது இந்து சமயத்தை மட்டுமல்லாமல் தமிழினத்தின் அடையாளத்தையும் இல்லாது ஒழிக்கும் செயற்பாடாகவே பார்க்கிறோம். அதன் தொடர்ச்சியாக குருந்தூர்மலை விவகாரமும் ஒரு வரலாற்று அழிப்பு நடவடிக்கையே. ஆகவே தமிழினம் அன்று தொட்டு இன்று வரை போராடிக் கொண்டிருக்கும் இனமாக இருக்கின்ற நிலையில் எமது இனத்தையும் சமயத்தையும் பாதுகாப்பதற்கு போராட்டங்களை விரிவுபடுத்த வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது - என்றார். (அ-ம)

### பத்மநாபா சிலை

## பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, ஏப். 2

வவுனியா மணிக்கூட்டுக்கோபுர சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பத்மநாபாவின் சிலை, முறையான அனுமதிபெற்று அமைக்கப்படவில்லை என்று தெரிவித்து வவுனியா நகரசபையின் செயலாளரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் முன்னாள் தலைவர் பத்மநாபாவின் நினைவுச்சிலை நகரசபையின் அனுமதியின்றி கடந்த சிலநாள்களுக்கு முன்னர் அந்தப் பகுதியில் வைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்று அதற்கான நினைவுக்கல் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற நகரசபையின் செயலாளர் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் பணிகளை நிறுத்துமாறு கோரியதுடன், அனுமதியின்றி பணிகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்துள்ளார். (அ-ம-110)

## நிரோஷுக்கு எதிரான வழக்கு ஜூலை 17 க்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

நிலாவரையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட அரச கருமங்களுக்கு தடை ஏற்படுத்தினார் என்று முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு, எதிர்வரும் ஜூலை மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நிரோஷுக்கு எதிரான வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் ஏற்கனவே அச்சுவேலி பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருந்தது. இந்த நிலையில் அடுத்த வழக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எனினும் பொலிஸார், தமது தரப்பில் இருந்து மேலதிக ஆலோசனையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று நீதிமன்றில் தெரிவித்தனர். அதனையடுத்தே வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-14)

# மலையக மக்களின் விடுதலைக்காக மலையகம் 200 ஐ பயன்படுத்துங்கள்

### வேலுகுமார் எம்.பி எடுத்துரைப்பு

"மலையகம் 200" ஐ வெறும் நிகழ்வாகக் கருதாமல் அதனைப் பயன்படுத்தி மலையக மக்களின் விடுதலைக்கான கொள்கைத் திட்டமொன்றை உருவாக்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கண்டி ஊடகச் செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது.

மலையக மக்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு 200 ஆண்டுகளாகும் நிலையில் அதனை முன்னிட்டு நாடு முழுவதும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்லாது கடல் கடந்தும் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தும் வரவேற்கத்தக்கவைகள். எனினும் மலையகம் 200 என்பது வெறும் நிகழ்வல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு 200 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இன்று எமது மக்களின் நிலை என்ன என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது.

இன்றும் எமது மக்கள் தோட்ட நிர்வாகத்தால் கட்டுப்படுத்தப்பட்டவர்களாக உள்ளனர். தொழில் நிலையில், தொழில் முறையில் எவ்வித மாற்றமும் இல்லை. குடியிருப்புகள் இன்றும் அன்றும் உருவாக்கப்பட்ட லயன் அறைகளே. கல்வி, சுகாதாரம், அரச நிர்வாகம் என எல்லாவற்றிலும் பாரபட்சமான நிலையே தொடர்கின்றது.

இன்று நாட்டில் எடுக்கப்படுகின்ற எல்லா புள்ளிவிவரங்களிலும் எமது சமூகமே கீழ் நிலையில் உள்ளது. 200 ஆண்டுகள் கடந்தும் இன்றும் கூட இந்த நிலைமையில் இருந்து மீள்வதற்கான கொள்கைத்திட்டம் ஒன்றும் இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் அரசியல் தலைமைகள் மலையகம் 200 ஐ முற்போக்காக பார்க்க வேண்டும். அதனை விடுத்து ஒருநாள் நிகழ்வாக மக்களைத் திரட்டி, நிகழ்வு நடத்துவது இன்னும் நாம் பிற்போக்கு சிந்தனையில் இருந்து மீளவில்லை என்பதையே காட்டுகின்றது.

மலையகம் 200 ஐ மையப்படுத்தியாவது மலையக மக்களின் விடுதலைக்கான கொள்கைத் திட்டமொன்றை உருவாக்க முன்வாருங்கள். அதனடிப்படையில் மலையக மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை முன்வையுங்கள். அதுவே மலையகம் 200 இல் ஆக்கபூர்வமான முன்னெடுப்பாக அமையும். அவ்வாறில்லாது நாம் இதேபோல பயணிப்போமாயின் மலையக சமூகத்தின் எதிர்காலம் என்பது இன்று போல நாளையும் கேள்விக்குறியாகவே அமையும் - என்றார். (அ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்தின் நிதி நெறிமுறையற்ற உதவி!

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆதங்கம்

**கொழும்பு, ஏப். 2**

**சர்வதேச குற்றங்களுக்கு பொறுப்புக்கூறுதல் தொடர்பான நிபந்தனைகள் ஏதுமின்றி சர்வதேச நாணய நிதியம் வழங்கிய கடன் தொகையானது நெறி முறையற்ற மற்றும் நியாயமற்ற ஏற்பாடு. இந்த ஏற்பாடு ஊழல் முறைகேடுகளிலிருந்து இலங்கை விடுபட வழிவகுக்கும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆதங்கம் வெளியிட்டுள்ளது.**

இதுதொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஷ்வநாதன் தெரிவிக்கையில்,

அப்பாவி சிறுபான்மையின மக்களின் கைகள் குருதியில் நனைந்திருக்கும் நேரத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு உயிர்நாடியை வழங்குவது நெறிமுறையற்றது - அநீதியானது.

வங்குரோத்து நிலையில் உள்ள இலங்கைப் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக கடன் வழங்கப்பட்டபோது இராணுவமயமாக்கல் - ஆக்கிரமிப்புகள் - பொறுப்புக்கூறல்கள் உரிய முறையில் கையாளப்படவில்லை.

இப்படியிருக்கையில் மனித உரிமைகள் பாதுகாப்பு, மத சுதந்திரம் உள்ளிட்ட சர்வதேச குற்றங்களுக்கு பொறுப்பேற்காத அரசாங்கத்துக்கு சர்வதேச நாணய நிதியம் கடனளித்துள்ளது.

இது ஊழல் மற்றும் பொருளாதார முறைகேடுகளுக்கான தண்டனையிலிருந்து இலங்கை அரசாங்கம் விடுபடுவதற்கே வழிவகுக்கும் - என்றார்.

(அ-ச-இ)

# ஊடகவியலாளர் சனத் ரி.ஐ.டி. விசாரணைக்கு

யாழ்ப்பாணம், ஏப். 2

சுடர்ஒளிப் பத்திரிகையின் நாடாளுமன்ற முன்னாள் செய்தியாளரும் சுயாதீன ஊடகவியலாளருமான இராமசந்திரன் சனத், பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு, விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் நுவரெலியா அலுவலகத்துக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வருகை தருமாறு, ஊடகவியலாளர் சனத்துக்கு நேற்று அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

புசல்லாவ பொலிஸார் ஊடாக வழங்கப்பட்டுள்ள குறித்த அறிவித்தலில், பயங்கரவாத விசாரணைப் பிரிவால் முன்னெடுக்கப்படும் விசாரணை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்கு எனக் கூறப்பட்டுள்ளது. எனினும், என்ன விசாரணை என்பது பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

(ஒ-22)

# நக்கிப் பிழைக்க நாம் தயாரில்லை

## ரஞ்சித் மத்தும பண்டார ஆவேசம்

கொழும்பு, ஏப். 2

அரசாங்கத்தின் பக்கமாகச் சென்று அவர்களின் கால்களை நக்கிப் பிழைப்பு நடத்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் தயார் இல்லை - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் அரசில் இருந்து அங்கும் இங்கும் தாவுவதாகப் பேசப்பட்டு வருகின்றது. 2020 ஆம் ஆண்டு இந்த அரசாங்கம் அமையும்போது 157 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆனால், 2022 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது 135 நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், கடந்த வரவு - செலவுத் திட்டத்தின்போது அது 123 ஆகவும் குறைந்துள்ளது. அதாவது இந்த அரசாங்கத்திலிருந்து 34 பேர் எதிர்க்கட்சியில் வந்து அமர்ந்திருக்கின்றார்கள். ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்குகளைப் பெற்ற ஒருசிலர் அரசாங்கத்தில் இருக்கிறார்கள். ஆனால் முன்னதாக அரசாங்கத்தின் பக்கமாகச் சென்ற. ஐந்தாறு பேர் திரும்பி வந்துள்ளனர். ஒட்டுமொத்தத்தில் அரசாங்கம்தான் பலவீனமாக இருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியல்ல - என்றார்.

(அ-ம-22)

# கணக்கெடுப்பு காலம் நீடிப்பு!

கொழும்பு, ஏப்.2

நலன்புரிக் கொடுப்பனவுகளுக்கு தகுதியுடையோரைத் தெரிவு செய்யும் கணக்கெடுப்புக்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது என சமூக நலன்புரி நன்மைகள்சபை தெரிவித்துள்ளது.

முன்பதாக நலன்புரிக் கொடுப்பனவுக்கான தகவல் கணக்கெடுப்பு கடந்த 31 ஆம் திகதியுடன் நிறைவுபெறும் என அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் மாவட்ட மற்றும் பிரதேசசெயலாளர்களின் கோரிக்கைக்கமைய எதிர்வரும் 10 ஆம் திகதி வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ச-இ)

# சைவசமயத்தைக் காப்பாற்ற இந்தியாதான் உதவவேண்டும்

## இந்து அமைப்புக்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப். 2

இந்தியா ஆதிச் சமயமாகிய சைவசமயத்தையும் சைவாலயங்களையும் பாதுகாப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சைவசமயம் சார்ந்த அமைப்புக்கள், கோவில் தர்மகர்த்தா சபையினர், ஆதீன கர்த்தாக்கள், கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்தோரால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இது தொடர்பில் அவரது தலைமையில் நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில்,

இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு தொடர்பாக நீதிவழங்கும் முறைமையில் தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய சந்தேகம் நிலவுகின்றது. 'ஒரேநாடு ஒரேசட்டம்' என்ற கொள்கை பின்பற்றப்படுவதில்லை என்பதை தமிழ் மக்கள் உணர்கிறார்கள்.

இலங்கையில் மதமாற்றத் தடைச்சட்டம் உடனடியாக ஏற்படுத்தப்படவேண்டும்.

அண்மையில் கிறிஸ்தவப் போதகராகிய அருட்தந்தை சக்திவேல், ஆனையிறவில் நடராசர் வழுவ சிலை வைக்கப் பட்டதைக் கண்டித்து பத்திரிகைகளில் அறிக்கை விட்டதுடன் சிவபூமியாக வடக்கு-கிழக்கை சிலர் மாற்ற முயற்சி செய்கிறார்கள் என எள்ளி நகையாடியமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இலங்கைக் குரிய ஒரு சைவத்தமிழ் பெயர் 'சிவபூமி'. அவரது கூற்றுக்கு சபையினர் முழுமையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

தென்னிலங்கையிலிருந்து வரும் அரசியல் தலைவர்கள் மேற்குறித்த பிரச்சினைகளுக்குப் பதில்தராவிடில் அவர்கள் வடக்கே வரும்போது அவர்களின் சந்திப்புக்களை சைவசமயத் தலைவர்கள் தவிர்க்கவேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன- என அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ-ஒ-இ)

# இராமாயணத்தில் விபீஷணன் வழிபட்ட பௌத்த விகாரை இலங்கையில்தானாம்

## உருட்டுகிறார் மிலிந்த மொறகொட

கொழும்பு, ஏப். 2

இராமாயணத்துடன் தொடர்புகொண்ட குறைந்தது 40 இடங்கள் இலங்கையில் உள்ளன. அவற்றில் இராமாயண கதாபாத்திரமான விபீஷணன் வழிபட்ட பௌத்த விகாரையும் உள்ளது. இந்த இடங்களை எமது நாடு அபிவிருத்தி செய்து வருகின்றது. இவ்வாறு இலங்கைக்கான தூதுவர் மிலிந்த மொறகொட மகாராஷ்டிரா ஆளுநரிடம் தெரிவித்துள்ளார்.

இராம நவமி விழாவையொட்டி மிலிந்த மொறகொட மும்பையிலுள்ள ராஜ்பவனில் மகாராஷ்டிரா ஆளுநர் ரமேஷ் பாயிஸை அண்மையில் சந்தித்தார்.

அப்போது இலங்கை அழகான மென்மையான மணல் கடற்கரைகள், பசுமையான தேயிலைத் தோட்டங்கள், மலைகள், வளமான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்குப் பெயர் பெற்றது. இவற்றில் பெரும்பாலானவை இராமாயணத்துடன் தொடர்புடையவை. இலங்கையில் இராமாயணத்துடன் தொடர்புடைய குறைந்தது 40 இடங்கள் உள்ளன. இலங்கையில் ஐந்து சிவன் கோயில்கள் உள்ளன. அதில் ஒன்று திருகோணமலையில் உள்ளது இது இராவணனால் நிறுவப்பட்டதாக நம்பப்படுகிறது.

அத்துடன் இலங்கையில் விபீஷணன் வழிபட்ட பௌத்த விகாரையொன்றும் உள்ளது.

இந்த இடங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என மிலிந்த மொறகொட சுட்டிக்காட்டினார்.

(அ-ச-இ)

பல்வேறு நாடுகளில்

# இணையவழியில் மோசடி 39 சீனப்பிரஜைகள் கைது

## அளுத்கம பொலிஸார் அதிரடி

கொழும்பு, ஏப். 2

பல்வேறு நாடுகளில் வசிக்கும் மக்களின் கணக்குகளிலிருந்து மில்லியன் கணக்கான பணத்தை இணையத்தளம் மூலம் மோசடி செய்த சீனப் பிரஜைகள் 39 பேரை சந்தேகத்தின்பேரில் கைது' செய்துள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

தூதரகங்கள் ஊடாகப் பெறப்பட்ட முறைப்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த குழுவினர், நேற்றுச் சனிக்கிழமை கைது செய்யப்பட்டனரென பொலிஸார் குறிப்பிட்டனர்.

அளுத்கம- களுவாமோதர பிரதேசத்திலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் வாடகை அடிப்படையில் பல மாதங்களாகத் தங்கியிருந்த நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டு அளுத்கம பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கணினிகள், மதிப்பு மிக்க திறன்பேசிகள் மற்றும் பெருந்தொகைப் பணத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் அளுத்கம பொலிஸார் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லக்னோ அபார வெற்றி

டெல்லி அணியை 50 ஓட்டங்களால் வீழ்த்தி லக்னோ அணி சிறப்பான வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

ஐ.பி.எல். தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்று இடம்பெற்றது. லக்னோ சுப்பர் கெய்ன்ஸை எதிர்த்து டெல்லி கப்பிரல்ஸ் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 193 ஓட்டங்களைக் குவித்தது. கைல்ஸ் மேயர்ஸ் 38 பந்துகளில் 73 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் டெல்லி சார்பில் அஹமட் மற்றும் சேட்டன் சக்ரியா இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். பதிலளித்து ஆடிய டெல்லி அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அந்த அணி சார்பில் டேவிட் வோர்னர் மாத்திரம் அதிகபட்சமாக 56 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அபாரமாக பந்து வீசிய மார்க் வூட் 4 பந்து பரிமாற்றங்களில் 14 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக்கொடுத்து 5 இலக்குகளைக் கைப்பற்றினார். அவர் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஒ.5)

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 04 . 1934



மறைவு 31 . 03 . 2023

### திரு.வேலாயுதம் சின்னமணி

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் இராசவீதி கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலாயுதம் சின்னமணி நேற்றுமுன்தினம் (31.03.2023) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் குழந்தை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவரகளான சின்னட்டி நாகமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தெய்வானை, கணபதிப்பிள்ளை, உமையாத்தை ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா, தங்கரத்தினம், தம்பையா ஆகியோரின் மைத்துனரும், மல்லிகாதேவி, மகேந்திரராசா, விமலாவதி, சந்திரவதி, மனோகராசா (தபால் உத்தியோகத்தர்- யாழ்ப்பாணம் பிரதம தபாலகம்), பூலோகவதி காலஞ்சென்ற தர்மராசா மற்றும் நிரஞ்சினிதேவி (கிராமிய வங்கி-கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைவீரசிங்கம், விஜயராணி (யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்), கிருஸ்ணமூர்த்தி, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் கமலேஸ்வரி, நவரத்தினகுமார், பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரேணுகா-சர்மிலன், கோவிந்தராசன்-தர்சியா, லட்ஷினி, நிதர்சன், மதுசா, சகானா, டிஷாயினி, கயறூபி, லதுசன், டினோஷா, கவிராஜ், லதுஷிகா, சாதனா ஆகியோரின் பாசமிகு பேரனும், டிஷாந், விபிஷாந், ஜஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 02 . 1961



மறைவு 26 . 03 . 2023

### வதனி அருமைத்துரை
(சுவிஸ்)

யாழ்ப்பாணம் அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை வதிவிடமாகவும் கொண்ட வதனி அருமைத்துரை அவர்கள் கடந்த (26.03.2023) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், அருமைத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், எப்சிபா, அபிசேக் ஆகியோரின் அன்புத் தாயும், அனோஜன் (சுவிஸ்) அவர்களின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான தவம், பொன்மணி, பொன்ராசா மற்றும் தங்கராசா, மோகனராசா, இராஜேஸ்வரி, சாந்தினி பாலேந்திரன், பாமினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நாளை (03.04.2023) திங்கட்கிழமை இல. 48, நொத்தாரிஸ் வீதி அரியாலையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இலங்கை நேரப்படி பிற்பகல் 2.00 மணியளவில் நேரலையாக ஒளிபரப்புச் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0094 770038439
0041 779729827

தகவல்
குடும்பத்தினர்.

(CS 49790) (K - 1)


## வெங்கடேஸ்வரா எக்ஸ்பிரஸ்

காங்கேசன்துறை - யாழ்ப்பாணம் - கொழும்பு

Super Luxury A/C Coach




Colombo:
No.217, Central Road,
Colombo-12.

Tel: 011 5234 588

Jaffna:
No.157/1, Kasthuriyar
Road, Jaffna.

Booking Jaffna : 077 3929 359
Colombo : 077 3988 776

விசேட விலைக்கழிவு 3000/=

(CS 24262) A-1


## மழை விளையாடிய போட்டி பஞ்சாப் கிங்ஸ் வெற்றி!

பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் கொல்கத்தா அணி 7 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. வெற்றிக்கு 24 பந்துகளில் 46 ஓட்டங்கள் தேவை என்ற சூழலில் மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்ட நிலையில், டக்வோர்த் லூயிஸ் விதிப்படி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

பஞ்சாப் அணிக்கு பிரப்சிம்ரன் சிங், ஷிகர் தவான் இணை தொடக்கம் கொடுத்தது. பிரப்சிம்ரன் சிங் 2 ஆறு ஓட்டங்கள், 2 நான்கு ஓட்டங்கள் என அதிரடி ஆட்டத்தில் இறங்கினாலும் 2ஆவது பந்துப் பரிமாற்றத்திலேயே ஆட்டமிழந்து நடையைக் கட்டினார். பானுக ராஜபக்ச, ஷிகர் தவான் சிறப்பான இணைப்பாட்டத்தை அமைத்து, கொல்கத்தாவின் பந்துகளை பஞ்சாக பறக்கவிட்டனர். இருவரின் அதிரடியால் பஞ்சாப் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 100 ஓட்டங்களைச் சேர்த்தது.

32 பந்துகளில் 50 ஓட்டங்களைக் குவித்த பானுக ராஜபக்சவை உமேஷ் யாதவ் ஆட்டமிழக்கச் செய்தார். அடுத்து வந்த ஜிதேஷ் சர்மா 2 ஆறு ஓட்டங்களை விளாசி 21 ஓட்டங்களை தன் பங்குக்கு சேர்த்துவிட்டு கிளம்பினார். அணிக்கு நம்பிக்கையளிப்பார் என எதிர்பார்த்த தவான் 40 ஓட்டங்களுடன் வருண் சக்ரவர்த்தியால் இலக்கு நேரடியாகத் தகர்க்கப்பட்டு 'பவிலியன்' திரும்பினார். தொடக்கத்தில் அதிரடி காட்டிய பஞ்சாப் அணி இலக்குகள் இழப்பால் தடுமாறி 15 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களைச் சேர்த்தது.

அடுத்து வந்த சிக்கந்தர் ராசா (16) பெரிதாகச் சோபிக்கவில்லை. சாம் கரன் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் ஆறு ஓட்டம் விளாசி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். 20 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் பஞ்சாப் அணி 5 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைச் சேர்த்தது. சாம் கரன் 26 ஓட்டங்களுடனும், ஷாருக்கான் 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். கொல்கத்தா அணி தரப்பில் ரிம் சவுதி அதிகபட்சமாக 2 இலக்குகளையும், உமேஷ் யாதவ், வருண் சக்ரவர்த்தி, சுனில் நரேன் தலா ஓர் இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலளித்து ஆடத்தொடங்கிய கொல்கத்தா அணியின் தொடக்க ஆட்டக்காரரான மந்தீப் சிங் 2 ஓட்டங்களில் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து வந்த அனுகுல் ராய் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 2 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து தள்ளாடிய கொல்கத்தாவுக்கு நம்பிக்கையளித்த ரஹ்மானுல்லா குர்பாஸ் 22 ஓட்டங்களுடன் சுருங்கினார்.

வெங்கடேஷ் ஐயர் நிலைக்க, அவருடன் இணைப்பாட்டம் அமைத்த நிதிஷ் ராணா 24 ஓட்டங்களில் 'பவிலியன்' திரும்பினார். ரின்கு சிங் 4 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, 11 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களுடன் மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது கொல்கத்தா.

2 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்களை விளாசிய அண்ட்ரூ ரஸ்ஸல் 35 ஓட்டங்களுடன் சாம் கரன் பந்து வீச்சில் வீழ்ந்தார். நிலைத்து ஆடுவார் என நம்பிய வெங்கடேஷ் ஐயர் 34 ஓட்டங்களில் அரங்கம் திரும்பும்போது அணியின் நிலைமை மோசமானது.

16 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 7 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது கொல்கத்தா. வெற்றிக்கு 24 பந்துகளில் 46 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் பாதிக்கப்பட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் டக்வோர்த் லூயிஸ் விதிப்படி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் அணி தரப்பில் அர்தீப் சிங் 3 இலக்குகளையும், சாம் கரன், நாதன் எலீஸ், சிக்கந்தர் ராசா, ராகுல் சாஹர் ஆகியோர் தலா ஓர் இலக்குகளையும் வீழ்த்தினர். சிறப்பாக பந்து வீசிய அர்தீப் சிங் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## துஷ்பிரயோகங்களை தவிர்க்க ஒரு கல்விமுறை!

பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் விழிப்புணர்வுக் கல்வியை வழங்கும் 'செயற்பாட்டு நடவடிக்கைகளில்' இறங்கியிருக்கின்றது அரசாங்கம். வெறும் 'பேச்சுக் கல்வியாக' அல்லாமல் பாடப்புத்தகங்களில் ஒரு கற்கைநெறியாக இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன. சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சின்கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட துறைசார் நபர்களை ஒரு குழுவாக ஒருங்கிணைத்து இந்தநடவடிக்கைகள்முன்னெடுக்கப்படவுள்ளன.

பாலியல் துஷ்பிரயோகங்களும், துர்நடத்தைகளும், கலாசாரச் சீரழிவுகளும் மலிந்த பூமியாக இலங்கை மாறிக் கொண்டிருக்கின்றது. வடக்கு–கிழக்கிலும்கூட இந்த இழிசெயல்கள் இப்போது தாராளம் பெற்றிருக்கின்றன. சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அற்ற ஒரு முழு நாளைக் காண்பதே இப்போது குதிரைக்கொம்பு நிலைதான். பதின்மத்தைத் தொடாத பாலகர்கள்கூட பாலியல் இச்சைக்கு இரையாக்கப்படும் பின்னணியில், இந்தப் புத்தகக்கல்வி காலத்தேவையான ஒரு நடவடிக்கையே. ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற வளர் நாடுகளிலும் இந்தக் கல்வி என்றோ செயலுருப் பெற்றுள்ளது. தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகள் பாலியல் விழிப்புணர்வுக் கல்வியில் அண்மைக் காலமாக முழுவீச்சில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறிருக்கையில்தான் காலத்தின் தேவையை அறிந்து இலங்கையும் விடயத்தைச்சிரத்தையில் எடுத்திருக்கின்றது.


ஒரு குழந்தை அதன் ஐந்து வயது வரைக்கும், பெற்றோரினதும் உற்றோரினதும் கண்காணிப்பிலும் பராமரிப்பிலும் தான் கூடுதலான நேரங்களைச் செலவிடுகின்றது. பாடசாலைக்காகப் புறப்பட்ட பின்னர் மூன்றாம் தரப்பு நபர்களுடனான பழக்கத்தை உருவாக்கவேண்டிய கட்டாயமும் தவிர்க்கமுடியாத்தனமும் அந்தக் குழந்தைக்கு ஏற்படுகின்றது. இதனால் பள்ளிப்பருவத்தின் ஆரம்ப நாள்களிலேயே அந்தக் குழந்தைக்கு நல்ல தொடுகை எது, தவறான தொடுகை எது என்பன தொடர்பான தெளிவூட்டல்களை – விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்படுத்துவது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் கடமையாகும். அதற்காக, இதுவரை இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் இல்லாமல் இருந்தன என்றோ அல்லது சிந்தனை வறட்சி மிக்கதாக இருந்தன என்றோ பொருளல்ல. பேச்சளவில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களுக்கும், பாடப்புத்தகமாக – கற்றல் நடவடிக்கையாக – மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களுக்கும் இடையில் ஆகப்பெரும் வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. இந்த இரண்டாம்நிலை நடவடிக்கைகள் மிக இலகுவாக மாணவர்களைச் சென்றடைய வல்லவை, இங்கு விடயமும் அதுதான்.

பொருளாதாரப் பின்னடைவைக் காரணம்காட்டி, இந்த நல்ல திட்டத்தை பூர்வாங்க நடவடிக்கைகளுடன் அரசாங்கம் கைவிட்டுவிடாமல், போர்க்கால அடிப்படையில் இது செயலுருப்பெறுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். இதேவேளை – இது அரசாங்கத்துக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ மட்டுமான பணியல்ல. பிள்ளைகளின் நடத்தைக்கோலங்களில் கூடுதலான அக்கறை கொண்டவர் களாக பெற்றோரும் இருக்கவேண்டும். வகுப்பறையில் பத்தோடு பதினொன்றாக ஒரு பிள்ளையை ஆசிரியர் கண்காணிப்பதற்கும், வீட்டில் அந்தப் பிள்ளை ஏக கண்காணிப்பில் இருப்பதற்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாடுகள் உள்ளன. இந்தப் பொறுப்புணர்வை பெற்றோர் வரித்துக்கொள்ளவேண்டும். இவை எல்லாமும் சேர்ந்த கூட்டொருங்கிய செயற்பாடுதான் பிள்ளைச் செல்வங்களின் நாளைய [illegible] எதிர்காலமும் இருப்புமாகும்.

நாளொரு நல்வார்த்தை

" எப்போதெல்லாம் நீ அதிக சாந்தமாக உணர்கிறாயோ அப்போதெல்லாம் நீ சரியான திசையில்தான் செல்கிறாய் "

– ஓஷோ




# பாடப்புத்தகங்கள் ஊடாக பாலியல் விழிப்புணர்வு

## *சிறப்புக் குழு அமைக்க அரசாங்கம் நடவடிக்கை*

**கொழும்பு, ஏப். 2**

**பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் விழிப்புணர்வுக் கல்வியை வழங்குவதற்கும் இதற்காக பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதற்கும் சிறப்புக் குழு அமைத்து நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

நாடாளுமன்ற சிறுவர் ஒன்றியத்தின் கூட்டம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரையும் உள்ளடக்கியதாக இந்தக் குழுவை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவை ஒருங்கிணைக்கும் பொறுப்பு கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற சிறுவர் ஒன்றியத்தின் பிரதித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவ கலாநிதி சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான வீரசுமன வீரசிங்க, மஞ்சுளா திஸாநாயக்க, முதித்தா பிரசாந்தி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

(அ-ம-இ)

## இன, மதப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணுங்கள்!

### ஸ்பெய்ன் தூதரக அதிகாரி சஜித்திடம் வலியுறுத்து

இலங்கையில் இன, மத ரீதியில் எழுந்துள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவேண்டும். அப்போதுதான் நாடு முன்னேற்றப் பாதையில் பயணிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வலியுறுத்தினார் ஸ்பெய்ன் தூதரகத்தின் அரசியல் விவகாரப் பிரிவின் தலைவர் அல்போன்சோ ஹெறரெரோ கோரல்.

அல்போன்சோ ஹெறரெரோ கோரலுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போதே அல்போன்சோ ஹெறரெரோ கோரல் இவ்வாறு வலியுறுத்தினார். அவருடைய கருத்தை சஜித் பிரேமதாஸவும் முழுமையாக ஏற்றுக்கொண்டார்.

(அ-ம-22)

## புதிய பயங்கரவாதச் சட்டம் பயமுறுத்துகின்ற சட்டமே!

### *சந்திரிகா சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஏப். 2

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டம் ஒரு பயமுறுத்தும் சட்டவரைவே. இந்தச் சட்டவரைவில் ஜனநாயகத் தூண்கள் பிடுங்கியெறியப்பட்டுள்ளன - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்தப் புதிய சட்டவரைவு நடைமுறையானால் இன்று நாங்கள் பேசுவது போன்று சுதந்திரமாகப் பேசமுடியாது. ஜனநாயகத்துக்கு இடமில்லை. கருத்துச் சுதந்திரம் வெளிப்பட்டால் கைது செய்யப்பட்டு நசுக்கப்படுவோம். இது ஒரு பயமுறுத்தும் சட்டமாகும். இந்த சட்டவரைவைத் தோற்கடிக்க அனைவரும் சமூக ஆர்வலர்கள் என்பதை உறுதிசெய்யவேண்டும்- என்றார். (அ-ச-இ)

03.04.2023
திங்கட்கிழமை
பங்குனி 20

சுபநேரம் : 12.10 - 01.40
ராகுகாலம் : 07.40 - 09.10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை மக்கள் முற்றுகையிட்டு போராட்டம்



**மட்டக்களப்பு, ஏப். 2**

**மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்புக்கு எதிராக மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டு கடந்த வியாழக்கிழமை மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அங்கு பெரும் அமளிதுமளி ஏற்பட்டுள்ளது.**

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் குழுத் தலைவர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தில் காலை ஆரம்பமானது. அப்போது சூரிய மின்கல மின் திட்டத்தை அமைப்பதற்காக வாகனேரி பகுதியில் விவசாயக் காணியை அபகரிக்க முனையும் செயற்பாட்டைக் கண்டித்தும் வாகரைப் பகுதியில் இல்மனைட் அகழ்வை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாட்டை நிறுத்தக்கோரியும் ஊர்வலமாக வந்த பொதுமக்கள் மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டு போராடினர்.

அதனையடுத்து மாவட்டச்செயலகத்துக்குள் நுழைய முற்பட்டவேளையில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் நிலையேற்பட்டது டன் பெண்ணொருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆயினும் பொலிஸாரின் பாதுகாப்புடன் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் நடைபெற்றது.

மக்களின் கோரிக்கைக்குத் தெளிவுபடுத்தல் வழங்கப்படாத நிலையில் கூட்டத்தில் கலந்துகொள்வதில் பயனில்லை எனத் தெரிவித்து இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். தொடர்ந்து மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் இடம்பெற்றது. (அ-ச-213)

## ஊழலுக்கு முடிவுகட்ட எம்மாலேயே முடியும்

*கூறுகிறது ஜே.வி.பி.*

கொழும்பு, ஏப். 2

ஊழல் அரசியல் கட்சிகளின் ஆட்சிக்கு முடிவு கட்டி நாட்டை முன்னேற்றப் பாதைக்கு கொண்டுவர வேண்டும். அதற்கே எமக்கு பெரும்பான்மை ஆதரவளிக்குமாறு மக்களிடம் கேட்கிறோம் என ஜே.வி.பி.யின் முக்கியஸ்தர் நலிந்த ஜயதிஸ்ஸ கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்;

எங்களுக்குப் பெரும்பான்மை ஆதரவு கிடைக்காவிட்டால் ஊழல் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியை கைப்பற்றுவர். அதனால் நாடு மீளவும் படுகுழியில் வீழவே செய்யும். பெரும்பான்மை ஆதரவை எமக்கு வழங்கினால் ஊழலை ஒழித்து நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல நாம் தயார் - என்றார். (அ-ச-22)

## இலவச யோகா

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆண், பெண் இருபாலாருக்குமான இலவச யோகாசனப் பயிற்சிகள் , நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

கிழமை நாள்களில் ஒரு பிரிவாகவும், வார இறுதி நாள்களில் மற்றொரு பிரிவாகவும் மாலை 5 மணி முதல் 6.30 மணி வரை பயிற்சிகள் இடம்பெறவுள்ளன. யோகாசனப் பயிற்சிகள் பெற விரும்புவோர் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் நேரடியாகவோ அல்லது 0212215054, 0760503863, 0706899651 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டோ பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்று வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-14,66)

## 15 வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருள்கள்

*உரிமையாளர்களுக்குத் தண்டம் வெதுப்பகம், உணவகத்துக்கும் சீல்*

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்.மாநகர பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருள்களை விற்பனைக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் 15 பேருக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் யாழ். நகர், வண்ணார்பண்ணை, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் உள்ள உணவகங்கள், பேக்கரிகள், வர்த்தக நிலையங்கள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே குறித்த 15 வர்த்தக நிலையங்களும் சுகாதாரச் சீர்கேட்டுடனும் இயங்கியமையும் காலாவதியான பொருள்களை வைத்திருந்தமையும் கண்டறியப்பட்டது.

அதனையடுத்து 15 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக யாழ்.மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு மேலதிக நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது. வர்த்தக உரிமையாளர்கள் 15 பேருக்குமாக 4 லட்சம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது. அத்தோடு சுகாதாரச் சீர்கேடாக இயங்கிய வெதுப்பகம் மற்றும் உணவகத்தை சுகாதாரச் சீர்கேடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை சீல் வைத்து மூடுமாறும் உத்தரவிடப்பட்டது. (அ-ஓ-14-26)

## அமைச்சரவை மாற்றம் ஜனாதிபதியின் முடிவே

*செஹான் சேமசிங்க தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 2

அமைச்சரவை மாற்றம் விரைவில் இடம்பெறுமா, இல்லையா என்பதை ஜனாதிபதியிடம்தான் கேட்க வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் நிதி இராஜாங்க அமைச்சருமான செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொகையில் முதல் கொடுப்பனவு கிடைத்தவுடன் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எங்குமே சொல்லவில்லை. அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்று யாரும் எவரும் எதுவும் சொல்லலாம். யார் என்ன சொன்னாலும் ஜனாதிபதி சொன்னால் மட்டுமே அது உண்மையானதும் தீர்க்கமானதுமான கருத்தாக அமையும். ஏனெனில் அமைச்சரவையை மாற்றும் அதிகாரம் ஜனாதிபதியிடம்தான் உண்டு- என்றார். (அ-ம-22)

## தந்தை செல்வாவின் 125ஆவது பிறந்த தினம்

முல்லைத்தீவு, ஏப். 2

தந்தை செல்வாவின் 125ஆவது பிறந்ததினம் உடையார்கட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

பிறந்ததின நினைவாக கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. அதனைத்தொடர்ந்து 68 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் 30 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட அமெரிக்க நாடுகளுக்கான தலைமை ஒருங்கிணைப்பாளரின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஆனந்தசங்கரி கலந்துகொண்டார். (அ-14,19,213)



## சுன்னாகம் நூலகத்தில் இலத்திரனியல் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 2

சுன்னாகம் பொதுநூலகத்தில் இலத்திரனியல் சேவை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் பொதுநூலகத்தில் காணப்படும் 17 ஆயிரம் நூல்களும் தற்போது இலத்திரனியல் வழங்கும் சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன் கலந்துகொண்டு சுன்னாகம் பொதுநூலகத்தின் முதலாவது வாசகருக்கு இலத்திரனியல் வாசகர் அட்டையை வழங்கி சேவையை ஆரம்பித்து வைத்தார்.

நூலகத்தின் நூலக இரவல் பகுதியில் ஏற்கனவே அங்கத்தவர்களாக உள்ளவர்களும், புதிதாக அங்கத்தவர்களாக இணைந்துகொள்ள விரும்புபவர்களும் இணைந்து கொண்டு இந்த இலத்திரனியல் சேவையைப் பெற்றுப் பயனடையுமாறு சுன்னாகம் பொதுநூலகப் பிரதம நூலகர் ஜெயலட்சுமி சுதர்சன் தெரிவித்தார். (அ- 14,66)

## பஸ் கட்டண முறைகேடு; 1955 க்கு அழையுங்கள்!


கொழும்பு, ஏப். 2

பேருந்துகளில் பயணிகளிடம் பழைய பேருந்துக் கட்டணம் வசூலிக்கப்பட்டால் 1955 என்ற அவசர தொலைபேசி எண்ணுக்கு அழைத்து முறையிடலாம் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எரிபொருள் விலைகுறைப்புக்கமைய குறைந்தபட்ச பஸ் கட்டணம் 30 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய பஸ் கட்டண திருத்தம் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

சில பேருந்துகளில் பழைய கட்டணமே வசூலிக்கப்படுவதாக பயணிகளால் குற்றஞ்சுமத்தப்படுகிறது. எனவே 1955 என்ற அவசர தொலைபேசி எண்ணுக்கு தொடர்புகொண்டு முறையிடலாம் என போக்குவரத்து ஆணைக்குழு தலைவர் ஷசி வெல்கம தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாநகரசபை உறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் அவரது மனைவியின் நினைவை முன்னிட்டு, நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தரம்-5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்களை பாடசாலையின் அதிபரிடம் அண்மையில் கையளித்தார். (அ-ய)



யாழ். மாவட்டச் செயலகமும் மாவட்ட மகளிர் சம்மேளனமும் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வு மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.
இதன்போது சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான விருதுகள் 21 பேருக்கும், சிறந்த பெண் குருதிக் கொடையாளர் விருது ஒருவருக்கும் வழங்கப்பட்டன. (அ-ய-66)



வவுனியா - வேப்பங்குளம் எக்ஸ்போஸ்டீல் ஹாட்வெயர் நிலையத்தின் உரிமையாளரும் சமூகசேவையாளருமான ஆ.சுரேஸினால் அரசமுறிப்பு ஓமந்தை நொச்சிமோட்டைப் பிரதேசத்தில் வசித்துவரும் தெரிவு செய்யப்பட்ட 34 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (அ-ய-110)



புலம்பெயர்ந்து லண்டனில் வசித்துவரும் வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சிவைதியின் 13 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, நல்லைக் கந்தன் தண்ணீர்ப்பந்தல் அமைப்பினரின் உதவும் கரங்கள் செயற்றிட்டம் ஊடாக நல்லூரைச் சேர்ந்த பொருளாதாரத்தில் நலிவுற்ற தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகளும், குறித்த குடும்பங்களில் 10 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் அண்மையில் வழங்கப்பட்டன. (அ-ய-66)

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியை நவமணி தேவி கணபதிப்பிள்ளைக்கு பாடசாலைச் சமூகத்தினரால் மணிவிழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும் வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது.
நிகழ்வில் பாராட்டுரையை வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் ஓய்வுநிலை அதிபர் மு.பாலசுப்பிரமணியம் உட்படப் பலர் நிகழ்த்தினர். (அ-ய-9)






லயன் கழகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட விசுவமடு மேற்கு பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட இலவச கண் பரிசோதனை முகாம் அண்மையில் இடம்பெற்றது. இதில் 750 க்கும் மேற்பட்ட பார்வைக்குறைபாடுள்ளோர் இனங்காணப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (அ-ச-113)



வவுனியா பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு வவுனியா ஸ்ரீநகர் சனசமூக நிலைய வளாகத்தில் அண்மையில் இடம் பெற்றது. (அ-ச-110)



மன்னார் - பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. (அ-ய-60)



வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு [illegible] சிறுவர் பூங்கா வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் [illegible] தொழில் முயற்சியாளர்களும், சமாசத்தில் நீண்டகாலமாக சேவையாற்றும் பெண் சாதனையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். (அ-ய-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தினால் பொருளாதாரத்தில் நலிவுற்ற 60 மாணவர்களுக்கு முதலாம் தவணைக்குரிய கல்வி உதவித் தொகையும் உலர் உணவுப் பொதியும் அண்மையில் வழங்கப்பட்டன.
அத்துடன் மாணவர்களின் மதிப்பீடுகள் மீளாய்வு செய்யப்பட்டு அவர்களுக்கான வழிகாட்டலும் இடம்பெற்றது. (அ-ய-60)



வரணிக் குடும்ப முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வும் கௌரவிப்பும் வரணிக் குடும்ப இணைப்பாளர் திருமதி லோகிதன் கேதிகா தலைமையில் வரணி கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (அ-ய-159)




கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் புலமைச் சாதனைகள் கௌரவிப்பு நிகழ்வு அதிபர் க.மகிந்தன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கடந்த 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
புலமைச் சாதனையாளர்கள் நினைவுப் பரிசில்கள் மற்றும் துவிச்சக்கரவண்டி வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ-ய-159)



படங்கள்: ஐ.சிவசாந்தன்







யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய பங்குனி குளிர்த்தி வெள்ளி ரத மஞ்சள் பால்குட பவனி பக்திபூர்வமாக அண்மையில் இடம் பெற்றது. (அ-ய)



வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின் 170ஆவது ஆண்டு விழாவும் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வும் மேற்படி வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. (அ-ய)

## ஆண்டு நிறைவும் கலை விழாவும்





கொக்குவில் - பொற்பதி அறிவாலயத்தின் 11ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் 12 ஆவது ஆண்டு கலை விழாவும், சரஸ்வதி முன்பள்ளியின் 38 ஆவது ஆண்டு கால்கோள் விழா மற்றும் கலை விழா பொற்பதி அறிவாலயத் தலைவர் வாமதேவன் தலைமையில் கொக்குவில் பொற்பதி அறிவாலயக் கலாசார மண்டபத்தில் கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கடந்த ஆண்டு நடைபெற்ற தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 19 மாணவ மாணவிகளும், க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்ற மூன்று மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் கற்றலை ஊக்குவிக்கும் வகையில் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து பொற்பதி அறிவாலயத்தால் மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் கல்விக்கான உதவித் திட்டமாக ஒரு லட்சத்து 38 ஆயிரம் ரூபா நிதி உதவியும், பொருண்மியம் நலிவுற்ற இரண்டு குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டமாகத் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.
மேற்படி நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மற்றும் சிங்கள மொழிப் பிரிவு மாணவர்களின் இருபதுக்கும் மேற்பட்ட கலைநிகழ்வுகள் நடைபெற்றன. (அ-ய-66)



## சேவை நலன் பாராட்டு விழா

மன்னார் மாவட்ட செயலகத்தில் பணியாற்றி இடமாற்றலாகிச் சென்ற மற்றும் ஓய்வு பெறும் அலுவலர்களுக்கான சேவைநலன் பாராட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது.
மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் மன்னார் மாவட்டச்செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல், மேலதிக மாவட்டச் செயலர், பிரதம கணக்காளர், சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளர், மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (அ-ச-60-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

PointPedro Road கல்வியங்காடு 3ம் கட்டை லேனில் 200m தூரத்தில் 2 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(CS24220)(J-1) **077 601 1135**

## வாகன விற்பனை

யாழ்ப்பாணத்தில் சிவப்பு நிற 2016 ஓட்டோ விற்பனைக்கு. லீசிங் வசதி செய்து தரப்படும்.

(ACO CS 23820)(K-1)

**077 644 3269, 077 714 8173**

## வேலைக்கு ஆள்கள் தேவை

பருத்தித்துறை வீதி கட்டப்பிராயில் அமைந்துள்ள கடைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை.

**076 320 1987**

## சிற்பங்கள் விற்பனைக்குண்டு

இந்திய சிற்பக் கலைஞரால் கையால் செதுக்கப்பட்ட சிற்பங்கள் விற்பனைக்குண்டு.

**077 375 8998**

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில், பிரதான நகர் பகுதியில் A9 றோட்டில் 7 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் NGOS பணியாளர்கள் குவாட்டஸ் போன்றவை வரவேற்கத்தக்கது. (ACOCS 23825)(K-1)

தொடர்பு : **077 507 9832**

## பணியாளர் தேவை

பிரபல சுற்றுலா விடுதிக்கு நிர்வாகத் திறமையுள்ள இரவு நேர **முகாமையாளர்** தேவை.

(cs 49809) (N-1)

**077 722 2715**

## வீடு வாடகைக்குத்தேவை

யாழ்.மாநகரசபையை அண்டிய பிரதேசத்தில் 03 பேர் கொண்ட சிறிய குடும்பமொன்றுக்கு வீடு வாடகைக்குத்தேவை.

(தரகர் தேவையில்லை)

(cs 22538) (2-6)

**077 385 1429**

## பணியாளர் தேவை

இலங்கையின் பிரபல்யமான கம்பனிக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

**அணித் தலைவர் (Team leader)**
**குழுத்தலைவர் (Group leader)**

**076 711 2102** (CS/22582)(AH-1)

## வீடு வாடகைக்கு

தாவடி மானிப்பாய் வீதி முகப்புகொண்ட தாவடி பிள்ளையார் கோவில் அருகில் வீடு வாடகைக்கு.

**077 993 5844**

## வாடகைக்கு உண்டு

பூட்சிற்றி, காட்வெயர், விவசாய உள்ளீடுகள், பான்சி கடை, கால்நடை தீவனம், ஒட்டுவேலை நிலையம் போன்றவை அமைக்கக்கூடிய 1000 சதுர அடி கொண்ட இருபக்க பிரதான வீதிகளை முகப்பாக கொண்ட பிரதான சந்தைச் சந்தி தெல்லிப்பளையில் நீண்டகால அடிப்படையில் கடைத்தொகுதி வாடகைக்குண்டு.

**077 572 3474**

## காணி தேவை

மல்லாகம் - மாவிட்டபுரம் கே.கே.எஸ் (KKS) வீதி, முகப்புடன் கூடிய குறைந்த பட்சம் 20 பரப்பு நிலப்பரப்புடன் கூடிய காணி தேவை.

**077 736 0353**

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சித்திரைப் புத்தாண்டு வரை

# ஜவுளிப் பண்டிகை

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான
தலைசிறந்த ஆடைகள்

- பட்டுச்சாறிகள்
- கொட்டன் சாறிகள்
- சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- டொப், புரொக்
- சேட் மற்றும்
- சிறுவர் சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகள்.



**இது பிரமாண்ட ஜவுளித்துறையின் சாம்ராஜ்யம்**

# இந்தியன் செலக்ஷன்

காலம்: 17.03.2023 முதல் 14.04.2023 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

## வீடு தேவை

யாழ்ப்பாணம், கொக்குவில், கோண்டாவில், தாவடி, நல்லூர், நாயன்மார்கட்டு, சுண்டுக்குளி, கச்சேரி, திருநெல்வேலி கௌரவமான சுற்றாடலில் 2 பரப்புக் காணியில் வீடு விலைக்கு வாங்க தேவை.

**077 247 4714 / 077 247 4740**

## விற்பனைக்கு




எம்மிடம் பலவிதமான டொலி, ராக்கைகள், ஏணி வகைகள், வீடு, அலுவலகத்திற்கு உகந்த பொருட்கள் விற்பனைக்கு உண்டு.

ஏனைய பொருட்களை பார்வையிட
**www.jtc.lk**
இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்
மேலதிக விபரங்களுக்கு (K-1)

Fathima - 0777721552
Nithyanandan - 0755279488

## கொப்பறா தேவை

கொப்பறா கொள்முதல் செய்யப்படும். கோயில் கொப்பறா, உடைத்த தேங்காய் கொள்முதல் செய்யப்படும். (CS/22384)(AH-1)

**077 171 2336**

## காணி விற்பனைக்கு

அரியாலையில் கண்டி வீதியிலிருந்து 500m தூரத்தில் ஆள்காட்டி வீதியில் 26.5 பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்கு உண்டு. (CS49811)(K-1)

தொடர்பு : **077 691 3440**

## வேலைவாய்ப்பு

தனியார் அலுவலகம் ஒன்றில் பணிபுரிவதற்கு பெண் ஊழியர்கள் தேவை.

தகைமைகள்:
G.C.E. O/L, A/L, Computer Knowledge

இல. 338, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**077 448 1790 / 076 642 7915**

## Join Our Jaffna Team - Seeking Accounting Professionals/ Executives!

Are you an accomplished accounting professional seeking a new and exciting challenge? Are you passionate about helping businesses thrive and achieve success? If this sounds like you, we want to connect with you!

We are a leading accounting firm in the UK, and we are expanding our reach to Sri Lanka. We are currently seeking exceptional accounting professionals and executives to join our team in Jaffna and help us maintain our outstanding service to clients.

**To be considered for this remarkable opportunity, you should possess:**

- Qualified / Part-qualification or currently studying in a related accounting field
- Previous experience in related fields (preferred)
- Excellent communication skills and the ability to collaborate effectively in a team
- Strong analytical skills and keen attention to detail
- A commitment to delivering high-quality work punctually and within budget



**In return, we offer the following:**

- Competitive salary and benefits package
- Opportunities for career growth and development
- A supportive and collaborative work environment
- Exposure to a broad range of clients and industries

If you're prepared to elevate your career and become part of a dynamic, growing team, we want to hear from you! Please submit your CV and a cover letter explaining why you would be an excellent fit for our team.

(CS 24229)(K-1)

**Working hours: 12.00 PM to 9.00 PM (Monday - Friday)**
**Office Location - Jaffna.**
**Contact: admin@agatax.co.uk**

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

**உசன் காட்டுவளவுக் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமான ஆதனத்தை 30 வருடகால குத்தகை வழங்குவது தொடர்பான அறிவித்தல்**

**Trust ordinance இன் பிரிவு 38(1)** இன் கீழான விண்ணப்பம்
குகதாசன் விமலதாஸ் (முகாமையாளர்
உசன் காட்டுவளவு. கந்தசாமி கோவில்) உசன்.
மிருசுவில்.

- மனுதாரர்

வழ. இல: நானாவிதம் / 246/2023

எதிர்

1. குகதாசன் கமலதாசன்
2. விமலதாஸ் சிறிகண்ணன்
3. விமலதாஸ் யதுகுலன்
4. சுவாமிநாதன் சற்குணநாதன்
   உறுப்பினர்கள்
   உசன் காட்டுவளவு கந்தசாமி கோவில்
   நிர்வாகசபை

- எதிர்மனுதார்கள்

உசன் காட்டுவளவு கந்தசாமி கோவிலுக்கு சொந்தமானதும் விடத்தற்பளையில் அமைந்திருப்பதுமான "விக்றோறியா டிறமோர்" என்னும் ஏக்கர் 175 ரூட் 01 பேட்ஸ் 32 விஸ்தீரணம் கொண்ட காணியினை Rajeswary Agro & Diary (PVT) Ltd இற்கு வழங்குவதற்கு குறித்த கோவில் நிர்வாக சபை உறுப்பினர் அனைவரும் ஏகமனதாக முடிவுசெய்து அதற்கு அனுமதி கோரி நாணாவிதம் /246/2023 என்ற வழக்கினை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனராகையால் இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதியோ அதற்கு முன்னரோ சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் தோன்றி மேற்குறித்த வழக்கில் அதனை தெரிவிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறீர்கள்.


2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
சாவகச்சேரி

(CS/23999)4,6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.01.1944

மறைவு
26.03.2021

## அமரர் முத்தையா செல்லத்துரை

(ஓய்வூதியர் – பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

திதி: பங்குனி வளர்பிறைத் துவாதசி

நீங்கள் வையகம் விட்டு வானகம் போயினும்
எம் வாழ்நாள் உள்ள வரை
உம் முகம் மறவாதிருப்போம்.


சாயுடை, மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

(CS 25158) K-1

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு
24 - 04 - 1945



உதிர்வு
21 - 03 - 2023

## திரு. மார்க்கண்டு மாணிக்கசிங்கம் (சற்குணம்)

(முன்னாள் உரிமையாளர் துர்க்கா புடைவைக்கடை)

யாழ். நீராவியடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு மாணிக்கசிங்கம் அவர்கள் கடந்த (21.03.2023) செவ்வாய்க்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நாகபூசணி தம்பதிகளின் சிரேஸ்ட மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி துரைசிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பூமணி அவர்களின் பாசமிகு கணவரும், பிரதாப், பிரியா, ராம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜீத்தா, ஜெய்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரியா, ஜலா, ஏட்ரியன் ஆகியோரின் பாசமிகு பேரனும்,சந்திரன், தனலக்சுமி, விநாயகமூர்த்தி, யோகலக்சுமி, ஜெயசுதந்தி, காலஞ்சென்ற ஜெயதேவி, ஜெயதேவன், ஜெயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கௌரி, உலகநாதன், சுகந்தி, தேவன் இளங்கோ, சிவானந்தன், மதிவதனி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை 10.30 AM @ BARNET MULTICULTURAL COMMUNITY CENTRE, ALGERNON ROAD, HENDON, LONDON, NW4 3TA. நடைபெற்று பூதவுடல் 1.45 PM @ HENDON CEMETERY & CREMATORIUM, HOLDERS HILL ROAD, LONDON, NW7 1NB இல் தகனக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரன் - சகோதரன் (UK) : +447956556160
தேவன் - சகோதரன் (UK) : +447887576146
மூர்த்தி - சகோதரன் (SL) : +94777490250

தகவல்:
குடும்பத்தினர்

(CR 49807) (K-1)


## பணியாளர்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள
பல்பொருள் அங்காடிக்கு (சுப்பர் மார்கட்)
பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. பொதி செய்பவர்கள்
2. சமையல் வேலை
3. பொருட்களை Trackil க்கு அடுக்குபவர்கள்

வயது எல்லை - 20 தொடக்கம் 35 வயதுக்குட்பட்ட ஆண் / பெண் இருபாலாரும்

077 343 4174

## பெண் வேலையாள் தேவை

ரியூசன் சென்ரர்க்கு Clerk வேலைக்கு தேவை (பெண்கள் மட்டும்) யாழ்ப்பாணத்தை அண்மித்தோர் விரும்பத்தக்கது.

இடம்: Jaffna T.P.: 077 293 5265

## லொறி விற்பனைக்கு

புத்தம் புதிய Ashok Leyland Lorry
விற்பனைக்கு உண்டு
(Model 2518 - 10 Wheeler)

தொடர்பு : 077 731 0097


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி கோணேஸ்வரன்
## சிவகௌரி



காலம் இன்னும் இருக்கையிலே
காலன் அவன் முந்திவிட்டான்
ஓலம் இடும் பிள்ளைகளுக்கு
ஒளிந்து நீ சென்று விட்டாய்
கோலம் போல் இருந்த வாழ்வு
கொள்ளையிட்டுப் போன பின்னே
ஆல மரமொன்று அடியோடு
- சாய்ந்ததாய்
ஆடித்தான் போய்விட்டோம்
- வழியின்றி நாமே

குடும்பத்தினர்.
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.


பிறப்பு
20.10.1976

இறப்பு
02.04.2020

(cs 49796)(N-1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 • 07 • 1948



மறைவு
13 • 04 • 2022

## சபா தியாகராஜா

(ஓய்வுபெற்ற பிராந்தியக் கணக்காளர் – இ.போ.ச)

திதி:- வளர்பிறை துவாதசி (02.04.2023)

ஆண்டொன்று ஆனதுவோ - எங்கள்
அப்பாவின் அன்புமுகம் கண்டு
அரவணைக்கும் உங்கள் குரல் இழந்து
ஆர்ப்பரிக்கும் உங்கள் உபசரிப்பு இன்றி
களையிழந்து போயிருக்கிறது எங்கள் வீடு.
உங்கள் நினைவுகளால் மட்டுமே இந்த
ஈராறு மாதங்களின் ஒவ்வொரு
கணங்களும் கடந்தன.
வாழ்வை உணர்ந்தோம்
உங்கள் வழியில் இனி எங்கள் வாழ்வின்
அனைத்துப் படிகளும் அமையும்
நல்லூரான் காலடியில் நீண்ட
நிம்மதி உறக்கம் கொள்ளுங்கள் அப்பா
உங்கள் நினைவோடு என்றும் நாங்கள்.

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

271/1,நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 222 6281

(CS/24240)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நானோ ரோபோ' உதவியால்

# இன்னும் 7 ஆண்டுகளில் மனிதர்களுக்கு சாகாவரம்!

## விஞ்ஞானி ரே குர்ஸ்வேல் தெரிவிப்பு

வொஷிங்டன், ஏப். 2

இன்னும் 7 ஆண்டுகளில் நானோ ரோபோ உதவியுடன் மனிதர்கள் சாகா வரம் பெறுவர் என்று கூகுள் நிறுவன முன்னாள் விஞ்ஞானி ரே குர்ஸ்வேல் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததா வது: கடந்த 2005ஆம் ஆண்டில் வெளிவந்த 'ஹதி சிங்குலாரிட்டி இஸ் நியர்' என்ற புத்தகத்தில் 2030ஆம் ஆண்டுக்குள் மனிதர்கள் நிரந்தர வாழ்க்கையை அனுபவிக்க தொழில்நுட்பம் அனுமதிக்கும் என கூறியிருந்தேன். தற்போது மரபியல், ரோபோடிக்ஸ், மற்றும் நானோ தொழில்நுட்பத்தில் முன்னேற்றங்கள் மற்றும் விரிவாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. விரைவில் நரம்புகள் வழியாக செலுத்தப்படும் 'நானோ போட்ஸ்' எனப்படும் மிக நுண்ணிய ரோபோக்கள் வரப்போகின்றன.

இவை 50 முதல் 100 நானோ மீற்றர் அகலம்தான் இருக்கும். முதுமை, உடல்நல பாதிப்பில்



இருந்து மனிதர்களைக் காக்கவும், உடலில் உள்ள செல்களைப் பழுது பார்க்கவும் நானோ ரோபோ உதவும் - என்றார். (ம)

ஆறு வாரத்தில் மட்டும்

# 5 லட்சம் பவுண்டுகள் பிரிட்டன் பிரதமர் செலவு

லண்டன், ஏப். 2

பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக். ஆறு வாரத்தில் மட்டும் விமான பயணத்துக்காக 5 லட்சம் பவுண்டுகள் செலவிட்டுள்ளார் என வெளியாகிய தகவலால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

ஈஸ்டர் விடுமுறைக்கு செல்லவிருக்கும் நிலையில், தற்போது ரிஷி சுனக் பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் எகிப்து, பாலி, லாத்வியா மற்றும் எஸ்டோனியா ஆகிய நாடுகளுக்கு அரசுமுறை பயணமாக சென்றிருந்தார். மொத்தம் 6 வாரங்கள் முன்னெடுக்கப்பட்ட இந்த பயணங்களுக்காக தனியார் விமான சேவையை ரிஷி பயன்படுத்தியுள்ளார். இந்தநிலையில் மக்கள் வரிப்பணத்தில் வீண் செலவுகளை ஏற்படுத்துவதாக ரிஷி சுனக் மீது கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்தப் பயணச் செலவு இலங்கை மதிப்பில் சுமார் 17 கோடி ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# புச்சா படுகொலைகளை உக்ரைன் மன்னிக்காது

## ஷெலன்ஸ்கி ஆவேசம்

கீவ், ஏப். 2

புச்சா நகரில் ரஷ்யா நிகழ்த்திய படுகொலைகளை ஒருபோதும் மறக்க முடியாது. அந்தப் படுகொலைகளுக்காக ரஷ்யாவை உக்ரைன் மன்னிக்காது என்று அந்தநாட்டு அதிபர் ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம், உக்ரைனின் தலைநகர் கீவ் அருகில் உள்ள புச்சா நகரில் 400க்கும் அதிகமான உக்ரைனியர்கள் சடலங்களாக மீட்கப்பட்டனர். அங்குள்ள தேவாலயத்துக்கு அருகே 45 அடி நீளத்துக்குச் சவக்குழி தோண்டப்பட்டு, உடல்கள் புதைக்கப்பட்டிருந்த காட்சி அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தின் செயற்கைக்கோள் எடுத்த ஒளிப்படத்தில் பதிவாகியிருந்தது. இந்தச் சம்பவம் உலகமெங்கும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் ரஷ்யப் படைகளால் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டவர்கள் என்று உக்ரைன் குற்றஞ்சாட்டியது. இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டு ஓராண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது: 'புச்சாவில் நிகழ்த்திய படுகொலைகளுக்கு உக்ரைன் ஒருபோதும் ரஷ்யாவை மன்னிக்கவே மன்னிக்காது. 33 நாள்கள் அந் நகரைப் பிடித்துவைத்திருந்த ரஷ்யப் படைகள் ஆயிரத்து 400 பேரை கொலை செய்துள்ளன. கொல்லப்பட்டவர்களில் 37 பேர் குழந்தைகள். 175 பேர் வதை கூடங்களில் இருந்து மீட்கப்பட்டனர். அந்தப் படுகொலையை நிகழ்த்திய ஒவ்வொருவரும் தண்டிக்கப்படுவர். ரஷ்யா அங்கே நிகழ்த்தியது இன அழிப்பு. ஒரு போர்க்குற்றம்' - என்றார். (ம)


## வேலைக்கு ஆள் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றின் கைகடியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு நன்கு சமையல் அறிந்த பெண் சமையல்காரர் தேவை. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் வருகின்ற திங்கட்கிழமை முதல் தொடர்பு கொள்ளலாம். (CS 24232)(K-1)

தொடர்பு: 077 873 3401

## காணி விற்பனைக்குண்டு

பூநகரி பரமன்கிராய் வெட்டுக்காடு என்ற இடத்தில் 23 1/2 ஏக்கர் தென்னை பயிரிடப்பட்டும் 395 மர முந்திரிகை நாட்டப்பட்டதும். ஆடுவளர்ப்புக்கு உரிய கொட்டகையின் தூண்களும் கொங்கிறீற் தளமும் போடப்பட்டதுமான உறுதிக்காணி விற்பனைக்குண்டு. இன்னும் 2 வருடத்தில் பயன் பெறலாம்.

தொடர்புக்கு: 077 602 1799

(CS 49800)(K-1) 076 236 5584, 076 546 9030

## சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2023

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 22.04.2023 அன்று மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும். யாப்பின் திருத்தப்பட்ட உறுப்புரை 05.09 இற்கமைய 31.01.2023 க்கு முன்னர் உறுப்புரிமை பெற்றோரும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோருமே இக்கூட்டத்தில் கலந்து கொள்ள உரித்துடையவராவர்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டிய பிரேரணைகள் 13.04.2023 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி.

திரு.லோ. துஷிகரன் செயலாளர் (CR 39589)(A-1)

## உடன் வேலைவாய்ப்புக்கள்

வவுனியாவிலுள்ள தொழிற்சாலையின் தோட்டத்தில், கீழ் வரும் வேலைக்கு குடும்பமாகத் தங்கியிருந்து வேலை செய்ய வேலையாட்கள் உடன் தேவை.

01. தோட்ட வேலை.
02. கால்நடை பராமரிப்பு.
03. உழவு இயந்திர சாரதி.

- குடும்பமாகத் தங்கியிருந்து வேலை செய்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.
- வேலைக்கேற்ப சம்பளம் தரப்படும்.
- வயது : 40-55

மேலதிக விபரங்களுக்கு....

0778054874, 0742565421

## விற்பனைக்கு

மரவள்ளி சீவும் மிசின் வக்கூம் கிளீனர் (புதியது) விற்பனைக்குண்டு.

077 403 9786

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் 10 அறைகளுடன் (3 மாடி) வீடு வாடகைக்கு (நிறுவனங்கள் விரும்பத்தக்கது). மேலும் 4 or 5 பேருக்குரிய வீடும், மாணவர்கள் தங்கக்கூடிய அறைகள், உல்லாசப் பயணிகளுக்குரிய ஆடம்பர வீடு மற்றும், அறைகளும் மற்றும் களஞ்சிய சாலைகளும் எம்மிடம் உண்டு.

077 34 500 39, 077 34 800 39

## கட்டடம் வாடகைக்கு

சாவகச்சேரி நகரில் A-9 வீதியில் பிரதேச செயலகத்திற்கு முன்பாக சகல வசதிகளுடன் கூடிய 2500 சதுர அடி கொண்ட 3 மாடி கட்டடம் வாடகைக்கு உண்டு.

(வங்கி, நிறுவனங்கள், காரியாலயங்கள், தனியார் மருத்துவ நிலையங்கள், வியாபார நிறுவனங்கள், பல்பொருள் அங்காடி நடத்துவதற்கு உகந்தது.

மேலதிக விபரங்களுக்கு:

0044 754 383 7830


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு
தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் வீடு வாடகைக்கு உண்டு.
077 403 9786
(CS 242483)(J-1)

## கடை வாடகைக்கு தேவை
யாழ். நகரை அண்டிய பகுதியில் கடை வாடகைக்குத்தேவை.
076 682 9867

## பதவி வெற்றிடம்
நல்லூரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தங்குமிட விடுதியில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.
- வரவேற்பாளர்(ஆண் & பெண்)
- விடுதி பணியாளர்கள் Room Boys (ஆண்)
- சமையலாளர்
- விடுதி காப்பாளர் (இரவு& பகல்)

முழுமையான சுயவிபரக்கோவையோடு விண்ணப்பிக்கவும்.
மின்னஞ்சல் முகவரி: jamunavillalk@gmail.com
077 378 8795
(CR39584)(J-1)

## VACANCIES
**Office Administrator**
**Company Sales Executive**
- Minimum with 5 years experience
- Fluency in Sinhala, Tamil + English
- Two Non Related Referees to sign as Bond (Sales Executive)
- To Keep a Deposite of Rs-500,000.00 (Sales Executive)
- Should be able To Travel All Island.
- Two wheeler - Lap Top - Smart Phone A MUST
- Computer / Social Media literacy A MUST

Forward your CV / Bio Data to passconsultinglk@gmail.com

## வாகனம் தேவை
ALTO 800 Suzuk I
வாகனம் வாங்குவதற்குத் தேவை.
077 730 2343
(CS 24224)(N-1)

## வீடு வாடகைக்கு உண்டு
கோண்டாவில டிப்போவுக்கு முன் ஒழுங்கை கலைமகள் வீதியில் நல்ல வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். வாடகை நேரில் பேசலாம் (அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு: 077 728 0268

## பட்டயக் கணக்காளர் தேவை
தெல்லிப்பளையில் இயங்கிவரும் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த, கணினி அறிவுடைய பட்டயக் கணக்காளர் தேவை.
(சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)
077 770 0441
(CS24249)(J-1)

## வீடு வாடகைக்கு உண்டு
யாழ். பல்கலைக்கழகத்திற்கு பின்புறம் வளாக வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.
077 847 7603
(CS24250)(J-1)

## பெண் வேலையாள் தேவை
கொடிகாமத்தில் இயங்கும் தையல் நிலையத்திற்கு தைக்கத் தெரிந்த பெண்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 076 9318 695
(CR 39585)(J-1)

## உடன் தொடர்பு கொள்ளவும்
மல்லாவியில் வசித்துவரும் ரேவதி (கணவர் கால் சுகயீனம் உள்ளவர்) சூட்டி அல்லது அங்கிள் ஆகியவர்களை உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0772585408
0771999202 (அன்றி)
(CS 10940)(K-1)

## ஆரம்பகால திருமண சேவை
01. கனடா மணமகன் உள்ளது P.R.O
02. அவுஸ்திரேலியா மணமகன் உள்ளது P.R.O
03. லண்டன் மணமகன் உள்ளது P.R.O
04. உள்நாட்டு குறிப்புகள் உள்ளன.
05. 12.02.1994 ( V ) மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை (உள்நாடு).
06. 19.11.1986 ( V ) வீடியோ உரிமையாளர். கிளிநொச்சி. மணமகனுக்கு மணமகள் தேவை (உள்நாடு).

திருமணச் சேவைக்கு பணிப்பெண் (வேலையாள்) சுன்னாகம். மாவிட்டபுரம் உட்பட்டது.
தொடர்பு: 077 52 89 851
(CS 24254)(A-1)

## காணி விற்பனைக்கு
"A - 9 வீதியில் இரண்டு ஏக்கர் உறுதிக் காணி விற்பனைக்கு உண்டு. (எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் களஞ்சியசாலை அமைப்பதற்கு தகுந்தது)
(CS 49800)(K-1)
தொடர்புகளுக்கு: 077 735 4470

## காணி விற்பனைக்கு
கந்தரோடை. சுன்னாகம் பகுதியில் வீடு கட்டுவதற்கு, தென்னை பயிர் செய்வதற்கு அல்லது பண்ணை அமைப்பதற்கு சிறந்த இயற்கை சூழலில் அமைந்த நிலக்காணி (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 200 m. சுன்னாகம் நகரம் 1.5 Km உடுவில் மகளிர் கல்லூரி 2 km) விற்பனைக்கு.
தரகர்கள் இல்லை. தகவல் உரிமையாளர்.
தொடர்பு: 076 830 7424 / 077 400 2382
(CS 24225)(N-1)


## கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைதாகினர்!

மன்னாரில் வெவ்வேறு பகுதிகளில் கேரளக் கஞ்சாவுடன் இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர், மன்னார் கொன்வன்ற் வீதியில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது நபரொருவரிடம் 6 கிலோ 30 கிராம் கேரளக் கஞ்சாவும் தலைமன்னார் வீதியில் வைத்து வாகனமொன்றிலிருந்து 10 கிலோ 60 கிராம் கேரளக் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இருவரையும் மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ-14. 213)


உங்கள் நிலம் அறுதியாகப்போகிறதா?
விரைவாக சொத்துக் கடனுக்கு அழையுங்கள்.
076-2488353


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1956 | 2023 |
| 06 | 04 |
| 27 | 01 |

# திருநாவுக்கரசு பஞ்சலிங்கம்

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர் **திருநாவுக்கரசு பஞ்சலிங்கம்** அவர்கள் நேற்று (01.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு தவமணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் மனோன்மணி தம்பதிகளின் மருமகனும், பவானியின் அன்புக் கணவரும், சரஸ்வதி, மகாலிங்கம், கணேசலிங்கம், யோகேஸ்வரி, சாந்தி, ராணி, காலஞ்சென்ற சாந்தலிங்கம் மற்றும் சத்தியலிங்கம், தனலட்சுமி, தவபாக்கியலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் சகோதரரும், சௌந்தரராஜன், பசுங்கிளி, பாலகிருஸ்ணன், நடேஸ்வரன், சுதர்சினி, கந்தசாமி, அம்பிகைபாலன், சாமுண்டீஸ்வரி, கணேசலிங்கம், வசந்தி, ஜெயந்தி, தர்மசீலன் ஆகியோரின் மைத்துனரும், கிரிதரன், நித்தியமலர், ரகுதரன், கரிதரன், தேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதனரூபி, கோகுலசுதன், சுரேஸ் ஆகியோரின் மாமனாரும், சனுஸ்கா, அர்ஷியா, கிருத்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள

ராமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை | தொடர்புகளுக்கு: 0773455416 | தகவல்: குடும்பத்தினர்



# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் சுபகிருது வருஷம் பங்குனி மாதம்
**10 ஆம் நாள் (24.03. 2023) வெள்ளிக்கிழமை**
சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவர்
**ஹார்கியகோத்திரம் பிரம்மஸ்ரீ**
**சு.சுந்தரசர்மா (கண்ணன் ஐயா)**

**அவர்களுடைய ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்**
- **02.04.2023 - ஞாயிற்றுக்கிழமை - 10.30 மணிக்கு தசாகம்**
- **03.04.2023 - திங்கட்கிழமை - ஏகோதிஷ்டம், மாசிகம்**
- **04.04.2023 - செவ்வாய் - சபிண்டீகரணம்**
- **05.04.2023 - புதன்கிழமை - கிரஹயக்ஞம்**

மேற்படி தினங்களில் நடைபெறும் கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு 05.04.2023 புதன்கிழமை இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

கலட்டிப் பிள்ளையார்கோவில்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
**குடும்பத்தினர்.**

077 716 8656, 077 341 8285, 021 226 3507
(cs 22946) N - 1

# மரண அறிவித்தல்
## திருமதி பூலோகம் நடராஜா



யாழ்ப்பாணம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூலோகம் நடராஜா நேற்று முன்தினம் (31.03.2023) வெள்ளிக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி தங்கச்சி அம்மா தம்பதியினரின் இரண்டாவது மகளும் கணவதிப்பிள்ளை நடராஜாவின் மனைவியும், ஜோகநாதன்(பெறாமகன்), ரவிந்திரா, குலேன்திரா, கமலேன்திரா, சர்வேந்திரா, ஜெயந்தி, ஆகியோரின் அன்புத் தாயாரும், மருமகன், மருமகள்கள் மற்றும் பேரப்பிள்ளைகள் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2023) திங்கட்கிழமை துவாரகை வீதி , கோண்டாவில் வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக பிற்பகல் 2.00 மணியளவில் கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு , கோண்டாவில்.
**தகவல்:**
**நடராஜா குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்ப்பாணம், கரணவாய் தாமோதரா வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் அன்ரன் சதீஸ் கலந்துகொண்டு மாண வர்களுக்கு பதக்கம் அணிவித்து கௌரவித்தார். (அ-ச)

## 'கூடி வாழ்வோம்' நாடக நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 2

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் சந்திரிகா தர்மரட்ணம் எழுதிய 'கூடி வாழ்வோம்' நாடக நூல் வெளியீட்டு விழா, கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் நூலை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வெளியிட்டு வைக்க நூலின் முதற்பிரதியை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் வ.சி.குணசீலன் பெற்றுக்கொள்ளவுள்ளார். (அ-14.66)

## திருமுறைவிழா

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில், திருமுறைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் கந்தர்மடத்தில் அமைந்துள்ள பேரவையின் நடராஜர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ.சக்திகிரீவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் இசைக்கலைமணி சிவஸ்ரீ விஸ்வப்பிரசன்ன சிவாச்சாரியார் குழுவினரின் பண்ணிசைக் கச்சேரியும், கலைஞர்களுக்கான விருது வழங்கலும் இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-14.66)






## 'ஜோதி ஆலயம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 2

பண்டிதர் சைவப்புலவர் பொன்.சுகந்தனின் தாயாரான பொன்னம்பலம் சோதிமலர் ஞாபகார்த்தமாக அவரது வரலாற்று ஆவண நூலான 'ஜோதி ஆலயம்' நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பொலிகண்டியிலுள்ள பாலாவியில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வு ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## புளியம்பொக்கணை பொங்கல் பாதுகாப்பில் பொலிஸார்

வரலாற்றுச் சிறப்புமிக்க கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்புப் பணியில் பொலிஸார் ஈடுபடவுள்ளனர்.



புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி சிறப்பாக இடம்பெறவுள்ளது. பொங்கல் உற்சவத்துக்கு அதிகளவான பக்தர்களின் வருகை எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கமைய மக்களின் பாதுகாப்புக்காக 500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் சிவில் மற்றும் சீருடையில் கடமையில் அமர்த்தப்படவுள்ளனர் என தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்தார். (ச-113)

## ஓவியக்கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.2

அபயம், சிவபூமி ஆகியவற்றுடன் தூமி அமையம் இணைந்து நடத்தும் போதைப்பொருள் விழிப்புணர்வு ஓவியக்கண்காட்சி 'விழித்தவரெல்லாம் பிழைத்துக்கொள்வர்' எனும் கருப்பொருளில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.வட்டு இந்துக் கல்லூரி சோமசுந்தரப் புலவர் அரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் திருமதி வதனி தில்லைச்செல்வன் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி நோபேட் உதயகுமார் சிறப்பு விருந்தினராக சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எமது...

எமது இந்தப் போராட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்படவேண்டும். மக்கள்தான் கிளர்ந்தெழுந்து போராட வரவேண்டும் -இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

சங்கானை பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெடுக்குநாறிமலை ஆலய இடித்தழிப்புக்கு எதிராக வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் தொடர்ச்சியாக இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம். இவ்வாறு தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும். அப்போதுதான் அவை மக்கள் மயப்படுத்தப்படும். இப்போது போராட்டங்களே அருகிச் செல்லும் நிலைமைதான் காணப்படுகின்றது. 2001ஆம் ஆண்டு பொங்குதமிழ் எழுச்சியிலேயே பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றார்கள். அது எப்படி பல்கலைக்கழக மாணவர்களால் சாத்தியமாக்கப்பட்டது என்பதைப்பார்க்கவேண்டும். வீடு வீடாகச் சென்று பொங்கு தமிழுக்கு மக்கள் ஆதரவை திரட்டியமையால் சாத்தியப்பட்டது.

போராட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்படும்போதுதான் அவை வெற்றியடைய முடியும். இதனை நாங்கள் செய்யத்தவறுகின்றோமோ என்று எண்ணத்தோன்றுகின்றது. இன்று இந்த இடத்தில் நடைபெறும் போராட்டத்துக்கு நூற்றுக்கணக்கானவர்களே வந்திருக்கின்றார்கள். வட்டுக்கோட்டையில் பல ஆயிரம் இன உணர்வாளர்கள் இருந்தாலும் அவர்கள் வரவில்லை. மக்களுக்கு எங்களுடைய போராட்டங்களின் தாற்பரியங்களை எடுத்துச் சொல்வதன் ஊடாகத்தான் அவர்களை அணிதிரட்டமுடியும்.

நாங்கள் கடந்த பத்தாண்டு காலமாக அறவழியில் இவ்வாறு சிறு சிறு போராட்டங்களை நடத்துகின்றோம். இப்போது கூட குருந்தூர் மலை, கன்னியா வெந்நீர் ஊற்று, வெடுக்குநாறிமலை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை, கச்சதீவு புத்தர் சிலை என எல்லாவற்றுக்கும் திட்டுத்திட்டாகப் போராட்டம் நடத்தியிருக்கின்றோம். அவை வெற்றியடைந்துள்ளனவா? நாம் காத்திரமான போராட்டத்தை தொடர் போராட்டமாக நடத்தவேண்டும். அடுத்த மாதம் எங்கள் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கவுள்ளோம். அதற்கும் இந்த ஆட்சியாளர்கள் தடைகளை ஏற்படுத்தலாம். மக்கள் திரட்சியின் ஊடாகவே அதனைத் தகர்த்தெறிய முடியும்.

அன்று இனப்படுகொலை நடந்தது. இப்போது பண்பாட்டுப் படுகொலை, கலாசாரப் படுகொலை நடந்து கொண்டிருக்கின்றது. இவை எல்லாவற்றையும் உள்ளடக்கியே நாம் இனவழிப்பு இப்போதும் நடப்பதாகக் குறிப்பிட்டு இந்தப் போராட்டத்தை நடத்தியிருக்கின்றோம். எங்களுக்கு நீதி கிடைக்கும் வரையில், தமிழினத்துக்கு விடிவு கிடைக்கும் வரையில் நாம் போராடிக்கொண்டுதான் இருக்கவேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இந்த மாத நடுப்பகுதியில் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படவுள்ளது. தமிழ் மக்களை ஒடுக்குவதற்காகத்தான் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமே வந்தது. புதிய சட்டம் மிக ஆபத்தானது என்று சிங்களவர்களே சொல்லுகின்றனர். கருத்துச் சுதந்திரத்துக்கு பெரும் சவால் விடுக்கும் வகையில் தான் புதிய சட்டவரைவு இருக்கின்றது. ஊடகங்கள் மீது கிடுக்கிப்பிடி வரக்கூடிய வாய்ப்பிருக்கின்றது. அதற்கு எதிராகவும் நாங்கள் போராட வேண்டியவர்களாக இருக்கின்றோம்-என்றார். (அ-ஒ.125)

## 5 ஆண்டுகளில்...

எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. இது முப்படைக்கும் மற்றும் பொலிஸுக்கும் பொருந்தும். 2028 ஆம் ஆண்டுக்குள் முப்படையினரின் எண்ணிக்கை மிகப் பெரியளவில் குறைக்கப்படும்-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் விமானப்படைத் தளத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நமது நாடு எதிர்கொள்ளும் பெரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான முதல் படிகள் தொடங்கியுள்ளன.

நாடு பெரும் சிக்கலில் இருந்த நேரத்தில் நான் ஜனாதிபதியானேன். போராட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றும் நிலைக்கு நாடு வந்திருந்தது. பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு நான் இன்று நன்றி கூறுகிறேன். அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், நாங்கள் இன்று இங்கு இருக்கமாட்டோம்.

கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. வரிகள் அதிகரித்தன, பொருள்களின் விலைகள் அதிகரித்தன, வரி செலுத்த வேண்டியிருந்தது. வருமானம் மட்டுப்படுத்தப்பட்டது. பிரச்சினைகள் இல்லாதவர்கள் எவரும் இங்கு இல்லை. அந்தத் தீர்மானங்களை எடுத்ததால்தான், எங்களுக்கு சர்வதேச நாணய நிதிய உதவி கிடைத்தது. எனவே, இந்த மாதம் மற்றும் அடுத்த மாதம் சம்பளம் செலுத்த எம்மிடம் பணம் உள்ளது.

இது முதல் சுற்று மட்டுமே. இனி வெளிநாட்டு வங்கிகளுடன் வியாபாரம் செய்யலாம். இனி நமக்கு கடன் தொடர்பில் 3 குழுக்களுடன் கலந்துரையாடவேண்டியுள்ளது. எவ்வளவு கடினமாக இருந்தாலும், சிறிது காலத்தில் நாம் இதிலிருந்து மீண்டு வருவோம்.

நமது பிரதான இரண்டு பிரச்சினைகள், செலவை விட வருமானம் குன்றவு. அதற்காக ரூபாவில் கடன் வாங்கினோம். இறக்குமதியை விட ஏற்றுமதி வருமானம் குறைவு. அதற்காக டொலரில் கடன் வாங்கினோம். இதை மாற்றப்பாடுபட வேண்டும். சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவேண்டும் என்பதற்காக பொலிஸாரின் எண்ணிக்கையை கொஞ்சம் அதிகரிக்க வேண்டியுள்ளது. போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் சட்டம் ஒழுங்கு மற்றும் நீதி அமைச்சர்களுக்கு இது தொடர்பான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அதற்குப் படையினரின் ஒத்துழைப்பும் அவசியம்-என்றார். (அ-ஒ.இ)

## கடலில்...

துள்ளார் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை, புளியந்தோப்பைச் சேர்ந்த அன்பழகன் ஜக்சன் (வயது - 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஊர்காவற்றுறை 9ஆம் வட்டாரத்திலிருந்து நேற்றுமுன்தினம் இரவு நண்பருடன் ஜக்சன் ஆழ்கடலுக்குச் சென்றுள்ளார். ஜக்சனுக்கு மீன்பிடி தொழிலில் அனுபவமில்லை. இந்த நிலையில், கடலினுள் நீரோட்டப் பாதையில் செல்லும்போது ஜக்சன் படகிலிருந்து இறங்கியுள்ளார். அந்தப் பகுதியில் சுழியோட்டம் அதிகமாக இருந்தமையால் அவர் இழுத்துச் செல்லப்பட்டாரெனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். ஜக்சனுடன் சென்ற நண்பர் அவரைத் தேடிக் காணாத நிலையில் ஊருக்குத் திரும்பி விடயத்தை தெரியப்படுத்தியுள்ளார். இந்த நிலையில் நேற்றுக் காலை ஜக்சனின் சடலம் கரையொதுங்கியுள்ளது. (அ-ஒ.23)

## பயங்கரவாத...

ஆணைக்குழு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உத்தேச சட்டவரைவின் 4(1)(அ) பிரிவின் பிரகாரம், பயங்கரவாதத்துக்கு எதிராக சாவுத் தண்டனை விதிப்பதாகக் கூறப்பட்டுள்ள சரத்து குறித்து மிகவும் கவலையடைவதாகவும் சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதச் செயற்பாடுகள் அல்லது வேறு காரணங்களால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தலுக்கு எதிராக சாவுத் தண்டனையைப் பயன்படுத்தி நியாயப்படுத்தக்கூடாது என சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழுவின் மூத்த சட்ட ஆலோசகர் லிவியா ஸில்லி தெரிவித்துள்ளார்.

புதிய சட்டவரைவில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச சட்டவரைவில் சாதகமான விடயங்களை விடவும், பிரச்சினைக்குரிய காரணிகளே அதிகமாகக் காணப்படுவதாக சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை - சட்டவரைவின் 3 ஆம் சரத்தில் உள்ள பரந்துபட்ட மற்றும் தெளிவற்ற அர்த்தங்கள், அமைதியான போராட்டத்தை பயங்கரவாதச் செயற்பாடாகக் கருதும் வகையில் உள்ளதாக சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

குறித்த சட்டவரைவானது இலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் இடையில் காணப்படும் சட்ட பிணைப்பு மற்றும் நாட்டின் அரசியல் அமைப்பை மீறுவதாக சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழுவின்மூத்தசட்ட ஆலோசகர்லிவியோ ஸில்லி குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ.இ)

## எட்டு...

பதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள்தீர்மானித்துள்ளன.

யாழ்ப்பாணத்திலே தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் நேற்று பிற்பகல் 3:30 மணியளவில், தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சமூக சமய தொழிற்சங்க அமைப்புக்கள் மத்தியிலான கூட்டம் மூன்று மணி நேரம் நடைபெற்றது. ஏழு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் 22க்கு மேற்பட்ட மத, சமூக மற்றும் தொழிற்சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், தமிழ் மக்களின் தொன்மையையும் தேசியத்தையும் சிதைக்கும் வகையில் கலாசார, பண்பாட்டு மற்றும் சமூக விழுமியங்களை சிதைத்து நமது இருப்பை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் சைவ ஆலயங்களை நிர்மூலமாக்கியும் அங்கு பௌத்த சின்னங்களை நிறுவியும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட கலாசார அழிப்புடையிலான இனப்படுகொலையை எதிர்த்து போராட்டம் ஒன்றை வடக்கு-கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் ஒரே நாளில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஒழுங்குகளை முன்னெடுக்க ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

அதேபோன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கும் இவ்வேளையில் அதனுடைய கடுமையான எதிர் விளைவுகளை கவனத்திற்கொண்டு அந்தச் சட்ட வரைவை எதிர்த்தும் அதை நிறைவேறாமல் தடுப்பதற்கும் ஏனைய தமிழ் பேசும் மக்களினுடைய பிரதிநிதிகளோடு கலந்துரையாடல் நடத்தி ஒன்றிணைந்த எதிர்ப்புப் போராட்டத்தை நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான திகதிகள், விவரங்கள் என்பன ஏற்பாட்டு குழுவினரால் பின்னர் அறிவிக்கப்படும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ.இ)

## இனவழிப்புக்கு...

பட்டிருந்தது. குருந்தூர் மலையில் நீதிமன்றத் தடை உத்தரவை மீறி விகாரை அமைத்தமை, நெடுந்தீவு வெடியரசன் கோட்டை பௌத்த இடம் என காட்சிப் பலகை வைத்தமை, கச்சதீவுப் பகுதியில் புத்தர் சிலை அமைத்தமை, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை உள்ளிட்ட தமிழர் பகுதியில் நடைபெறும் அத்தனை பௌத்த ஆக்கிரமிப்புக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீராவியடிப் பிள்ளையார் எங்கள் சொத்து, அரசியல் கைதிகளை விடுதலை செய், காவிகளின் அட்டகாசத்துக்கு காக்கிகளே துணை, சுயாட்சியே தமிழரின் தீர்வு, கடன் வாங்கி தமிழர் கழுத்தை அறுக்காதே, வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், தொல்பொருள் திணைக்களமே அரசின் கைக்கூலி, இராணுவமே வெளியேறு, நிலாவரை எங்கள் சொத்து, நெடுந்தீவு எங்கள் சொத்து, கச்சதீவு எங்கள் சொத்து, கன்னியா வெந்நீர் ஊற்று எங்கள் சொத்து, குருந்தூர்மலை எங்கள் சொத்து, வெடுக்குநாறி மலை எங்கள் சொத்து என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளரும் முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், மானிப்பாய் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் அந்தோனிப்பிள்ளைஜெபநேசன்,இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள், சமூகமட்டப் பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ஒ.125)

## பால் மா...

ளது என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோகிராம் பால்மாவின் விலை 200 ரூபாவாலும் 400 கிராமின் விலை 80 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன. நேற்றும் இன்றும் விடுமுறை தினம் என்பதால் நாளை திங்கட்கிழமை முதல் புதிய விலையில் சந்தையில் பால்மா பைக்கெற்றுகள் வெளியிடப்படும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் மேலும் குறிப்பிட்டது. (அ-ஒ.ச.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறிமலைக்கு...

டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் வவுனியா, நெடுங்கேணி - வெடுக்குநாறி மலைக்கு இன்று காலை பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

அங்கு ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர், உடைத்து வீசப்பட்ட ஆதிலிங்கம் சிலை உள்ளிட்ட விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வதற்கான சாத்தியப்பாடுகள் பற்றி இவர்கள் ஆராயவுள்ளனர்.

அதேவேளை, வெடுக்குநாறிமலை விவகாரம் சம்பந்தமாக நாளை திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெளிவுபடுத்தவுள்ளார். (அ-ஔ.44)

## வெடுக்குநாறிமலையில்....

நெடுங்கேணியில் அமைந்துள்ள வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வளாகத்தில் சிவலிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்கள் அழிக்கப்பட்டிருந்தன. இதனையடுத்து ஆலயநிர்வாகத்தினரால் நெடுங்கேணி பொலிஸ் மற்றும் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆனால், இதுவரை எவரும் கைதாகவில்லை. இது தொடர்பாக சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைக் குழு அமைத்து விசாரணையை முன்னெடுக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சர்வமதத் தலைவர்கள் வவுனியா மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் அண்மையில் கூட்டம் நடத்தி அதே இடத்தில் மீண்டும் சிவலிங்கம் உட்பட்ட விக்கிரங்களை அமைப்பதற்கான அனுமதியைப் பெற்றிருந்தனர்.

இன்று அதிகாலை 1 மணி தொடக்கம் 4 மணி வரையிலான காலப் பகுதிக்குள் சிலைகள் அனைத்தையும் மீளப் பிரதிஷ்டை செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் நேற்றுக்காலை ஈ.பி.டி.பி.யின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் பிரசன்னத்துடன், ஆலயச் சிலைகளைப் பிரதிஷ்டை செய்வதற்கு ஏதுவாக வெடுக்குநாறி மலையின் உச்சியில் சில வேலைப்பாடுகள் ஊரவர்கள் 3 பேரால் முன்னெடுக்கப்பட்டது. தொல்லியல்சின்னமான வெடுக்குநாறிமலையில் சேதங்களை அவர்கள் ஏற்படுத்தியதாகத் தொல்லியல்திணைக்களம் நெடுங்கேணிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து அவர்கள் விசாரணைக்காக நெடுங்கேணி பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தநிலையில் நேற்று முன்னிரவு அவர்கள் மூவரும் விடுவிக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட உழவியந்திரம் பொலிஸ் நிலையத்தில் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இன்றைய தினம் அமைச்சர்கள் குழு வெடுக்குநாறிமலைக்கு வருவார்களாக இருந்தால் சிலைகள் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்படும் என்று ஆலய வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (அ-ஔ.5.110)

## உள்ளூராட்சித்...

10 ஆம் திகதிக்கு முன் விடுவிக்கப்பட்டால், ஏப்ரல் 25 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்களிப்பு நடைபெறுவதற்கு ஏப்ரல் 10 ஆம் திகதிக்குள் தபால் வாக்குச் சீட்டுகளை அரச அச்சகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

'ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை இரத்துச் செய்வது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஏப்ரல் 10 ஆம் திகதிக்குப் பின்னர் நிலைமையைக் கருத்திற்கொண்டு முடிவு எடுக்கப்படும்' என புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (அ-ஔ.இ)


### பொதிகள் சேவை

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு அனைத்து நாடுகளுக்கும் விசேட விலைக்கழிவு.

எந்தப்பொருள் அனுப்பினாலும் ஒரே விலை

சிநேகபூர்வ வாடிக்கையாளர் சேவை / நம்பகதன்மை



077 198 4959
077 088 1066

SS World Express

Jaffna, Colombo, Trinco, Vavuniya

No. 272 K.K.S. வீதி, முட்டாசுக்கடைச் சந்தி, யாழ். K.K.S. Road, Jaffna.(Muddasu Kadai Shanthi)

### விற்பனைக்கு

கட்டட ஒப்பந்த வேலை செய்பவர்களுக்கு தேவைப்படக்கூடிய கழிவு ஓயில் மொத்த விற்பனைக்கு உண்டு.

(CS 1095)(K - 1)

தொடர்பு: 077 331 7120

### HOTEL VACANCY

Rooms மற்றும் திருமண மண்டபங்களுடன் கூடிய யாழ் நகரில் பிரபல்யமிக்க ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Chef, 2. Cook, 3. Accountant, 4. Receptionist
5. Room Boy

உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்

(CS24231)(K-1)

076 419 2934

### காணி விற்பனைக்கு

இயக்கச்சியில் 40 பரப்பு தென்னந்தோட்டம் (Reecha Farm அருகில்) விற்பனைக்குண்டு.

076 200 9025 (CS22587)(J-1)

### குருக்கள் அர்ச்சகர் தேவை

யாழ்ப்பாணம் புங்குடுதீவு
**கண்ணகை அம்பாள்** என வழங்கும்
**ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி தேவஸ்தானத்தில்**
**நித்திய பூஜைகளை** மேற்கொள்ளுவதற்கு குருக்கள் மற்றும் அர்ச்சகர் தேவை. குடும்பமாக தங்குவதற்கு தங்குமிடமும் கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும்.

ஆலய நிர்வாக சபை - 077 788 7830

(cs.24238) (N-1)

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 66 பரப்புக் காணி (நிலப்பரப்பு) மட்டுவில் காபற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

1 பரப்பின் விலை 150,000/=

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

தொடர்பு: 076 755 8606
077 6385 683

(CS 24256)A-1

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 4365 814
076 7390 413

(CS 24222) A-1

### தனியார் வகுப்புகள்

பொறியியலாளரினால் (BSc.Eng)
A/L **பௌதிகவியல்.**
**தரம் : 9 - 11 கணிதம்.** Auto CAD
வகுப்புகள் தனியாகவோ/ குழுவாகவோ/ வீட்டிலோ/ வீடு வந்தோ குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படுகின்றது.

075 232 5325

### வகுப்புக்கள்

**தரம்: 10, 11**
**வணிகக்கல்வியும் கணக்கீடும்**

- Tamil Medium & English Medium Classes
- நேரடி மற்றும் Zoom வகுப்புக்கள்
- 10 வருட கடந்த கால வினாக்கள் ஆராயப்படும்
- தனியார் கல்வி நிலையங்களும் தொடர்புகொள்ளலாம்

By M. Dushiyankan
BBM (2nd Class Upper) MSW (R)
077 919 7908 (cs 24226) (N-1)

### உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனத்திற்கு கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.



- ➢ Accounts Assistant (With Experience)
- ➢ Accounts Executive
- ➢ Accounts Clerk
- ➢ Accounts Trainee / Intern

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் கீழ்வரும் தொலைபேசி எண்ணுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும். **(074 030 9063)** அல்லது உங்கள் சுய[illegible] இவ்விலக்க **whatsapp** இற்கு அனுப்பி வைக்கவும்.

- நிர்வாகம்

(CS49791)(K-1)


### மரண அறிவித்தல்

## திருமதி கனகரத்தினம் பிறேமச்சந்திரா

(முன்னாள் ஆசிரியை - பாலவியாஸ், யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையம்)



தோற்றம் 27.09.1950 மறைவு 01.04.2023

புலவனார் வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், 38/1, சிவன்வீதி, திருநெல்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் பிறேமச்சந்திரா நேற்று (01.04.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அம்பிகைபாகர் - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலாயுதம் - அன்னம்மா தம்பதிகளின் மருமகளும், செந்தூர் செல்வன், காலஞ்சென்றவர்களான கதிர்காமசெல்வன், பார்த்தீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலராணியின் மைத்துனியும், அம்புஜன், கேதாரீசன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: அ.செந்தூர் செல்வன் (சகோதரர்)

077 857 5128, 077 192 9771

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## காணி விற்பனைக்கு

நிருவத்தம்பை ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் (வேலகாடு சந்தி) நிலப்பரப்பு 4 குளி 00.42 பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட தனி வெட்டுக் கிணற்று நீர்ப்பாசன வசதியுடன் உள்ள காணி விற்பனைக்குண்டு. CS/22512H.6

**077 572 3474, 077 725 0572**

## உடன் வேலை வாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல்யமான (Ice Cream Shop) ஐஸ்கிரீம் விற்பனை நிலையத்தில் பணியாற்றுவதற்கு ஆண் / பெண் வேலையாட்கள் உடன் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை (தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்) (CS 1093)(K-1)

தொடர்பு : **0773788746**


*சீனி,...*

யாளர் சங்கம் தெரிவித்தது. 230 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 210 ரூபாவாகவும் 220 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனி 200 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 340 ரூபாவுக்கு விற்பனை செய்யப் ... ஒரு கிலோ ...ம் பருப்பு 310 ...ாவாகக் ...றக்கப்பட்டுள் (அ-ஒ,இ)


## வீடு வாடகைக்கு விடப்படும்

யாழ். பிறஸ் வீதியில் ஆயர் இல்லத்திற்கு அருகாமையில் 3 அறைகள் கொண்ட பெரிய வீடு ஒன்று வாடகைக்கு இருக்கிறது. இந்த மாதத்திலிருந்து (ஏப்ரல்) குடியேறலாம். (cs 22596) (N-1

**077 177 0143 / 076 544 2304**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 78 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி. புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை 200,000/-
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- **076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**

(cs22599) (N.I)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

தெல்லிப்பளையில் உள்ள வீடொன்றிற்கு தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (cs 22578) (N)

**077 400 5023**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- ✓ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✓ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✓ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்.
- ✓ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 108 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

(CS 24315) (I-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...த்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

ஆய கலைகள் அறுபத்து நான்கினுள்ளும்
ஓயாது கடன் வாங்கல் ஒருகலையோ...?
- வடிவழகையன்

சஞ்சீவி
Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 பங்குனி 19 ஞாயிற்றுக்கிழமை (02.04.2023) சிகரம் : 142



# காஸாவும் முல்லைத்தீவும்

அ.நிக்ஸன்

இஸ்ரேல். ஜெருசலேம் முழுவதையும் தனது தலைநகர் என்கிறது. பலஸ்தீனம் கிழக்கு ஜெருசலேமை தனது 'எதிர்கால நாட்டின்' தலைநகராகக் கருதுகிறது. இஸ்ரேல், முழு நகரையும் உரிமையாக்க முற்படுவதை அங்கீகரித்துள்ள அமெரிக்காவும் வேறு சில ஐரோப்பிய நாடுகளும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட பகுதிகளில் ஆறு லட்சம் யூதர்கள் குடியேற்றப்பட்டதைக் கண்டிக்கவில்லை. சர்வதேச சட்டங்களின்படி இந்தக்குடியேற்றங்கள் தவறு என்றும் அமைதிக்குத் தடையாக உள்ளதாகவும் பலஸ்தீனம் கூறினாலும், இஸ்ரேல் அதனை மறுக்கின்றது. அதேபோன்று வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் எழுபது வருடங்களுக்கு மேலாக. குறிப்பாக 2009க்குப் பின்னர் தீவிரமாக இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்களை அமெரிக்க - இந்திய அரசுகள் இதுவரை கண்டிக்கவேயில்லை.

இஸ்ரேல் வழியில் இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கில் 1948இல் இருந்து இதுவரை ஏறத்தாழ இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டு பிரதேசசெயலாளர், கிராமசேவகர் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. முப்பது வருடங்கள் போர் நடைபெற்றதால் சிங்களக் குடியேற்றங்களில் தாமதம் ஏற்பட்டது. 2009க்குப் பின்னர் வடக்கு - கிழக்கில் உள்ள ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் வரையான இராணுவக் குடும்பங்களுக்கும் காணிகள் வழங்கும் திட்டங்கள் உண்டு. பௌத்த விகாரைகளும் புதிதாக அமைக்கப்படுகின்றன.

## இனப்பரம்பலில் மாற்றம்

2009 க்குப் பின்னர் வடக்கில் வவுனியாவில் ஏறத்தாழ நான்காயிரம் சிங்களக் குடும்பங்கள் குடிமர்த்தப்பட்டுள்ளன. வவுனியா நெடுங்கேணி பிரதேசத்துக்கு உட்பட கொக்கொச்சான் குளம், போகஸ்கம என்ற சிங்களப் பெயராக மாற்றப்பட்டு மூவாயித்து ஐநூறு சிங்களக் குடும்பங்கள் 2017ஆம் ஆண்டில் குடியமர்த்தப்பட்டுள்ளன. கொக்கொச்சான்குளத்தின் சில பகுதிகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்குரியவை. ஏற்கனவே வவுனியா தெற்கு பிரதேசசபை சிங்களவர்களுக்கு உரியதாக இருக்கும் நிலையில், மஹிந்தவின் 2010ஆம் ஆண்டு திட்டத்துக்கு ஏற்ப 2017 இல் பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில், கொக்கொச்சான்குளத்தைச் சிங்களக் குடியேற்றமாகச் சட்டரீதியாக அங்கீகரித்தார். .கொக்கொச்சான் குளம் சிங்களக் கிராமம் அனுராதபுர மாவட்ட செயலகத்துக்குக் கீழ் இயங்கினாலும் ரணில் ஜனாதிபதியாக இருப்பதால், வவுனியா வடக்கு பிரதேசசெயலகத்துடன் இணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று மணலாறு எனப்படும் வெலியோயா சிங்களக் கிராமம் அனுராதபுர செயலகத்தின் கீழ் இயங்கினாலும் தனியான பிரதேசசெயலகமாக முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கும் முயற்சிகளும் இடம்பெறுகின்றன. ஆகவே கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தின் இனப்பரம்பல் ஏற்கனவே மாற்றப்பட்டுள்ள நிலையில், வடக்கில் முல்லைத்தீவு ,வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலில் மாற்றம் ஏற்பட்டு சிங்களப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் ஆபத்து உண்டு. வவுனியா, முல்லைத்தீவு ஆகியவற்றின் வடக்கு எல்லைக் கிராமங்களும், கிழக்கில் திருகோணமலை அம்பாறை ஆகியவற்றின் எல்லைக் கிராமங்களும் சிங்களக் குடியேற்றத்துக்காகப் பிரிக்கப்பட்டு அனுராதபுரம், பொலனறுவை ஆகிய மாவட்டச் செயலகங்களின் கீழ் இயக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில், மீண்டும் வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டச் செயலகங்களின் கீழ் அவற்றைச் சேர்க்க முற்படுவதன் ஊடாக வடக்கு - கிழக்கில் தமிழ், முஸ்லிம்களின் இனப்பரம்பலில் மாற்றங்களை மேற்கொள்ளும் திட்டத்தை ரணில் அரசாங்கம் நுட்பமாக ஆரம்பித்துள்ளது.

2009 க்குப் பின்னர் வவுனியா பிரதேச செயலகத்தில் 10 சிங்கள உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை அடுத்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் மேலும் அதிகரிக்கும். அத்துடன் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய வன்னி மாவட்டத்தில் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் அல்லது இருவர் சிங்கள உறுப்பினராக வரக்கூடிய ஆபத்தும் உண்டு. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிச் சூழலில் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு உள்ளிட்ட இலங்கைத்தீவின் பொருளாதார அபிவிருத்திக்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ள சூழலில், வடக்குடன் கிழக்கை இணைக்கும் தமிழர் பாரம்பரியப் பிரதேசங்கள் திட்டமிடப்பட்டு சட்ட ரீதியாகச் சிங்கள மயமாக்கப்படுகின்றன. இதற்கு பெருமளவு நிதி விரய மாக்கப்படுவதாக தமிழ்த்தரப்பு சர்வதேச நாணய நிதியத்துக்கு உரிய முறையில் எடுத்துக் கூறியபோதும், அது கவனத்தில் எடுக்கப்படவில்லை. இது, ஏறத்தாழ பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் குடியேற்றங்கள், ஆக்கிரமிப்புகளை அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் பார்த்துக்கொண்டிருப்பது போன்றதொரு நிலையே.

## மகாவலித் திட்டமும் அதன் பேராபத்தும்

வடக்கு - கிழக்கில் 1948 ஆம் ஆண்டில் ஆரம்பித்த சிங்களக் குடியேற்றங்கள் 1979 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜயவர்த்தன உருவாக்கிய மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் விசேட நிலப்பகுதி எனப் பிரகடனப்படுத்தி நிலங்களைப் பெறமுடியுமென நாடாளுமன்றத்தில் அப்போது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டம் தற்போது ஜே.ஆரின் மருமகனான ரணிலின் அரசாங்கத்தில் முழுமை பெறுகின்றது. குறிப்பாக பிரேமதாஸ, சந்திரிகா, ராஜபக்ச ஆகியோரின் ஆட்சியிலும் தொடரப்பட்டு விரிவாக்கப்பட்ட இந்தத் திட்டங்களினால், சர்வதேசம் ஏற்கக்கூடிய முறையில் தமிழ்த்தேசியக் கோட்பாட்டை நிறுவமுடியாது என்று காரணம் கூறக்கூடிய சட்டரீதியான காரியங்களை ரணில் அரங்கேறி வருகின்றார்.

அதற்கான இறுதிக் கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசங்களாகவுள்ள கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, செம்மலை ஆகிய கிராமங்களின் எட்டு கிராமசேவையாளர் பிரிவுகளை மகாவலி அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்தபோது 1988 ஆம் ஆண்டு விசேட வர்த்தமானி மூலம் மகாவலி வலயம் தாபிக்கப்பட்டது. அதன் பின் 2007இல் மஹிந்த ஜனாதிபதியாக இருந்தபோது மற்றொரு வர்த்தமானியால் அது மேலும் விஸ்தரிக்கப்பட்டது. இந்தப்பின்புலத்தில் வடக்கையும் கிழக்கையும் நில அடிப்படையில் பிரிக்க மகாவலி நீரை மையப்படுத்தி மகாவலி அதிகாரசபை ஈழத்தமிழர்களின் காணிகளைக் பொறுப்பேற்கும் பணிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளது. தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாற்றின் கற்றூண், அக்கரைவெளி, வண்ணாமடு, மணற்கேணி ஆகிய பகுதிகளில் மிக நுட்பமாக சிங்கள மயமாக்கல் இடம்பெறுகின்றது. பாரம்பரிய மணலாற்றுப் பிரதேசத்தின் கற்றூண்பகுதியை மகாப்பிட்டிய என்றும், வண்ணாமடு பகுதியை வண்ணாமடுவ எனவும், அக்கரைவெளி பகுதியை அக்கரவெலிய என்றும் பெயர் மாற்றப்பட்டு சிங்களமயமாக்கும் ஏற்பாடுகள் முழுமை பெற்றுள்ளன. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மணற்கேணிப் பிரதேசத்தில் பிக்குமார் கால்பதித்தமை இவற்றுக்குச் சான்று.

## பறிபோகும் நிலையில் எல்லைக்கிராமங்கள்

1984 ஆம் ஆண்டு தமிழ்மக்கள் குறித்த பகுதிகளிலிருந்து இடம்பெயர்வதற்கு முன்பு கற்றூண் பகுதியில் வைரவர் ஆலயமும் ,அக்கரைவெளியில் முனியப்பர் ஆலயமும் இருந்ததாக மக்கள் கூறுகின்றனர். ஆனால் இந்த இரண்டு கோவில்களும் தற்போது உடைக்கப்பட்டு பௌத்த பகுதிகளாக மாற்றுவதற்கு இராணுவ ஒத்துழைப்புடன் சிங்கள அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர். சைவ வழிபாட்டு அடையாளங்கள் அழிக்கப்பட்டுமுள்ளன. அக்கரைவெளியில் 1984 க்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம், மாட்டுப் பண்ணைகள் இருந்திருக்கின்றன. இது தமிழர்களின் விவசாய நிலம். அக்கரைவெளிப் பகுதியில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், மணற்கேணி, வண்ணாமடுப் பகுதிகளிலும் கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி பிரதேசங்கள் விவசாயத்துக்குரியவை. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அங்கு சென்ற பிக்குமார் உள்ளிட்ட சிங்கள அதிகாரிகள் குழு தமிழ் மக்களை அச்சுறுத்தி விவசாய நடவடிக்கைகளை நிறுத்தியதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடந்தவாரம் அங்கு சென்று நிலமையை அவதானித்துள்ளார். ஏற்கனவே தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசமான மணலாற்றுப் பகுதியின் பிரதான விவசாயக் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு வெலிஓயாவாக மாற்றப்பட்டுள்ளன. மணலாற்றுக்கு அருகாகவுள்ள மானாவாரி விவசாய நிலங்களையும் ஆக்கிரமித்து பௌத்த சிங்கள மயமாக்கலுக்குரிய ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

திருகோணமலை தென்னமரவாடிக்கும் அக்கரைவெளி பிரதேசத்துக்கும் இடையில்தான் உள்ள பகுதியே பறையனாறு. இந்த பறையனாறுதான் திருகோணமலையையும் முல்லைத்தீவையும் இணைக்கின்றது. அக்கரைவெளியில் இருந்து அதற்கு நேராக வரும் காணிகளில்தான் தமிழர்கள் விவசாயச் செய்கைகளில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக மாரியாமுனை அக்கரைவெளி மனற்கேணி பிரதேசங்கள் அனைத்தும் விவசாயக் காணிகள். முல்லைத்தீவு - திருகோணமலை மாவட்ட எல்லையில் அமைந்துள்ள தென்னமரவாடிக் கிராமம் திருகோணமலை நகரத்திலிருந்து புல்மோட்டை ஊடாக சுமார் அறுபது கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. திருகோணமலை மாவட்ட செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குச்சவெளி பிரதேசசெயலாளர் பிரிவில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது. தென்னமரவாடிக் கிராமம் தனியான கிராமசேவகர் பிரிவாகும். இந்தக் கிராமத்தில் தரம் ஐந்து வரை கல்வி கற்பதற்கான பாடசாலை உள்ளது. ஆனால் போக்குவரத்துகள் இல்லை. இருந்தாலும் முல்லைத்தீவுப் பேருந்து மூலம் இந்தப் பிரதேசத்துக்குச் சென்று வரலாம். புல்மோட்டை - கொக்குத்தொடுவாய் பகுதிகளில் உள்ள குடா பகுதிகளின் வாயில் கதவுகளாக தென்னமரவாடிப் பிரதேசம் அமைந்துள்ளது. இந்தப் பகுதியில் 2009 க்குப் பின்னரான சூழலில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் அதனைப் பயன்படுத்தமுடியாது. ஆனால் அருகில் உள்ள சிங்களக் குடியேற்றக் கிராம மக்கள் அதனைப் பயன்படுத்த முடியும். 1984ஆம் ஆண்டு மார்கழி மாதம் தென்னமரவாடியில் வாழ்ந்த தமிழர்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டனர். பலர் அச்சத்தால் திருக்கோணமலை நகரப்பகுதி, தம்பலாகமம், வடக்கின் விசுவமடு போன்ற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வள்ளுவரிலிருந்து வெடுக்குநாறி மலைக்கு?

நிலாந்தன்

வவுனியா வெடுக்குநாறி மலையில் வழிபாட்டுருக்கள் சிதைக்கப்பட்டமை திட்டவட்டமாக ஒரு பண்பாட்டுப் படுகொலைதான். ஆனால் அந்தத் தீமைக்குள் ஒரு நன்மை உண்டு. அந்தச்சம்பவம் தமிழ் மக்களை உணர்ச்சிகரமான ஒரு புள்ளியில் ஒன்றுதிரட்டியுள்ளது. இதுதொடர்பாக சைவ மகாசபை ஒழுங்குபடுத்திய எதிர்ப்பில் ஒரு கிறிஸ்தவ மதகுரு காணப்பட்டார். கத்தோலிக்கத் திருச்சபையின் நீதிக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பு அது தொடர்பாக ஓர் அறிக்கையும் வெளியிட்டிருக்கிறது. இது.அண்மை நாட்களாக தமிழ் மக்கள் மத்தியில் மதரீதியான அகமுரண்பாடுகளைத் தூண்டி வரும் சக்திகளின் வேகத்தை ஒப்பீட்டளவில் தடுக்குமா?

ஒருபுறம் சிங்கள பௌத்த மயமாக்கல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இன்னொருபுறம்.இந்து - கிறிஸ்தவ முரண்பாடுகள் ஊக்குவிக்கபடுகின்றன.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஆவிக்குரியசபைப் போதகரான போல் தினகரன். அவர் கலந்து கொள்ளவிருந்த மத நிகழ்ச்சியை ரத்துச்செய்ய வேண்டியிருந்தது. அதற்கு வெளிப்படையாகச் சொல்லப்பட்ட காரணம் அவர் வணிக விசாவில் வந்தமைதான் என்று கூறப்பட்டது. ஆனால் வெளியில் சொல்லப்படாத காரணம் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டியங்கும் ஈழத்துச் சிவசேனாவின் எதிர்ப்புதான் என்று ஊகிக்கப்படுகிறது. அல்லது சிவசேனாவின் வற்புறுத்தலால் அவ்வாறு போதகரை விசாரிக்க வேண்டி வந்தது என்ற ஒரு தோற்றம் உண்டாகக்கூடிய விதத்தில் அரசாங்கம் காய்களை நகர்த்தியிருக்கிறது என்றும் கூறலாம். போதகர் போல் தினகரன் இதற்கு முன்னரும் வந்து போயிருக்கிறார். அப்பொழுதெல்லாம் அவருக்கு வணிக விசாதான் வழங்கப்பட்டது. சுற்றுலா விசாவில் வருகை தருபவர்கள் மதப் பிரசார நிகழ்வுகளில் பங்கு பற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

அவருக்கு விசாவை வழங்கியது சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம். அந்த விசாவை வழங்கும்பொழுது அவர் என்ன தொழிலுக்காக யாழ்ப்பாணத்துக்குப் போகிறார் என்பது அவர்களுக்கும் தெரிந்திருக்கும். அவர் நேரடியாக யாழ்ப்பாணம் வரவில்லை. முதலில் கொழும்புக்குத்தான் வந்தார். கொழும்பில் நான்கு நாள்கள் இருந்தார். அங்கே ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். அவருக்காகப் பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்யும்பொழுது ரணில் விக்கிரமசிங்க அவருக்குமுன் அடக்க ஒடுக்கமாக நிற்கும் ஒளிப்படம் சமூகவலைத்தளங்களில் பகிரப்படுகிறது. அதன்பின் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். பலாலி விமான நிலையத்தில் அவர் கிட்டத்தட்ட 4 மணித்தியாலங்கள் விசேஷமாக விசாரிக்கப்பட்டிருக்கிறார். அவரை விசாரிப்பதற்கு என்று இரண்டு அதிகாரிகள் கொழும்பிலிருந்து விசேஷமாக வருகை தந்ததாகவும் ஒரு தகவல். அந்த விசாரணையின் விளைவாக அவர் ஏற்கனவே மானிப்பாயில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மத நிகழ்ச்சியை ரத்துச் செய்துவிட்டு தமிழ்நாட்டுக்குத் திரும்பி விட்டார். இதுதொடர்பில் அந்த மத நிகழ்வை ஒழுங்குபடுத்தியவர்கள் ஜனாதிபதியோடு தொடர்புகொள்ள முற்பட்டபோதும் திருப்தியான பதில் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதற்கு முன்னரும் அவரைப் போன்ற போதகர்கள் இலங்கைக்குள் வந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் வணிக விசாவோடுதான் வந்திருக்கிறார்கள். இப்பொழுது மட்டும் வணிக விசா ஏன் ஒரு விவகாரமாகக் காட்டப்படுகிறது? அப்படியென்றால் அவரைப் போன்ற போதகர்கள் எந்த விசா எடுத்துக்கொண்டு நாட்டுக்குள் வரவேண்டும்? அதிலும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடக்காத ஒரு விசாரணை ஏன் பலாலி விமான நிலையத்தில் நடந்தது? யாழ்ப்பாணம் ஒரு தனி நிர்வாக அலகா? அவ்வாறு பலாலி விமான நிலையத்தில் ஒரு விசேஷ விசாரணையை நடத்தியதன்மூலம் சிவசேனாவிடமிருந்து நெருக்குதல் வருகிறது. அதனால்தான் அவ்வாறு விசாரிக்க வேண்டி வந்தது என்று காட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றதா?

எந்த ஜனாதிபதி. போதகர் போல் தினகரனிடம் ஆசீர்வாதங்களைப் பெற்றாரோ. அவருடைய அரசாங்கத்தின் இரண்டு அதிகாரிகள் போதகரை மாலை நான்கு மணியிலிருந்து இரவு 8 மணி வரை விசாரித்திருக்கிறார்கள் என்றால் ரணில் விக்கிரமசிங்க இதில் யாருக்கு உண்மையாக இருந்திருக்கிறார்? போதகர் தினகரனுக்கா? அல்லது ஈழத்துச் சிவசேனாவுக்கா?

நிச்சயமாக அவர் இரண்டு தரப்புக்கும் உண்மையாக நடக்கவில்லை. மாறாக. அவர் சிங்கள-பௌத்த அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு விசுவாசமாக நடந்திருக்கிறார். அதன்படி தமிழ் மக்களுக்கிடையே அக முரண்பாடுகளைத் தூண்டும் விதத்தில் நிலைமைகள் கையாளப்பட்டிருக்கின்றன. சிவசேனா நெருக்கடிகளை கொடுத்தபடியால்தான் அந்த மத நிகழ்வை நடத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது என்று ஒரு தோற்றம் ஏற்படக்கூடிய விதத்தில் நிலைமைகள் நகர்த்தப்பட்டிருக்கின்றன. அதாவது ஆவிக்குரிய சபைகளுக்கும் சிவசேனாவுக்கும் இடையிலான முரண்பாட்டை கூர்மைப்படுத்தும் உள்நோக்கம் உண்டா? ஈழத்துச் சிவசேனா மேற்படி போதகரின் வருகையைப் பலமாக எதிர்த்தபடியால்தான் அவர் அவ்வாறு விசாரிக்கப்பட்டார் என்பது உண்மையென்றால் இந்த விடயத்தில் ஈழத்துச் சிவசேனாவுக்கு ஏதோ ஒரு வெற்றி கிடைத்திருக்கிறது என்று பொருள். அதாவது தமிழ்மக்கள் மத்தியில் அகமுரண்பாடுகளை ஊக்குவிக்கும் ஒரு வெற்றி.

ஆனால். அதே ஈழத்துச் சிவசேனாவால் குருந்தூர் மலையில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் கட்டுமானங்களை ஏன் அகற்ற முடியவில்லை? அல்லது வெடுக்குநாறிமலையில் சிவனாலயம் சிதைக்கப்படுவதை ஏன் தடுக்க முடியவில்லை? திருகோணமலையில் கன்னியாய் வெந்நீரூற்றில். உயர் பாதுகாப்பு வலையங்களில் சைவ மரபுரிமைச் சின்னங்கள் சிதைக்கப்படுவதை ஏன் தடுக்க முடியவில்லை?

இதுதான் கேள்வி. சிங்கள பௌத்த மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈழத்துச் சிவசேனாவால் வெற்றி பெற முடியவில்லை. அதாவது சிவசேனா எந்த எந்த விடயங்களில் வெற்றி பெற வேண்டும் என்பது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களின்படிதான் நடக்கிறது. அதனால்தான் ஈழத்துச் சிவசேனாவுக்கு சிங்கள - பௌத்த தீவிரவாத மதகுருவான ஞானசாரதேரர் இணக்கமானவராகத் தெரிகிறார். ஆனால் சக கிறிஸ்தவர்கள் விரோதிகளாகத் தெரிகிறார்கள். வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்கும் கிழக்கு மைய கட்சிகளுக்கு வடக்கு விரோதியாகத் தெரிகிறது. ஆனால் ராஜபக்சக்கள் நண்பர்களாகத் தெரிகிறார்கள். இப்பொழுது கூட்டிக்கழித்துப் பார்த்தால் விடை தெளிவாகக் கிடைக்கும்.




தமிழ் மக்களை பிரதேச ரீதியாக, சமய ரீதியாக, சாதி ரீதியாகப் பிரித்துக் கையாள முற்படும் சக்திகள் அதாவது தமிழ்மக்கள் மத்தியில் உள்ள அக முரண்பாடுகளை உருப்பெருக்கி அரசியல்செய்ய முற்படும் சக்திகள் ராஜபக்சக்களுக்கும் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்துக்கும் நண்பர்களாக இருக்கிறார்கள். ஆயின் யாருடைய நிகழ்ச்சி நிரலை அவர்கள் முன்னெடுக்கிறார்கள்?

கடந்த சில வாரங்களாக நான் எழுதிய கட்டுரைகளுக்கு எனது நண்பர் ஒருவர் 'வட்ஸ் அப்பில்' பதில்வினையாற்றியிருந்தார். கிறிஸ்தவ சிறுசபைகளின் மதமாற்ற நிகழ்ச்சி நிரல்தான் ஈழத்துச் சிவசேனா போன்ற அமைப்புக்களின் வளர்ச்சிக்கு காரணம் என்று அவர் கருதுகிறாரோ தெரியவில்லை.

அவர் படித்தவர், பொறுப்பான அரச உத்தியோகத்தில் இருப்பவர். குறிப்பாக தன் தொழில் வரையறைகளைத் தாண்டி சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்காக மகத்தான தொண்டைச் செய்பவர். ஆனால் மதம் மாற்றும் சபைகளுக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டோடு காணப்படுகிறார். தமிழ்த்தேசியத்தை மதப் பல்வகைமைகளின் மீது கட்டியெழுப்ப வேண்டும் என்ற எனது விளக்கமானது மதமாற்றிகளுக்கு சாதகமானது என்று அவர் கருதுகிறாரோ தெரியவில்லை. இந்த இடத்தில் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். இந்தக்கட்டுரையானது கோட்பாட்டு ரீதியாக மத மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் எந்த மதத்தைப் பின்பற்றவேண்டும் என்பது ஒருவருடைய தனிப்பட்ட உரிமை. அந்த ஜனநாயக உரிமையில் யாரும் தலையிட முடியாது.

நான் மிகவும் மதிக்கும் ஓர் ஆன்மிகவாதி ஒருமுறை சொன்னார் ".... மதமாற்றம் அறியாமையின் மீதே நிகழ்கிறது என்று. எல்லா மதங்களும் ஒரே இறுதியிலக்கை நோக்கித்தான் வழிநடத்துகின்றன. தான் பிறந்த மதத்தைப் பற்றிய சரியான விளக்கம் உள்ள ஒருவர். இன்னொரு மதத்துக்கு மாற வேண்டிய தேவை இருக்காது. மதம் மாறும் ஒருவர் தன் மதத்தைப் பற்றியும் விளங்கிக் கொள்ளாதவர்; மாறிய மதத்தைப் பற்றியும் விளங்கிக் கொள்ளாதவர் "என்று அவர் கூறுவார்.

அறியாமை தவிர மதமாற்றத்துக்கு வறுமை. சமூக ஏற்றத் தாழ்வுகள், நலன் சார் தேவைகள் போன்ற காரணங்களும் உண்டு. இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் மதமாற்றத்தின் பின்னணியில் இருக்கும் அறியாமை, வறுமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றை அகற்ற வேண்டிய பொறுப்பு மதமாற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் மதப்பிரிவினருக்கு உண்டு. அதுமட்டுமல்ல தம்மை குறிப்பிட்ட ஒரு மதத்தின் காவலர்களாகக் காட்டிக் கொள்ளும் அநேகர் தமது மதம் கூறும் பேருண்மைகளை அறியாதவர்களே. உண்மையான ஆன்மிகவாதிகள் வெறுப்பை விதைப்பதில்லை. மகிழ்ச்சியையும் அன்பையும்தான் விதைக்கின்றார்கள்.

ஆனால். சில நாள்களுக்கு முன். ஈழத்துச் சிவசேனாவின் தலைவர் தனது இல்லத்தில் நடத்திய ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் மதமாற்றிகளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கவேண்டும் என்று கூறியதாக ஒரு செய்தி வெளிவந்தது. அவர் அவ்வாறு கூறிய காலகட்டத்தில் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கான சட்டமூலம் வெளியிடப்பட்டிருந்தது. தமிழ் மக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டமே வேண்டாம் என்று கோரிக்கை வைக்கும் ஒரு காலகட்டத்தில் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களில் ஒரு பிரிவினரைத் தண்டிக்கவேண்டும் என்று ஒருவர் கேட்கிறார். ஆயின் அவர் யார்? அவருடைய எதிரிகள் யார்? நண்பர்கள் யார்?

ஏற்கனவே தமிழ்மக்களை பிரதேசவாதத்தின் பெயரால் பிரிக்கும் சக்திகள் தென்னிலங்கையில் உள்ள கட்சிகளின் ஆதரவோடு கிழக்கில் பலமடைந்து வருகின்றன. இப்பொழுது வடக்கை மதரீதியாகப் பிரிக்கும் சக்திகள் துடிப்பாக உழைக்கத் தொடங்கிவிட்டன. தமிழ்மக்கள் மத்தியில் உள்ள தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் அதைக் குறித்து கருத்து தெரிவிக்கத் தயங்குகின்றன. இந்தவிடயத்தில் தலையிடத்தக்க வல்லமையோடு சிவில் சமூகங்களும் இல்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல் சமூக ஆன்மிக வெற்றிடத்தில், நேச முரண்பாடு எது? பகை முரண்பாடு எது? என்ற வேறுபாடு தெரியாமல் தமிழ்ச்சமூகம் ஆளையாள் கடித்துக் குதறிக் கொண்டிருக்க. அநாவசியமான விடயங்களில் சக்தியை வீணாக்கிக் கொண்டிருக்க. சிங்கள பௌத்த மயமாக்கல் புதிய வேகத்தில் முன்னெடுக்கப்படுகிறது? கன்னியாய் வெந்நீரூற்றில். மயிலத்தமடு மாதவனையில். குருந்தூர் மலையில். நெடுந்தீவில். கச்சதீவில் என்று பரவலாகத் சிங்கள பௌத்த மயமாக்கல் நடந்துகொண்டிருக்கிறது. இதில் ஆகப் பிந்தியது வெடுக்குநாறி மலை விவகாரம்.

அது தமிழ்மக்களைத் தற்காலிகமாகவேனும் ஒரு புள்ளியில் ஒன்றிணைத்திருக்கிறது என்பது சற்று ஆறுதலான விடயம். ஒரு தீமைக்குள் கிடைத்த நன்மையது. கடந்தவாரம் திருவள்ளுவருக்குத் திருநீறு வைக்கலாமா, இல்லையா என்ற விவகாரத்தில் தலையைப் பிய்த்துக்கொண்டிருந்த ஒரு சமூகம் இப்பொழுது வெடுக்குநாறிமலையை நோக்கித் திரும்பி யுள்ளதா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கதிரியக்கவியல் பேராசிரியர்
மருத்துவர் குமரேசன் சந்திரசேகரன்

Kumaresan Sandrasegaran, MD, FRCR, FSAR, FESGAR, is a Senior Associate Consultant at Mayo Clinic, AZ, with special interest in Abdominal Imaging

பா.துவாரகன் ,

அபிவிருத்தி உத்தியோகத்தர் (பொறுப்பு)
மருத்துவ அருங்காட்சியகம் மற்றும்
தொலைமருத்துவப் பிரிவு
போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்

# வடபகுதியில் தொலைமருத்துவ சேவை வழங்கும் விசேட மருத்துவ வல்லுநர்கள்

1963 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கொழும்பில் பிறந்த குமரேசன் சந்திரசேகரன் தனது பாடசாலைக் கல்வியை கொழும்பு ரோயல் கல்லூரியில் நிறைவு செய்து சிம்பாபேயிலுள்ள கொட்பிரி ஹக்கின்ஸ் மருத்துவக் கல்லூரியில் (Godfrey Huggins Medical School, Zimbabwe) பயின்று 1985 ஆம் ஆண்டு மருத்துவப் பட்டத்தைப் பெற்றார்.

அமெரிக்காவில் வசிக்கும் குமரேசன் சந்திரசேகரன் அமெரிக்காவில் முதல்நிலை மருத்துவமனையாக விளங்கும் மையோ கிளினிக்கில் விசேட கதிரியக்கவியல் மருத்துவ நிபுணராகக் கடமையாற்றுகின்றார். 2016 ஆம் ஆண்டு முதல் கதிரியக்கவியல் பேராசிரியராக (Professor of Radio logy) பதவி உயர்வு பெற்றுள்ள குமரேசன் அமெரிக்காவிலுள்ள பல்வேறு கதிரியக்கவியல் சங்கங்களின் பணிப்பாளர் சபைகளிலும் தலைமைப் பொறுப்பிலும் பதவி வகிக்கின்றார்.

ஒருவருக்கு ஏற்பட்ட நோயைக் கண்டறிவதில் உடல் உள்ளுறுப்புக்களை ஆய்வு செய்யும் கதிரியக்கவியல் பரிசோதனை (Radiology Imaging) என்பது பிரதானமானதாக விளங்குகின்றது.


பேராசிரியர் குமரேசன் , வயிற்றுடன் தொடர்புடைய கதிரியக்கவியல் (Abdominal Imaging) பிரிவில் விசேட நிபுணத்துவம் பெற்றவர். குறிப்பாக வயிற்றுப் பகுதியில் ஏற்படும் புற்றுநோயைக் கண்டறிவதிலும் வயிற்றுப் பகுதியில் ஏற்படும் சிக்கலான புற்றுநோய்க்கட்டிகளை சத்திர சிகிச்சை செய்து அகற்றிய பின்னர் மேற்கொள்ள வேண்டிய சிகிச்சைகள் பற்றிய தீர்மானம் மேற்கொள்வதிலும் விசேட நிபுணத்துவமும் அனுபவமும் பெற்றவர் . மேலும் கதிரியக்கவியல் வழிகாட்டலில் மரபணு மூலக்கூறுகளின் அடிப்படையில் புற்றுநோய்களை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்படும் இழைய மாதிரிகளைப் பெற்றுக் கொள்ளும் செயல்முறையிலும் உடலில் தேங்கியிருக்கும் வேண்டாத திரவங்களை வெளியேற்றும் செயல்முறையிலும் விசேட நிபுணத்துவம் பெற்றவர். பேராசிரியர் குமரேசன் சந்திரசேகரன்இன்று உலகில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய முன்னணி கதிரியக்கவியல் பேராசிரியர்களில் ஒருவராக மிளிர்கிறார்.


பேராசிரியர் குமரேசன் , வயிற்றுப் பகுதி கதிரியக்கவியல் படங்களை ஒப்பிட்டு மதிப்பீடு செய்து இதுவரை 170 க்கும் மேற்பட்ட மருத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளை பிரசுரித்துள்ளதுடன் 14 நாடுகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் 70 க்கும் மேற்பட்ட விரிவுரைகளையும் நிகழ்த்தியுள்ளார். கதிரியக்கவியல் துறைசார்ந்த 3 நூல்களை எழுதியுள்ளதுடன் 20 நூல்களில் அத்தியாயங்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்கள் அமெரிக்கப் பாட நூல்களாக இடம்பெற்றுள்ளன.

வட அமெரிக்க கதிரியக்கவியல் சங்கம் 2013, 2014, 2016, 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் சிறந்த ஆசிரியர்களாகத் தெரிவு செய்தவர்களில் பேராசிரியர் குமரேசனும் ஒருவர். குமரேசன் சந்திரசேகரன் கற்பித்தலில் காண்பித்த சிறந்த மேதகைமைக்காக 2012 இல் 'இன்டியான மருத்துவப் பல்கலைக்கழகத்தின்' இயக்குநர் சபை விருதையும் பெற்றுள்ளார்.

### இலங்கையின் மருத்துவ வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்திய யாழ். போதனா மருத்துவமனை

யாழ். போதனா மருத்துவமனையில் அமைந்துள்ள மருத்துவ அருங்காட்சியகம் மற்றும் தொலைமருத்துவப் பிரிவானது (Jaffna Medical Museum & Telemedicine Unit) யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியின் தூரநோக்குச் சிந்தனையில் 2018 ஆம் ஆண்டு உருவானது. அருங்காட்சியக அலகில் மருத்துவக் கற்கைநெறிசார்ந்த சர்வதேச நிபுணர்கள் கலந்துகொள்ளும் தொலை மருத்துவப் பயிலரங்குகள், மருத்துவ நிபுணர்களுக்கான நேரலை நிகழ்நிலை சர்வதேசத் தேர்வுகள் முதலான பல்வேறு கல்விச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.



யாழ். போதனா மருத்துவமனையில் இயங்கும் மருத்துவ அருங்காட்சியக தொலைமருத்துவப் பிரிவானது இலங்கையில் வேறு எந்த மருத்துவமனையிலும் இல்லாத தனித்துவமான சேவையை 5 ஆண்டுகளாக வழங்கி வருகிறது. சுகாதார அமைச்சினால் தொலைமருத்துவ சேவையின் முன்னோடி மருத்துவமனையாக யாழ். போதனா மருத்துவமனை அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

இலங்கையின் மருத்துவ வரலாற்றில் யாழ்.போதனா மருத்துவமனையில் அமைந்துள்ள அருங்காட்சியக அலகானது மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் ஏனைய மருத்துவமனைகளில் காணப்படாத வரலாற்று ஆவணங்களையும் பழமை வாய்ந்த உபகரணங்களையும் கொண்டிருப்பதுடன் நவீன தொழில்நுட்பம் வாயிலாக மருத்துவத்தையும், மருத்துவக் கல்வியையும் இன்னோர் நிலைக்கு எடுத்துச் சென்றுள்ளது.

### பேராசிரியர் குமரேசனது அர்ப்பணிப்பு மிக்க நிபுணத்துவ ஆலோசனை

பேராசிரியர் குமரேசன் சந்திரசேகரன் கடந்த 2019 செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி முதல் யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் விசேட மருத்துவ நிபுணர்களுடனும் இலங்கையின் பிறபகுதிகளிலுள்ள மருத்துவமனைகளில் கடமையாற்றும் விசேட மருத்துவ நிபுணர்களுடனும் மற்றும் மருத்துவர்களுடனும் இணையவழி ஊடாக நடைபெறும் தொலைமருத்துவக் கலந்துரையாடல்களில் வளவாளராகப் பங்குபற்றி மருத்துவ நிபுணத்துவ ஆலோசனையைத் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றார். பேராசிரியர் குமரேசன் இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் சிகிச்சை பெற்ற 1000 க்கும் மேற்பட்டவர்களுக்கு வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட சிக்கலான நோய்நிலைகள் தொடர்பாக யாழ்.போதனா மருத்துவமனை மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து கதிரியக்கவியல் தொடர் படங்களை ஆய்வு செய்து நோய்களைக் கண்டறிவதிலும், அவர்களுக்கு மேற்கொள்ளவேண்டிய சிகிச்சைகள் பற்றியும் வழங்கிய மேலதிக நிபுணத்துவ ஆலோசனைகள் விலைமதிப்பிட முடியாதவை.

கடந்த 2019 ஆம் ஆண்டு முதலாக யாழ். போதனா மருத்துவமனையால் ஒழுங்குபடுத்தப்பட்டுத் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் பல்துறைசார் மருத்துவ நிபுணர்கள் கலந்துகொண்ட 284 (27.03.2023 வரை) இணையவழி தொலைமருத்துவ (MultiDisciplinaryTeam TeleradiologyMeetings) கலந்துரையாடல்களில் பேராசிரியர் குமரேசன் இதுவரை 136 கருத்தமர்வுகளில் (Abdominal MDT Teleradiology Meetings) கலந்துகொண்டு தனது நிபுணத்துவ ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்கியுள்ளார். பேராசிரியரது அர்ப்பணிப்பான தன்னார்வ மருத்துவ ஆலோசனையானது குறிப்பாக யாழ். போதனா மருத்துவமனையிலும் மற்றும் தெல்லிப்பழை பாதை புற்றுநோய் மருத்துவமனை (Trail Cancer Hospital, Tellippalalai), வவுனியா பொது மருத்துவமனை முதலான மருத்துவமனைகளில் சிசிச்சை பெற்று வருகின்ற பலருக்கும் பயனுள்ளதாக அமைந்து வருகிறது.

யாழ்.போதனாவில் கடமையாற்றும் கதிரியக்கவியல் விசேட மருத்துவ நிபுணர் (Consultant Radiologist) ஒருவர் பேராசிரியர் குமரேசன் பற்றி பின்வருமாறு மதிப்பிடுகிறார்:

"நாம் ஒரு மருத்துவப் பேராசிரியரிடம் படித்திருக்கிறோம், படிக்கலாம்; ஆனால் கதிரியக்கவியல் பேராசிரியரிடம் (Professor of Radiology) படிப்பதென்பது எமக்கு ஒரு பெரிய கொடை. அதுவும் உலகின் சிறந்த கதிரியக்கவியல் பேராசிரியராகவும் மருத்துவ நிபுணராகவும் விளங்கும் ஒருவரிடம் படிப்பதும் அவரது ஆலோசனையைப் பெறுவதென்பதும் மிகப் பெரிய ஒரு விடயம். அவரிடம் ஒரு நாளைக்கு ஒருமணிநேரம் படிக்க இலட்சம் ரூபா கொடுத்தாலும் நேரத்தைப் பெறுவதரிது. அவர் கடந்த 4 வருடங்களாக ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் 1 - 2 மணிநேரம் எம்முடன் நிகழ்நிலை காணொலி வழியாக இணைந்திருப்பார். அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் 12 மணிநேர வேறுபாடு. எமக்கு வெள்ளி காலை நேரம் 7.45 என்றால் பேராசிரியருக்கு வியாழன் இரவு 7.15. அவர் தனது கடமையை முடித்து, களைத்திருக்கும் இரவு வேளையில் நாம் தெரிவுசெய்யும் மிகவும் சிக்கலான சி.ரி.எம்.ஆர்.ஐ தொடர் படங்களை எம்மோடு இணைந்து பொறுமையாகப் பார்வையிடுவார். அவரது ஆலோசனையை, கருத்தைப் பெறுவது மிகவும் பெறுமதி வாய்ந்ததும் அரிதானதுமாகும். சில நாள்களில் பேராசிரியர் 15 முதல் 20 வரையான நபர்களது சிக்கலான சி.ரி.எம்.ஆர்.ஐ தொடர் படங்களைப் பார்வையிட்டு உறுதியான தீர்மானங்களை வழங்கியுள்ளார்." பேராசிரியர் குமரேசனைப் பற்றி யாழ்.போதனா மருத்துமனையில் கடமையாற்றும் இரப்பை குடலியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் விநாயகமூர்த்தி துஷ்யந்தன் (Consultant Gastroenterological Surgeon) பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"வயிற்றுப் பகுதியில் சத்திரசிகிச்சை செய்வதற்கு முன் சிக்கலான நோய் நிலையுள்ள ஒருவரது நோய் தொடர்பில் பேராசிரியரிடம் கருத்தை வினவும் போது பேராசிரியர் சி.ரி. எம்.ஆர்.ஐ. படங்களைப் பார்த்து குறிப்பிடும் விடயங்கள், நான் அறுவைச் சிகிச்சைக் கூடத்தில் வயிற்றைக் கீறிப் பார்க்கும்போது அவர் கூறியது போன்றே இருக்கும். பேராசிரியது கருத்தினை "MultiDisciplinary Team Teleradiology Meeting" இல் கேட்டபின்னர் நான் மிகுந்த நம்பிக்கையுடன் சத்திரசிகிச்சைக் கூடத்துக்குச் செல்வேன்".

பேராசிரியர் குமரேசன் சந்திரசேகரன் , மருத்துவத்துறையில் இப்பிராந்தியத்தில் சிகிச்சை பெறும் மக்களுக்கு ஆற்றிவரும் அர்ப்பணிப்பு மிக்க தனித்துவமான சேவையானது ஈடிணையற்றது.

### சர்வதேச நரம்பியல் சத்திரசிகிச்சை பேராசிரியர்கள் கதிரியக்கவியல் நிபுணர்கள் வழங்கும் ஆலோசனை

யாழ். போதனா மருத்துவமனையில் நடைபெறும் மேற்குறிப்பிட்ட பன்னாட்டு நிபுணர்கள் பங்குபெறும் தொலைமருத்துவக் கலந்துரையாடல்களில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, நோர்வே, அமெரிக்கா முதலான நாடுகளில் வசிக்கும் பேராசிரியர்களும் துறைசார் விசேட மருத்துவ நிபுணர்களும் யாழ்.போதனா மருத்துவமனை மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து 1250 க்கும் மேற்பட்டவர்களின் சிகிச்சை தொடர்பில் ஆலோசனைகளை வழங்கியுள்ளனர்.

யாழ். போதனா மருத்துவமனையில் கடந்த 4 ஆண்டுகளில் மொத்தமாக 2250 க்கும் மேற்பட்டவர்களது கதிரியக்கவியல் படங்கள் துறைசார் நிபுணர்கள் கலந்துகொண்ட பூகோள கருத்தமர்வில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
02 ஏப்ரல் 2023






அ. துவாரகன்,
தரம் 11 .
யா/ அச்சுவேலி
மத்திய கல்லூரி



A. சகீதா,
தரம் 10 .
யா/ மந்துவில்
ஆர்.சி.ரி.எம்.




எஸ். அசுசன்
தரம் 3B.
யா/செட்டித்தெரு
ம.ம.த.ம.





ஷஸ்மிகா செந்தூராஜ்
தரம் 7
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை



பா. ஆதேஷ்,
தரம் -3
யா/இந்து ஆரம்பப்
பாடசாலை




## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# காஸாவும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2009 க்குப் பின்னர் நூறு குடும்பங்கள் மாத்திரமே மீள குடியேறியுள்ளன. தற்போது ரணில் அரசாங்கத்தில் தென்னமரவாடி கிராமத்தைக் கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரித்து பதவிஸ்ரீபுர எனப்படும் திருகோணமலையின் சிங்கள பிரதேசசெயலாளர் பிரிவு ஒன்றில் இணைக்கும் ஏற்பாடுகள் இடம்பெறுவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

## தொடரும் பாராமுகம்

அரசியல் ரீதியாகவும் சிங்கள உயர் அதிகாரிகள் மட்டத்திலும் பிக்குமாரை உள்ளடக்கி அதிகாரபூர்வமற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள குழு ஒன்று கொழும்பு நிர்வாகத்தின் கீழ் இந்தத் திட்டங்களை முன்னெடுப்பதாக அறிய முடிகின்றது. இந்தப் பின்புலத்திலேதான் வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம் உடைக்கப்பட்டமையும் நீதிமன்ற உத்தரவை மீறி முல்லைத்தீவு குருந்தூர் மலையில் விகாரை கட்டப்படுவதையும் அவதானிக்கமுடியும். 1948 ஆம் ஆண்டில் ஒருதலைப் பட்சமாகச் சுதந்திரம் வழங்கிவிட்டு வெளியேறிய பிரித்தானியர் இன்றுவரை ஈழத்தமிழர் அரசியல் நிலைமை பற்றிச் சிந்தித்ததாக இல்லை. அதேபோன்று 1947 ஆம் ஆண்டில் பலஸ்தீனம் , யூதர் மற்றும் அரபு பகுதி என இரண்டாக மாற ஐ.நா. வாக்களித்தது ஜெருசலேம் சர்வதேச நகரமானது. [illegible] பட்டது. ஆனால் அரபுத் தரப்பில் ஏற்கப்படவில்லை. இதனால் பிரித்தானிய ஆட்சியாளர்கள் அங்கிருந்து வெளியேறினர். யூதத் தலைவர்கள் இஸ்ரேல் உருவானதாக அறிவித்தனர்.

1967ஆம் ஆண்டு ஜூனில் எகிப்து, ஜோர்தான், சிரியா, லெபனான் என்பனவற்றின் மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புடன், இஸ்ரேல் மேற்கொண்ட ஆக்கிரமிப்புப் போரில் காஸா இஸ்ரேலின் ஆக்கிரமிப்பாக மாறியது. அன்றில் இருந்து இன்றுவரை காஸா மக்கள் அடக்குமுறைகளுக்கு உட்பட்டுள்ளனர்.

மிக நுட்பமாக காஸாவிலும் மேற்குக் கரையிலும் இஸ்ரேலின் நில அபகரிப்புத் தொடருகின்றது. இதேபோன்று தமிழர்கள் நடத்திய போரும் 2009 இல் அமெரிக்க -இந்திய, சீன அரசுகளின் ஒத்துழைப்புடன் இல்லாமல் ஒழிக்கப்பட்டது.

அதன் போர் முடிவுக்கு வந்தபின்னரான பதின்மூன்று ஆண்டுகளில் இராணுவ ஆக்கிரமிப்புகளும் அச்சுறுத்தல்களும் மற்றும் காணி அபகரிப்புகள் - குடியேற்றங்களும் தொடருகின்றன. சிங்கள ஆட்சியாளர்கள் அதற்கு ஒத்துழைக்கின்றனர்.

1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீ[illegible]ன்றாவது திருத்தச் சட்டத்தை உ[illegible]வரை தமிழர் பகுதிகளில் இ[illegible]ளுக்கு எதிராக ஒரு வார்த்தையேனும் [illegible]வில்லை. மாறாக தமிழ்த்தேசியக் கோட்பாட்டை [illegible] [illegible]படுகின்றது. [illegible] ஈழத்தமிழ சமய அறிஞர்கள் சிலர் புரிந்துகொள்ள மறுக்கின்றனர்.

ரணில் அரசாங்கத்துக்கு எதிராகக் கொழும்பில் சிங்களவர்கள் நடத்தும் போராட்டதுக்கு. தமிழர்களின் ஆதரவை சிங்கள இடதுசாரிகள் கேட்கின்றனர்.

தமிழ்த்தேசியக் கட்சிகள் மதில்மேல் பூனைபோன்று பார்த்துக் கொண்டிருக்கின்றன. தற்போது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுக்கு எதிராக இஸ்ரேலிய மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். ஆனால் பலஸ்தீனியர்கள் 'இடதுசாரி இஸ்ரேலியர்களின்' போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவில்லை. ஏனெனில் அது இஸ்ரேலிய மக்களின் பிரச்சினை.

அத்துடன் பலஸ்தீன மக்களை ஓர் இனமாகக்கூட ஏற்கும் மன நிலையில் இஸ்ரேலிய மக்களும் இல்லை. ஆகவே தற்போது அரசின் அடக்கு முறை என்று கோஷமிட்டுக் கொண்டு இஸ்ரேல் மக்கள் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவு கொடுக்கமுடியாது என்பதை பலஸ்தீனிய ஆதரவு சமூகவலைத்தளங்களில் காணமுடியும்.

ஆனால் ஈழத்தமிழர் சார்பான தமிழ்த்தேசியக் கட்சிகள் 2009 க்குப் பின்னர் அவ்வப்போது சிங்கள ஆட்சியாளர்களுடன் இணைந்து தமது கோரிக்கையின் முக்கியத்துவத்தைக் குறைத்துள்ளன.

சிங்கள எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து அரசியல் வேலைகளில் ஈடுபடுகின்றன. இதனாலேயே சிங்கள மயமாக்கல் நடவடிக்கைகள் துணிவோடும் சட்டரீதியாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அ[illegible]க - இந்திய அரசுகளும் ஈழத்தமிழர் விவகாரம் கு[illegible] சிங்கள ஆட்சியாளர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்குத் தமிழ்த்தேசியக் கட்சிகளின் இந்த நிலையற்ற கொள்கையும் காரணமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுவில் அரவிந்தன்



# கடவுள் தான் அனுப்பினாரா?

ஓட்டிச தின

சஞ்சீவி சிறுகதை

மரணவலி என்றால் இதுதானோ? 'என எண்ணியபடி பிரசவ வலியால் துடித்துக் கொண்டிருந்தாள் காவியா. உயிர் வேரைப் பிடித்து உலுப்பிய வலி உச்சத்தைத் தொட்ட போது, சுற்றுச் சூழல் அனைத்தையும் மறந்து பலம் முழுவதையும் திரட்டி 'அம்மா 'என அவளின் கதறல் ஆஸ்பத்திரிச் சுவர்களில் மோதி எதிரொலித்த போது, காவியா உணர்வற்றுப் போனாள். மரத்துப் போன அங்கங்களில் திடீரென புதிய இரத்தம் பாய்வது போன்ற உயிர்ப்பு அவளிடம் காணப்பட்டது. காரணம் குழந்தையின் அழுகைச் சத்தம் அவளின் நாடி நரம்புகளில் புத்துணர்ச்சியை ஏற்படுத்த, மெதுவாகத் தலையைத் திருப்பிப் பார்த்தாள். ரோசாப்பூவுக்குக் குட்டிக் கை, கால் வைத்து விட்டது போல் அருகில் கிடந்தது குழந்தை. அது அழுவதற்குப் பிரயத்தனப்பட்டது. எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான். பிறந்த பின்பு என்ன பிள்ளை எனப் பார்க்கலாம் என்ற திருப்தியோடு இருந்தவள், பிறந்தது ஆண்குழந்தை என்பதை இப்போது அறிந்து மிகவும் பெருமிதமடைந்தாள். பெண் பிறந்தால் ஆரா, ஆண் என்றால் துகிலன் எனவும் பெயர் தீர்மானிக்கப்பட்டதன்படியே மாற்றமின்றி முடிவுசெய்யப்பட்டிருந்தது.

ஆண்டவன் சிலருக்கு அனைத்தையும் அள்ளிக் கொடுத்து விடுகிறான். அப்படியான பாக்கியசாலிகளில் நானும் அடக்கம் என்பதை மனம் உறுதி செய்து மகிழ்ந்தது. படிப்பு, தொழில், அழகு, நல்ல கணவன், ஆண்குழந்தை.. ..... என வாழ்க்கையில் எல்லாமே கிடைத்த திருப்தியில் பூரித்தாள். நாளொரு வண்ணமாய் துகிலன் வளர்ச்சி கண்டான். உறக்கத்திலும் அழுகையும் சிரிப்பும் மாறி மாறி நடக்கும். தேவர்கள் பிள்ளையோடு வந்து விளையாடுவார்கள், பூக்கள் கொடுப்பார்களாம், பிள்ளை சிரிக்குமாம் . திடீரென மறைந்து விடுவார்களாம் , பிள்ளை அழுமாம். குழந்தையும் தெய்வமும் கொண்டாட்டம் என்பது இதைத்தான் 'அம்மம்மா 'தான் நம்பியிருக்கும் ஐதிகங்களை உண்மையைப் போல ஒப்புவிப்பாள். துகிலன் எட்டாம் மாதத்திலே எடுத்து அடி வைத்தான். உறவுமுறைச் சொற்களை அழுத்தம் திருத்தமாக உச்சரித்தான். அவனின் வளர்ச்சியில் காவியாவின் மனமெல்லாம் மத்தாப்பு ஒளிரும். இப்பொழுது துகிலனுக்கு மூன்று வயது முடிந்துவிட்டது.

துகிலனின் நிலை பற்றி மருத்துவ ஆலோசனை பெறுவதற்காகக் காத்திருக்கிறாள். அவளின் முறை வருவதற்கு இன்னமும் இருவர் முன்னால் இருக்கிறார்கள். காத்திருப்பும் பொறுமையும் கையிருப்பிலுள்ள முதல்கள். இவற்றைக் கரையாமல் பாதுகாக்க வேண்டும். நீண்ட பெருமூச்சு வெளியேறக் கொஞ்சம் அமைதியானாள்.
காவியா பட்ட துன்பங்களுக்கு எல்லையே இல்லை. இறுதியில் புத்தர் ஞானம் பெற்றது போன்ற தெளிவும், புரிதலும் உண்டானபோது ஓடும் செம்பொன்னும் ஒன்றாகப் பார்க்கும் பக்குவ நிலையை ஓரளவுக்கு அடைந்து விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.
காவியா ஒரு கொண்டாட்டத்தில் கலந்து கொண்டபோது, திடீரென அவளின் கூந்தலைப் பிடித்து இழுத்து அப்படியொரு தாக்குதலை அவள் எதிர்பார்க்கவில்லை. முரட்டுத்தனமான தாக்குதலினால் நிலைகுலைந்து விட்டாள் என்பதை விட, தாக்கியது துகிலன் என்பதை அவளால் நம்பமுடியவில்லை. அன்று தொடக்கம் அவனின் செயற்பாடுகளில் பொருத்தப்பாடற்ற தன்மையை அவதானித்தாள். 'காவியா, உங்கள் பிள்ளையை சாதாரண பிள்ளைகளோடு வைத்துப் படிப்பிக்க முடியாது. தயவு செய்து மன்னித்து விடுங்கள்.'

முன்பள்ளி ஆசிரியையின் விநயமான வேண்டுகோளை மறுக்கமுடியவில்லை.
அக்கம் பக்கத்தினர் 'விளங்காத பிள்ளை' என்ற முத்திரையும் குத்தி, அவனை விநோதப் பொருளைப் பார்ப்பது போல வேடிக்கையாகப் பார்க்கும் போது அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வரும்.
'பொறுத்துப் போய்விடு காவியா. வம்பை விலைக்கு வாங்கி வருத்தப்படாதே' என உள்மனம் எச்சரிக்கும்.
துகிலனின் பெயர் உச்சரிக்கப்பட்டது. காவியா அவனை அணைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

இருக்கையில் அமரும் படி சைகையால் காட்டிய டொக்டர் தாரணி தாயையும் மகனையும் மாறி மாறிப் பார்த்தாள். காவியா பிள்ளையின் பொருத்தப்பாடற்ற செயல்களை விவரித்தாள். கட்டுப்படுத்த முடியாது கண்களிலிருந்து கண்ணீர் பொலபொலவென உருண்டோடியது.
'ஏன் அழுகிறீர்கள்? உங்களுக்குக் கிடைத்திருப்பது கிவ்ரெட் சைல்ட். கண்ணைத் துடையுங்கோ.'
'எவ்வளவு அவமானங்கள்? அலட்சியங்கள்? வாழ்க்கையே போதுமென்றாகி விட்டது, நீங்களும் புண்படுத்தாதீர்கள் டொக்டர்' முகத்தை இரண்டு கைகளாலும் மூடிக்கொண்டு விசும்பினாள் காவியா.
'சரியான ஸ்ரெஸில் இருக்கிறீர்கள். முதலில் உங்களை மாற்ற வேண்டும்.நியுட்டன், ஐஸ்டீன், அபதுல்கலாம் போன்ற பிரபல்யங்கள் எல்லோரும் இப்படியிருந்து வந்தவர்கள்தான். இதனை ஓட்டிசம் என்பார்கள். இது நோயல்ல குறைபாடு. புலன்உணர்வுகளின் இயக்கத்தில் ஏற்பட்ட இத்தகைய குறைபாட்டைத் தொடர் பயிற்சிகளினால் மாற்றலாம்.'
'எப்படி மாற்றலாம் என்பது தான் தெரியவில்லை டொக்டர்'
'பொறுமை, சகிப்புத்தன்மை வேண்டும். பிள்ளையின் உலகத்துக்குள் நீங்கள் போய்த்தான் மாற்றலாம். முதலில் ஏற்றுக்கொள்ளப் பழகுங்கள். குடும்பத்திலும் சூழலிலும் கட்டாயம் இதை உருவாக்க வேண்டும். அம்மா முதலில் தன்னைத் திடப்படுத்தினால்தான் அது சாத்தியமாகும்'
மருத்துவ ஆலோசனை காவியாவுக்கு ஓரளவு மனத்திடத்தைத் தந்தது.

'காவியா! அடிக்கடி லீவு எடுக்கிறீர்கள். வேலைகளும் ஒழுங்கில்லை. வேலையா? வீடா? என்பதைத் தீர்மானியுங்கள்'
அவளின் மேலதிகாரியின் எச்சரிக்கை இப்படி அடிக்கடி தொடரும். பேச்சுப் பயிற்சி, உடற்பயிற்சி, விளையாட்டுப் பயிற்சி, கணனிப்பயிற்சி என பிள்ளையோடு அவளின் நேரம் கழிந்தது. அலறுவது, அடிப்பது, அடுத்தவர்களைத் தாக்குவது, மற்றவர்களின்முன் இங்கிதம் தெரியாமல் நடப்பது எல்லாம் பிள்ளையிடம் இயல்பாகவே இருந்தன. ஊரில் கட்டாக்காலிக் கண்ணன் பாதையில் போறவர்களைக் கல்லெறிந்து தாக்குவான். பேத்தியாகன் போவோர் வருவோர் முன் அம்மணமாக நிற்பதும், அடிவாங்குவாங்குவதும் இயல்பானது.
'தாயே என்ரை பிள்ளையை எனக்குப் பின் யார் பார்க்கப் போகிறார்கள்? எனக்கு முதலே அவனைக் கடவுள் எடுத்துப்போட வேண்டும்' என அவர்களின் தாய் பிரார்த்திப்பதைக் காதால் கேட்டிருக்கிறாள். விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான வகுப்பில் சேர்த்துப் படிக்க வைக்கவும் விரும்புவதில்லை.
'பிறக்கேக்கை முடமென்றால் பேய்க்கிட்டுக் கழித்தால் தீருமோ' தியாகுவின் அம்மா பிறவியை மாற்ற முடியாதென்பதில் உறுதியாக இருந்தாள். பெற்றோரின் அசட்டைத்தனத்தாலும், பொறுப்பற்ற போக்கினாலும் தான் இப்படியான குழந்தைகள் தெருவுக்கு வந்து அவமானப்படுகிறார்கள். பாவம் இது அவர்களின் குற்றமில்லை. துகிலனை மற்றவர் வியக்கும் வகையில் மாற்றுகிறேன் எனக் காவியா தனக்குத்தானே சத்தியப்பிரமாணம் செய்து கொண்டாள்.

இணையும் கரங்கள் என்ற அமைப்பை உருவாக்கி இப்படியான பிள்ளைகளை சேர்த்துப் பயிற்சிகள் கொடுப்பது, பெற்றோர்மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவது, விசேடதேவையுள்ள பிள்ளைகள் பற்றிய கருத்தரங்குகளில் பங்குபற்றுவது எனக் காவியா தன்னை இயங்குநிலையில் வைத்திருந்தாள்.

வசதிகள் வரும் போது மனிதன் ஆணவம் கொண்டு ஆடுகிறான். யாருக்கு என்ன எழுதயிருக்கிறதென்று யாரறிவார்?
பேச்சுப் பயிற்சிக்கென பிள்ளைகளை அழைத்துவந்து, தங்க வைத்த விடுதியின் முதலாளி பேசிய பேச்சு அவளின் காதில் ஒலித்தபடி இருந்தது.
'இதுகள் மனுசப் பிள்ளைகளா? பிசாசுகள்! இவர்களைப் பார்த்தால் இங்கு வாடிக்கையாளரும் வரமாட்டார்கள். இடத்தைக் காலி பண்ணுங்கோ!'
'மூன்று நாள்களுக்கும் சேர்த்துப் பணத்தை வாங்கிப்போட்டு என்ன கதைக்கிறியள்? உங்களுக்கும் இப்படிப் பிள்ளைகள் பிறக்கலாம். ஏளனம் செய்யாதீர்கள்.'

'எங்கட பிள்ளைகள் டொக்டர், என்ஜினியராக இருக்கிறார்கள்.. இப்படி வரமாட்டார்கள். நீங்கள் போகிறீர்களா? பொலிஸைக் கூப்பிடவா?' பேச்சுப் பயிற்சிச் சிகிச்சைக்காக அழைத்து வந்த பிள்ளைகள் சத்தம் போட்டதை மன்னிக்கமுடியாத முதலாளியின் திமிரான பேச்சினால் காவியா அதிர்ந்து போனாள்.
'துகிலன் பிறந்த போது நானும் தற்பெருமை கொண்டேன். அதற்காக இவ்வளவு பெரிய தண்டனையைக் கடவள் தந்திருக்க வேண்டாம். பாவம் முதலாளி. அவருகக்கு நல்ல புத்தியைக் கொடு தெய்வமே' மனதார அவருக்காக வேண்டினாள்.

● ● ● ●

இப்போது ஐந்து வருடங்களின் பின்னர் அதே விடுதியில் துகிலனோடு வந்திருக்கிறாள். கம்பியூட்டர் பயிற்சி நெறியில் முதல்தரத்தில் சித்திபெற்றதால் கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் பெறுவதற்கான வருகை அது. இப்பொழுது அவனிடம் நிறைய மாற்றங்களை அவதானிக்க முடிகிறது. எல்லாம் காவியாவின் சகிப்புத் தன்மையால் தான் சாத்தியமாகியது.துகிலனிடம் மட்டுமல்ல அவனோடு பயிற்சி பெறும் ஒவ்வொருவரிடமும் தனித்துவமான திறமை இனங்காணப்பட்டது. அவர்களும் கண்டுபிடிப்பாளர்,வடிவமைப்பாளர், தொழில்நுட்பவியலாளர் எனத் தம்மை மாற்றிக் கொள்வதற்காகப் பாடுபடுவதைக் காவியா அறிவாள். அந்தச் சாதனை ஓட்டிசப் பிள்ளைகள் பற்றிய மதிப்பை அதிகப்படுத்தும் என நம்பினாள்.

முதலாளியின் இருக்கையில் இளம்பெண் அமர்ந்திருக்கிறாள்.முதலாளிக்கு வேண்டியவளாக இருக்க வேண்டுமஎன எண்ணிய படியே அவள் அருகில் இருந்த மூன்று வயது மதிக்கத்தக்க சிறுவனைக் கூர்ந்து கவனித்தாள்.அவன் எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.
காவியா அந்தப் பிள்ளையின் அருகே போனாள். அவனின் கவனத்தைத் திசை திருப்ப 'உங்கள் பெயர் என்ன?' அவளின் கேள்விக்குப் பதில் இல்லை. தாயின் கண்கள் கலங்கியிருந்தன.
பிள்ளை என்னவெல்லாம் செய்வானோ, அவற்றையெல்லாம் காவியா அடுக்கினாள். அந்தத் தாயின் கண்க்ள் ஆச்சரியத்தால் விரிந்தன.

'சோதிடம் சொல்வது போல் அத்தனையும் சத்தியமான உண்மை. எப்படிச் சொல்கிறீர்கள்?'

சலிப்புடன் கலந்த புன்சிரிப்பு காவியாவின் கடைவாய்ப்பகுதியில் மின்னியது. என்ன செய்யவேண்டும் என்பதை அக்கு வேறு ஆணிவேறாகக் காவியா விவரித்தாள். முடிந்தால் வீட்டுக்கு வந்து சில பயிற்சிகளைக் காட்டிக் கொடுக்கவும் சம்மதித்தாள்.

'இந்தப் பிள்ளை இப்படித்தான் இருக்கும் அதிகம் ஆசைப்படாதீர்கள்'
பலரும் பலவாறு சொல்லி அவளைப் பலவீனப்படுத்தியிருக்கிறார்கள். முதல் தடவையாகத் தனக்கு நம்பிக்கை தரும் வார்த்தைகள் சொன்ன இந்தப் பெண் தேவகன்னியோ என எண்ணி வியந்தாள். ,அவளைக் கைகூப்பிக் கும்பிட்டபடியே 'கடவுள் தான் உங்களை அனுப்பியிருக்கிறார். இந்த உதவியைக் காலம் முழுவதும் மறக்கமாடடேன்'நன்றியறிதலைத் தலைசாய்த்துத் தெரிவித்தாள் அந்தத் தாய். 'ஓ! கடவுள்தான் அனுப்பினாரா?'காவியாவின் உதடுகள் முணுமுணுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## பல்டி



ஏப்ரல் மாதத்துக்கான நாடாளுமன்ற அமர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இவ்வாரம் ஒரு நாள் மாத்திரமே (ஏப்ரல் 04) சபை நடவடிக்கை இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் தெற்கு அரசியலில் கட்சி தாவல்கள் அரங்கேறக்கூடும் என அரசல் புரசலாகக் கதை அடிபடுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிரணி பக்கம் உள்ள 22 பேர் அரசு பக்கம் தாவவுள்ளனராம். இதில் முதற்கட்டத் தாவலே 4 ஆம் திகதி அரங்கேறவுள்ளதாம். சிலவேளை தமிழ் - சிங்களப் புத்தாண்டு முடிவடையும்வரை இந்தத் தாவல் தள்ளிவைக்கப்படலாம் எனவும் கதை அடிபடுகின்றது . என்றாலும் எதிரணி உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளமை ஏறத்தாழ உறுதியாகியுள்ளது.

அமைச்சரவை மறுசீரமைப்புக்கு பின்னர், தாவுவோருக்கு முக்கியமான பதவிகளும் வழங்கப்படவுள்ளன. தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய பக்கங்களில் இருந்தும் சிலர் 'பல்டி' அடிக்கலாமெனவும் நம்பப்படுகின்றது. தமது சகாக்கள் கட்சி மாறவுள்ளனர் என்ற தகவல் சஜித்துக்கும் கிட்டியுள்ளது. இதனையடுத்து அவர்களுக்கு வேலிபோடும் நடவடிக்கையில் சஜித்தும் ஈடுபட்டுவருகின்றாராம்.

## சலசலப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவுக்கும், அந்தக்கட்சியின் மொறட்டுவ மாநகரசபையின் முன்னாள் மேயர் சமன்லால் பெர்னாண்டோவுக்குமிடையில் இடம்பெற்ற காரசாரமான கலந்துரையாடல் தொடர்பான காணொலி சமூகவலைத்தளங்களில் வெளியாகி மொட்டு கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

மே - 09 தாக்குதல் சம்பவம் தொடர்பில் சமன்லால் பெர்னாண்டோவை பலிகடாவாக்கி, ராஜபக்ச குடும்பத்துக்கு வெள்ளையடிப்பு செய்யும் நோக்கிலேயே இந்தக் காணொலி கசியவிடப்பட்டது எனவும், இது திட்டமிட்ட அடிப்படையிலான நாடகம் எனவும் விமர்சனங்கள் எழுந்தன.

இந்த காணொலி வலைத்தளங்களில் வைரலான பின்னர் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவை , சமன் லாலின் மகன்தொடர்புகொண்டுள்ளார்.

" இந்த சம்பவம் எங்களுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. வெளியில் தலைகாட்ட முடியவில்லை. வலைத்தளங்களில் வறுத்தெடுக்கின்றனர். நானும், எனது தந்தையும் ஊடகச் சந்திப்பை நடத்தி உண்மையைக் கூறிவிட்டு கட்சியை விட்டு ஒதுங்குகின்றோம்." என்று சமன்லாலின் மகன் கூறியுள்ளார்.

" தம்பி அவசரப்படாதே, எல்லாம் சரிவரும். நாங்கள் இருக்கின்றோம்." என சனத் நிஷாந்த ஆறுதல் கூறியுள்ளார். இது தொடர்பில் நாமல் ராஜபக்சவுக்கும் சனத் நிஷாந்த தெரியப்படுத்தியுள்ளார். நாமலின் ஆலோசனைப்படி சமன் லாலின் வீட்டுக்கு நேரில் சென்று, ஆறுதல் கூறினார் சனத் நிஷாந்த. அதன்பின்னர் மஹிந்த ராஜபக்சவை தொடர்பு கொண்ட சமன் லால் பெர்ணாண்டோ,

" சேர், மனம் நொந்துபோய் உள்ளேன். கூட்டத்தில் உண்மை நிலைவரத்தைதான் எடுத்துரைத்தேன். ஆனால் பஸில் ராஜபக்ச என்னை கடுமையாக விமர்சித்துவிட்டார்." என கூறி முடிப்பதற்கு முன்னரே, " தம்பி, யாவும் அறிந்தேன். அவசரப்பட வேண்டாம். நான் சமரசப்படுத்தி வைக்கின்றேன் " என்கூறி அழைப்பை துண்டித்தாராம் மஹிந்த.

## டோஸ்



ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடுமையாகத் திட்டு வாங்கினாராம். குறித்த நபர் கல்வித் துறையில் தலையிடுகின்றார் என பல தரப்பில் இருந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்தே ஜனாதிபதி இவ்வாறு 'டோஸ்' கொடுத்துள்ளாராம்.

" உங்களிடம் கட்சிப் பணியைக் கையளித்தேன். அதனைச் சிறப்பாகச் செய்யுங்கள். கல்வித் துறையைக் கவனிப்பதற்கு அமைச்சரும், துறை சார் அதிகாரிகளும் உள்ளனர். அதில் தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்ளவேண்டாம்." என ஜனாதிபதி இடித்துரைத்தாராம்.

## நீடிப்பு

பொலிஸ்மா அதிபர் மற்றும் முக்கியமான சில பிரதி பொலிஸ்மா அதிபர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புலனாய்வுப் பிரிவு ஊடாக இரகசிய அறிக்கை பெற்றுள்ளாராம். இந்த அறிக்கை கிடைத்த பின்னரே தற்போதைய பொலிஸ்மா அதிபருக்கு மூன்று மாத கால பதவி நீடிப்பை அவர் வழங்கினாராம். பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கு பதவி நீடிப்பை வழங்குவதற்கு மொட்டுக் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. அதேபோல புதிய பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிக்குமாறும் பரிந்துரை முன்வைத்திருந்தது. இந் நிலையில் பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுடன், ஜனாதிபதி பேச்சு நடத்தினார்: தேசபந்து தென்னக்கோனுடனும் அவர் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இறுதியாகவே பொலிஸ்மா அதிபரின் அண்மைக்காலச் செயற்பாடுகள் உட்பட மேலும் சில காரணிகளைக் கருத்திற்கொண்டு அவருக்கு பதவி நீடிப்பை வழங்கும் முடிவை ரணில் எடுத்துள்ளார். அடுத்த பொலிஸ்மா அதிபர் என்ற உத்தரவாதம் தேசபந்து தென்னக்கோனுக்கு ஜனாதிபதி தரப்பில் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

**1505-1948 வரை**

**1924 மார்ச்**

இரணைமடுக்குள கட்டுமானப்பணிகள் பூர்த்தியாகின.

**1924 ஜூலை**

ஜே.ஸ்மித் அரசாங்க அதிபராகப் பதவியேற்றார்.

**1924 ஒகஸ்ட்**

கோலாலம்பூரில் யாழ்ப்பாண சிக்கன கூட்டுறவுச்சங்கம் 172 டொலர் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டது.

**1924 செப்ரெம்பர் 10**

நயினாதீவில் தமிழ் முஸ்லிம் கலவரம்.

இந்து பெண் ஒருவர் முஸ்லிமாக மாறியதையடுத்தே இந்தக்கலவரம் இடம்பெற்றது.

சட்டசபைத் தேர்தல் முடிவுகள் வெளியாகின.

**மேல் மாகாணம்**

அருணாசலம் மகாதேவா - 928 வாக்குகள்
டாக்டர் மு.குமாரசாமி - 760 வாக்குகள்
இ.பத்மநாதன் - 569 வாக்குகள்

**மட்டக்களப்பு**

E.R.தம்பிமுத்து - 1165 வாக்குகள்
A.இராசசிங்கம் - 299 வாக்குகள்

**திருகோணமலை**

M.M.சுப்பிரமணியம் - 225 வாக்குகள்
S.தியாகராசா - 98 வாக்குகள்

**வடமாகாணம் தென் பிரிவு**

ஆ. கனகரத்தினம் - 1627 வாக்குகள்
அ.கனகசபை - 1482 வாக்குகள்
J.K.சண்முகம் - 891 வாக்குகள்

**மத்திய பிரிவு**

சு.இராசரத்தினம் - 2116 வாக்குகள்
த. இரமநாதன் - 1386 வாக்குகள்

இவர்களை விட வடமாகாணத்தில் சேர்.பொன்.இரமநாதன், சேர்.வைத்திலிங்கம் துரைசாமி,பாலசிங்கம் ஆகியோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். எட்டு தமிழ் உறுப்பினர்கள் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். மொத்தம் 49 உறுப்பினர்களில் 12 பேர் நியமன (உத்தியோகப்பற்றுள்ள) உறுப்பினர்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்ட 34 பேரும் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள். இவர்களை விட மூன்று உத்தியோகப்பற்றற்ற நியமன உறுப்பினர்கள்.

**1925 மார்ச் 20**

யாழ்ப்பாணம் பொதுநூலக வருடாந்தப்பொதுக்கூட்டம் மாலை 4.30 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.அரசாங்க அதிபர் ஸ்மித் தலைவராகவும், சேர். கனகசபை உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அந்தக்காலத்தில் நூலகம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு முன்பாகவே இயங்கி வந்தது.

**ஏப்ரல்**

முத்துக்குளிப்பு மூலம் ரூபா 596, 396.36 சதம் கிடைத்தது.

**1925 ஏப்ரல் 27**

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் அங்குரார்ப்பண மகாநாடு கீரிமலையில் இருந்த வைத்திலிங்கம் மடத்தில் மூன்று நாட்கள் நடைபெற்றது. ஆரம்பத்தில் மாணவர் காங்கிரஸ் என ஆரபிக்கப்பட்ட இந்த இயக்கம் பின்னர் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணக்கல்லூரியில் கல்வி கற்று வந்த ஹண்டி பேரின்பநாயகம் என்ற மாணவரே தனது நண்பர்களுடன் இணைந்து மாணவர் காங்கிரஸை ஆரம்பித்தார். பல முற்போக்கு அம்சங்கள் இந்த மகாநாட்டில் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. அவற்றில் முக்கியமான தீர்மனங்கள் வருமாறு:-

இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.
இலங்கையின் சுதந்திரத்துக்காக யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் போராடும்.
சாதி ஒழிப்பு
இறக்குமதி செய்யப்படும் பொருட்களை மக்கள் பகிஷ்கரிப்பதுடன் உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்ய முன்வர வேண்டும்
- என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1925 மே 27**

யாழ்ப்பாணத்தில் ஆயுள்வேத பயிற்சிக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.வைத்தியர் பஸ்தியாம்பிள்ளை இந்த ஆயுள்வேதப் பயிற்சிக்கல்லூரியை ஆரம்பிப்பதற்காக முன்னின்று உழைத்தார். யாழ்ப்பாணம் நாகவிகாரையில் பௌத்த இளைஞர் சங்கம் (YMBA) ஆரம்பிக்கப்பட்டது.இதில் தமிழர்களும் இணைந்திருந்தனர்.(அப்போது பௌத்த சிங்களக் குடியேற்றம் இடம்பெறவில்லை. இதனால் இரு பகுதியினரும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்தனர்

**1925 ஜூன்**

யாழ்ப்பணத்துக்கான தொலைபேசி இணைப்பு வசதி

வட்டுக்கோட்டை, மானிப்பாய், காரைநகர், பண்டத்தரிப்பு, சுன்னாகம்,போன்ற பிரதேங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டதுடன் பொதுமக்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கும் (telephone call office)ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

யாழ்ப்பாண நகரசபை (Urban Council) யாழ்ப்பாண (Jaffna Ditrict Council)மாவட்ட சபையாக தரமுயர்த்தப்பட்டது

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குப்பக்கச் சிரிப்பு

கோகுலராகவன்


நரி தந்திரம் மிக்க விலங்கு என அறியப்படுகிறது. இதில் எவ்வளவு உண்மை இருக்கிறது என எனக்குத் தெரியவில்லை. இது அனுபவ ரீதியான தகவலா ? என அடையாளப்படுத்தவும் முடியவில்லை.

ஆனால் காகத்திடம் தந்திர புத்தி அல்லது எதிலும் சந்தேகப்படும் புத்திசாலித்தனமான செயற்பாடு இருப்பதை சாதாரணமாக காணலாம். இரையை உண்ணும் போது பலதரம் யோசித்து உண்பது அதனுடைய இயல்பு. காகம் கரையும்போது பலவிதமாகக் கரையும் இயல்பு கொண்டது. அது தன் குரலை எச்சரிக்கை, அழைப்பு, அச்சம் போன்ற பலவிதங்களில் குரலை மாற்றக் கூடியது. நரி, காகம் முதலியன தந்திரம் மிக்க பிராணிகள் என அறியப்படுகின்றன. மனிதரிலும் இந்தத் தந்திரத் தன்மை மிக உயர்வாகவேயுள்ளது. தந்திரத்தால் ஏமாற்றி பிழைக்கவென ஒரு கூட்டம் உலகில் அலைகின்றது என்பதே உண்மை. சகுனி தனது தந்திரத்தால் பாண்டவர்களை ஏமாற்றி அவர்களது நாட்டைப் பறித்துக் கொண்டாள் என்கிறது மகாபாரதம். எவ்வளவோ அறிவுடைய தருமன் கூட இதில் ஏமாந்து போகின்றான். சகுனி செய்தது ஒருவகை கபடதந்திரம்.

ஆனால் நல்ல தந்திரங்களும் இருக்கின்றன.

இரண்டாம் உலகப்போரை வின்ட்சென்ட் சர்ச்சில் தனது தந்திரங்களால் வென்று ஹிட்லரை இருந்த இடம் தெரியாமல் அழித்தார். உலகம் பெரும் அழிவிலிருந்து மீண்டது. இது ராஜதந்திரம் எனப்படுகின்றது. "ஏன் நேற்று பள்ளிக்கூடம் வரவில்லை" என்று கேட்டால் ஒரு மாணவன் எப்போதும் அழத் தொடங்கி விடுவான். இதனால் யாரும் அவனிடம் காரணம் கேட்பதில்லை. இதுவும் ஒரு தப்பித்துக் கொள்ளும் ஒரு வகையான தந்திரம்தான் .



எனக்கு தெரிந்த ஆசிரியர் ஒருவர் அடிக்கடி விடுமுறை எடுப்பார். தந்தி அடிக்கும் போது காரணம் "மகள் சுகவீனம்"என்று எழுதுவார். ஆனால் அந்த மகள் நாளடைவில் உண்மையில் சுகவீனமானவளாக மாறியது துரதிர்ஷ்டம்தான். இதுவும் ஒரு தந்திரக்கதைதான்.

மணியம் என்கிற சுப்பிரமணியம் நல்ல தொழிலாளி. பலவிதமான பொருள்களைக் கையால் செய்யும் கெட்டிக்காரன். விளக்குமாறு ,தும்புத்தடி, பேணிவிளக்கு, மண்வெட்டிப் பிடி, அகப்பை இப்படி பலவிதமானவற்றை செய்து வாழ்ந்து கொண்டிருந்தார். ஒரு முறை நல்ல தகரம் அகப்பட ஒரு ஐம்பது சூட்டடுப்பு செய்தார். சூட்டடுப்பு என்பது உமி, மரத்தூள் அடைந்து எரிக்க சமைக்க உதவும் அடுப்பு வகை. எரிவாயு தட்டுப்பாடாக வந்த பொது நம்மவர்கள் பாவித்தார்களே அதுதான். 1985 இல் ஒன்று முப்பது, நாற்பது ரூபாவுக்கு விற்கப்பட்டது. ஆனால் விற்க மணியம் அண்ணையால் முடியவில்லை .மணியம் அண்ணையிடம் ஒரு கடைக்காரரும் வாங்க மறுத்துவிட்டனர். சந்தையில் அண்ணையும் சும்மா ஆளில்லை. சந்தையில் சட்டி பானைக்கடை நடத்தும் நாகராசண்ணையிடம் தன் நண்பர்கள் ஒரு ஐந்து பேரை அனுப்பி "சூட்டடுப்பு இருக்கோ? " என்று திரும்பத் திரும்பக் கேட்க வைத்தார். இப்படி இவர்கள் கேட்டதும் நாகராசாருக்கு மணியம் கேட்டது ஞாபகம் வர நாலு காசு உழைக்கலாம் என்று நினைத்தார். மூன்றாம் நாள் கடைக்கார நாகராசர் மணியத்தை கூப்பிட்டு ஐம்பது சூட்டடுப்பையும் வாங்கி கொண்டார். மணியம் சிரிப்பார்.

"ஒரு முப்பது ரூபா செலவோட ஆயிரத்து ஐநூறு ரூவா உழைச்சன்ரா தம்பி "

"எப்படி அண்ணை?"

"அப்ப பனங்கள்ளு போத்தல் ஆறு ரூவாடா "

"அப்படியோ"

"ஓமடா ஐந்து பேருக்கும் ஆளுகொரு போத்தல் கள்ளு வாங்கிக்கொடுத்திட்டு நாகராசாவிடம் "சூட்டடுப்பு இருக்கோ" எண்டு கேட்க அனுப்பினன். அவங்களும் மாறி மாறி கேட்டாங்கள். கிழவர் இதை நம்பிவிக்கலாம் எண்டு முழுக்க வாங்கிட்டார். சூட்டடுப்பு கேட்டவையைக் கூப்பிட்டு "தம்பி சூட்டடுப்பு வந்திட்டுது "என்று சொல்லியும் பார்த்தார்"

" வித்திட்டாரோ? "

"எங்கையடா வித்தது ? தாவாரத்துக்க கிடந்து உக்கினதுதான் மிச்சம்."

"பிறகு ..?"

"நாகராசர் என்னைக்கண்டால் எப்பவும் கிழக்கதான் பார்ப்பார்."

"நீங்கள் "


"நானோ?· நான், மேற்கை பார்த்துச் சிரிப்பன்"

(இன்னும் கதைப்பம்)




இயல்வாணன்

கருணாகரன் நாடறிந்த கவிஞர், சிறுகதை எழுத்தாளர், ஊடகவியலாளர், பத்தி எழுத்தாளர், அரசியல் ஆய்வாளர், சஞ்சிகை ஆசிரியர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர் என்பதற்கப்பால் அவர் ஓர் இலக்கிய இயக்கமாகவே திகழ்ந்தவர். திகழ்பவர். கருணாகரன் இருக்குமிடம் ஓர் இலக்கிய மையமாகவே இருக்கும். கலைஞர்கள், இலக்கியகர்த்தாக்கள் பலரும் அவரைத் தேடி வருவார்கள். கலை, இலக்கியம் தொடர்பான விவாதங்களை அங்கு தினமும் எதிர்பார்க்கலாம். அடையா நெடுங் கதவாக இருக்கும் அவரது இல்லத்தை நாடி வந்து அவருடன் உரையாடி, விருந்தோம்பிச் செல்வது இலக்கியகர்த்தாக்களின் வாடிக்கையாயிருந்தது. அதனால் எந்த நாளிலும் ஒரு தமிழ்ச்சங்கம் அங்கு இயங்கும். பின்னாளில் முரண்பட்டுக் கொண்டவர்கள் உட்பட பலரை எழுத்துலகுக்குள் இழுத்து விட்டவர், வழிகாட்டியவர் அவர் என்பது மிகைக் கூற்றல்ல. இயக்கச்சி என்னும் கிராமத்தில் பிறந்ததால் 'இயக்கச்சி கருணாகரன்', என்று ஆரம்பத்தில் அறிமுகமான அவர் நீண்ட காலமாக வெளிச்சம் கலை இலக்கிய சமூக இதழின் ஆசிரியராக இருந்தமையால் 'வெளிச்சம் கருணாகரன்' என்ற அடைமொழிக்குள்ளாலும் அறியப்பட்டவர். வெளிச்சத்துக்கூடாக பல எழுத்தாளர்களின் படைப்புகளைச் செம்மைப்படுத்தி, அவர்களை வாசிக்கத் தூண்டி, தேர்ந்த படைப்பாளிகளாக உருவாக்கியவர். புதுவை இரத்தினதுரையுடன் இணைந்து பல கலை, இலக்கிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்தியவர். பல படைப்பாளிகளை நேர்கண்டு வெளியிட்டவர். அதுபோல தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் பணிப்பாளராகவும் அவர் இருந்துள்ளார்.




விடுதலைப் போராட்டத்தில் 1983ஆம் ஆண்டு ஈழப் புரட்சி அமைப்பில்(ஈரோஸ்) போராளியாக இணைந்து செயற்பட்ட அவர் அந்த அமைப்பின் பொதுமை பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் இருந்தவர். பல வெளியீடுகள் வெளிவருவதற்கும் உதவியவர்.

1963 செப்ரெம்பர் 5ஆந் திகதி பிறந்த அவருக்கு இவ்வாண்டு அறுபது அகவை நிறைகின்றது. 1981இல் தினகரனில் வெளிவந்த கவிதையுடன் எழுத்துலகில் பிரவேசித்த அவர் ஆரம்பத்தில் மல்லிகையிலும், தாயகத்திலும் கவிதைகள் பலவற்றை எழுதினார். வெளிச்சத்தில் பிரஹலாத ஹேமந்த் என்ற பெயரில் சிறுகதைகள் பலவற்றை எழுதினார். அத்துடன் ஈழநாதம் பத்திரிகையில் வெளிவாசல் பாலன் என்ற பெயரில் சமூகவியல் சார்ந்த பத்தியினை எழுதினார். வீரகேசரி பத்திரிகையில் கிருஸ்ணமூர்த்தி அரவிந்தன் என்ற பெயரில் அரசியல் கட்டுரைகள் பலவற்றை எழுதினார்.

பின்னர் அவரது அரசியல் கட்டுரைகள் சொந்தப் பெயரில் வெளிவந்தன. கிராமங்கள் பற்றிய ஒரு பத்தியினை சிக்மலிங்கம் றெஜினோல்ட் என்ற பெயரில் புதுவிதியில் எழுதினார். போரினால் அழிந்து போன கிராமங்களை எழுத்தினால் மீள உயிர்ப்பிக்கின்ற கட்டுரைகளாக இவை உள்ளன.

அத்துடன் ஆரதி என்ற பெயரில் சினிமா சார்ந்த கட்டுரைகளை ஈழநாதம் பத்திரிகையில் எழுதினார். விமலேஸ்வரி, சுலோசனா தேவராசா, காஞ்சனா வரதரூபன், மக்ஸ்வெல் மனோகரன், ஞானமுத்து, விதுல் சிவராஜா போன்ற புனைபெயர்களிலும் அவர் எழுதியுள்ளார்.

பல இலக்கியக் கட்டுரைகளையும், நூல் விமர்சனங்களையும் எழுதியுள்ளார். அத்துடன் நூற்றுக்கு மேற்பட்ட இலக்கியக் கூட்டங்களையும், நூல் அறிமுக நிகழ்வுகளையும், திரைப்படக் காட்சிகளையும் நடத்தியுள்ளார். கிளிநொச்சி வாசகர் வட்டம், மக்கள் சிந்தனைக் களம் ஆகிய அமைப்புகளையும் உருவாக்கியுள்ளார்.

கருணாகரனின் கவிதைகள் பல நூல்களாக வெளிவந்துள்ளதுடன் ஆங்கிலம், பிரெஞ்சு, மலையாளம், கன்னடம், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவரது 'யாருடைய வீடு' கவிதை தரம் 11 பாடநூலிலும் இடம்பெற்றிருந்தது. ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்(1999), ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள்(2003) பலியாடு(2009), எதுவுமல்ல எதுவும்(2010), ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள்(2012), நெருப்பின் உதிரம்(2014), இரத்தமாகிய இரவும் பகலுமுடையநாள்(2015), படுவான்கரைக் குறிப்புகள் நெடுங்கவிதை(2015), உலகின் முதல் ரகசியம்(2019), நினைவின் இறுதிநாள்(2019), கடவுள் என்பது துரோகியாய் இருத்தல்(2021), மௌனத்தின் மீது வேறொருவன் (2021), இரவின் தூரம்(2021) ஆகிய 13 கவிதைத் தொகுதிகள் ஏலவே வெளிவந்துள்ளன.

இவரது 14 சிறுகதைகள் கொண்ட தொகுப்பு வேட்டைத் தோப்பு(2014) என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. கிராமங்கள் பற்றிய பத்திகளின் தொகுப்பு இப்படியும் ஒரு காலம்(2014) என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. வன்னிக் கிராமங்களின் இயல்பான வாழ்வைப் பேசும் இந்நூல் சிங்களத்தில் மதக வன்னிய(வன்னி நினைவுகள்) என்ற தலைப்பில் அனு சிவலிங்கத்தால் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளிவந்து இரண்டு பதிப்புகளையும் கண்டுள்ளது. அன்பின் திசைகள் (2018) என்ற பத்திகளின் தொகுப்பு நூலும், கவிதைகள் பற்றிய கட்டுரைகள் அடங்கிய எதிர் நூலும் (2022) வெளிவந்துள்ளன.

இவரால் சாமானிய மனிதர்கள் முதல் கலைஞர்கள் வரை மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களின் தொகுப்பு புகைப்படக்காரன் பொய் சொல்வதில்லை (2016) என்ற நூலாக வெளிவந்துள்ளது. தொகை நூல் உட்பட பல நூல்கள் இவ்வாண்டு வெளிவரவுள்ளன. மகிழ் வெளியீட்டகத்தினூடாக பல நூல்களை நேர்த்தியாக வெளியிட்டவர்.

எஸ்போஸ் தொடர்பான அவரது கட்டுரை நூல் அவர்கள் அவனைச் சுட்டுக் கொன்றனர்(2016) என்ற சிறுநூலாக வெளிவந்தது. பின்னர் சித்தாந்தன், ப.தயாளனுடன் இணைந்து எஸ்போஸ் படைப்புகள் (2016) நூலைத் தொகுத்தார். வெளிச்சம் கவிதைகள், வெளிச்சம் சிறுகதைகள், வானம் எம்வசம், செம்மணி, ஆனையிறவு, குவார்ணிக்கா முதலான தொகுப்புகளும் அவரது பங்களிப்பிலானது.

கருணாகரனின் கவிதைகள் எளிமையான மொழியில் ஆழ்ந்த பொருளுணர்த்தும் தன்மை கொண்டன. மிக லாவகமாக உணர்வுத் தொற்றலைச் செய்வன. ஒரு பயணியாக வழியில் கண்டடைந்த நினைவுகளை மீளுருவாக்கம் செய்கிறார்.

அவரது இரவின் தூரம் தொகுதி விபத்தில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையிலும், பின்னர் வீட்டிலும் ஓய்வாக இருந்த வேளையில் அந்த வலியை ஏனையவர்களுக்கும் தொற்ற வைக்கக்கூடிய வகையில் எழுதப்பட்ட கவிதைகளாகும். தூக்கமற்ற இரவுகளின் பாடல், வைத்தியசாலைக் குறிப்புகள் என்ற இரு பகுதிகளான கவிதைகள் இந்தத் தொகுதியில் உள்ளன. அவ்வாறே கடவுள் என்பது துரோகியாயிருத்தல் நூலானது மத்தியூ என்ற பாத்திரத்தை மையப்படுத்தி எழுதப்பட்ட கவிதைகளின் தொகுதியாகும். இதனை தமிழின் முதல் முயற்சியாக அடையாளங் காணும் பேராசிரியர் அ.ராமசாமி 'கடந்த காலத்தை நிகழ் காலத்துக்குள் இழுத்து வரும் வேலையைச் செய்பவராக இருப்பதே கருணாகரனின் தனித்த அடையாளம்' என்று சொல்வது முக்கியமானது.

கருணாகரனின் அருளப்பட்ட மீன் கவிதைத் தொகுதி அண்மையில் வெளிவந்துள்ளது. இதிலுள்ள எந்தக் கவிதைகளுக்கும் தலைப்பு இல்லை. இதற்கு முன்னைய தொகுதிகள் சிலவற்றிலும் தலைப்பற்ற கவிதைகள் பலவுள்ளன.

எனக்கு அருளப்பட்ட மீன்/இந்தக் கடலில் நீந்திக் கொண்ருக்கிறது/ இந்தக் கடலுக்கென்று அருளப்பட்டவன்/ கரையில் நிற்கிறேன்/ பட்டப்பகலில் தோன்றா நட்சத்திரம் / உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது/ மீனை/ என்னை/ கரையை/ மீன் அறியுமா என்னை/தன்னை/ இந்தக் கடலை/ கரையை/ அதன் அருளை? / அருளப்பட்ட மீன் தானென்பதை? என்று ஒரு கவிதை சொல்கிறது.

சீருடையைக் கழற்றி வைத்த பிறகு/ தானொரு பொலிஸ்காரன் / என்பதை மறந்து விட்டார் குணசேகர/ நீங்கள் ஒரு பொலிஸ்காரர்தான் / என்று அவரை நம்ப வைப்பதற்குப் பெரும்பாடாயிற்று/ பிறகொருநாள் சீருடையிலும் / தானொரு பொலிஸ்காரன் / என்பதை மறந்து விட்டார் குணசேகர/ அன்றுதான் அவர் மிகச் சரியான / பொலிஸ்காரராக இருந்தார் / அன்றிலிருந்து நீங்கள் பொலிஸ்காரரில்லை/ என்றது பொலிஸ் தரப்பு/ தான் எப்போது பொலிஸ்காரராக இருந்தேன் என்பதை/ அடியோடு மறந்து விட்டார் குணசேகர/ மனிதருக்குச் சிறகு முளைப்பது இப்படித்தான் என்று இன்னொரு கவிதை பேசுகிறது. இலங்கையில் நடந்த அரகலய எழுச்சியின் போது நடைபெற்ற ஒரு சம்பவம் இப்படிக் கவிதையாகியிருக்கிறது.

யாருக்காகவோ பெய்கிறது மழை/ நானும் நீயுந்தான் நனைகிறோம் / நம்முடைய சைக்கிளும் நனைகிறது /அதோ இரண்டு மைனாக்கள் / அவையும் நனைகின்றன/ அவைக்கும் மழைக்கும் என்ன சம்பந்தம்? ..... சிந்தப்பட்ட குருதியை/ புதைமேட்டை/ அழியா நினைவுகளை/ கழுவிச் செல்கிறது வெள்ளம்/ யாருக்காகவோ பெய்யும் மழை/ யாருக்கோ மட்டும் பெய்வதில்லை என்று இன்னொரு கவிதை. இவ்வாறு சொற்கள் இழைந்து வரும் பல கவிதைகள் இந்நூலில் உள்ளன. ஆயினும் கருணாகரனின் கவிதைகளின் சொற்செறிவை மிகுந்த கவிதைகளாக இரவின் தூரம், அருளப்பட்ட மீன் தொகுதிகளை என்னால் பார்க்க முடிகிறது.


**நூற் குறிப்பு : அருளப்பட்ட மீன் கவிதைகள் / பரிசல் வெளியீடு/ 96 பக்கங்கள் / இந்திய ரூபா 120.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல் கடவுள்

15

○ இராகவன்



பேரழகி மீனம்! உன் உடலிலிருந்து சொற்ப நறுமணத்தையாவது உருவாக்கித் தர இயலுமா? மெய்யாகவே உன் மேனியிலிருந்து உருவாகும் வாசனைக்கும் பேரழகுக்கும் தொடர்பேதுமுண்டோ? உன்மேனியிலிருந்து உருவாகி வரும் அந்த வாசனை தான் உனக்கானது என்பதை நீ உணர்ந்து கொள்வதிலிருந்து தான் ஞானம் பிறக்கிறது மீனம்! பேரழகுக்கும் அழகின்மைக்குமிடையே மிளிர்ந்து கொண்டிருக்கிறது ஞானம். பேரழகென்பது யாதென எப்போதாவது உன்னை நீயே கேட்டுக் கொண்டதுண்டா மீனம்? இப்போது தயவு செய்து இதைக் கேள்! பேரழகென்பதும் அழகின்மையென்பதும் அவரவர் உருவாக்கும் கற்பனையேயன்றிப் பிறிதொன்றுமேயில்லை. பேரழகுக்கும் அழகின்மைக்கும் உன்னிடம் என்னென்ன அளவுகோல்கள் கை வசமிருக்கிறதென்பதை எனக்குத்தயைகூர்ந்து தெரிவிப்பாயா? அதைத் தான் நான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் மீனம்!'

'மெய்யாகவே இதற்காக மட்டும் தான் வந்தீர்களா? இதற்காக மட்டும் தான் வந்திருந்தால் ஏன் இந்தவிதமாகவெல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதற்காக மட்டுமே வந்திருக்க வேண்டியவர்களில் மிகப் பெரும்பாலோனோர் வருகை தராது இருப்பது ஏன்? நீங்கள் முன்வைக்கக் கூடிய காரணங்கள் எல்லாம் நகைப்புக்கிடமானவை. சிறுபிள்ளைத்தனமானவை என்பதை நீங்கள் நன்கு உணர்ந்திருக்கிறீர்கள். மகுட வாக்கியங்களைத் தடங்கல் இன்றி ஒப்புவிக்கக் கூடியவர்களாக நீங்கள் இருந்து வருவது என்றென்றும் உங்களுக்குக் கவசமாகிறது. மெய்யாகவே இதற்காக மட்டும் தான் வந்தீர்களா? இதற்காக மட்டும் தான் வந்திருந்தால் கபடத்தனம் இருக்காது. ஆனால் நீங்களோ கபடம் மிகுந்தவர்.

> மகுட வாக்கியங்களைத் தடங்கல் இன்றி ஒப்புவிக்கக் கூடியவர்களாக நீங்கள் இருந்து வருவது என்றென்றும் உங்களுக்குக் கவசமாகிறது. மெய்யாகவே இதற்காக மட்டும் தான் வந்தீர்களா? இதற்காக மட்டும் தான் வந்திருந்தால் கபடத்தனம் இருக்காது. ஆனால் நீங்களோ கபடம் மிகுந்தவர்.

இதற்காக மட்டும் தான் வந்திருந்தால் பார்வை வெளியே நிலைத்திருக்கும். ஆனால் பார்வையோ உள்ளே நிலைத்திருக்கிறது. உண்மையில் இதற்காக மட்டும் தான் வந்திருந்தால் முகமூடி தேவைப்படாது. நீங்களோ உறங்கும் போதே முகமூடி அணிந்து கொண்டிருக்கிறீர்கள். மெய்யாகவே இதற்காக மட்டும் வந்திருந்தால் எந்தவோர் அறிமுகத்துக்கும் தேவை இருக்காது. நீங்களோ எப்போதும் உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளவே நாட்டமாயிருக்கிறீர்கள். மெய்யாகவே நீங்கள் இதற்காக மட்டும் வந்திருக்கவில்லை என்பதை நன்கு தெரிந்திருந்தும் கேட்போர் உங்களது தோற்றத்துக்கே அச்சமடைந்து மௌனமாக இருக்கின்றனர். நீங்கள் விரும்புவதும் கூட அது தானே? மெய்யாகவே இதற்காகத் தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால் உடனடியாக மறுத்துவிடுவது தான் உங்களது வழக்கமாக இருக்கிறது. எதற்காக வந்திருப்பதாகத் திரும்பத் திரும்ப மந்திரம் போல் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களோ அதை நோக்கி என்றைக்குமே செல்லாமல் எதிர்த்திசையில் சென்று கொண்டிருக்கிறீர்கள். ஏனென்றால் நீங்கள் எதற்காக வந்திருப்பதாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்களோ அதை நிறைவேற்றிக்கொள்ள எத்திசை நோக்கி நகர வேண்டுமென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. மெய்யாகவே நீங்கள் இதற்காக மட்டும் வந்திருந்தால் நகரவேண்டிய திசை எதுவென்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்திருக்கும்.

ஆனால் மெய்யாகவே நீங்கள் இதற்காக வரவில்லை என்பதால் இதை நிறைவேற்றிக்கொள்ள நகரும் திசையை அறிந்திராது இருக்கிறீர்கள். மெய்யாகவே எதற்காக வந்தீர்களோ அதை நிறைவேற்றிக்கொள்ளும் திசையை நோக்கி மட்டும் நகர்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்கும் தெரியும். உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் தெரியும். ஆனால் உங்களது தோற்றத்தைக் கண்டு எதையும் கேட்காமல் உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் விலகிச்செல்கின்றனர். அதைத்தான் விரும்புகிறீர்கள். அதையே தான் எதிர்பார்ப்பாகவும் கொண்டிருக்கிறீர்கள் உங்களைக் கடவுளாக உணர்ந்திருக்கிறீர்கள் என்பதை மறுப்பதற்கு இடமில்லை. ஆனால் இதை நீங்கள் மறுத்து வருகிறீர்கள். அது தானே உங்களுக்கு எப்போதும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். மெய்க்கான காலம் என்பது எப்போதும் கற்பனையாக மட்டும் தானே இருந்து வந்திருக்கிறது.'

'அவர் சொல்லியிருப்பது சாதாரணமாகத் தோன்றலாம். அவரது நிலைக்குள்ளாகிப் பாருங்கள். அது சாதாரணமாகத் தோற்றம் கொள்ளக்காணலாம். அவருக்கென ஒதுக்கப்பட்டிருப்பதைப் பிறிதொருவர் எடுத்துக் கொண்டிருக்கிறார். இதைப்பற்றி முறையிட்டுத் தீர்வுகாணும் நிலை கொள்ளவும் ஏதுமில்லை. இங்கே சிரிக்கவும் தோன்றும். உங்களுக்கென ஒதுக்கப்பட்டிருப்பதை இன்னொருவர் எடுத்துக் கொண்டிருந்தால் நீங்கள் மேற்கொள்ளக்கூடியதென்ன? அநேகமாக வன்முறையில் ஈடுபடுவதாக முடிவுறலாம். அது சாத்தியமாகாது போனால் அடுத்த கட்டம் என்னவாகும்? முழுமையாக விலகிச் செல்லலாம். முழுமையாக விலகியும் செல்ல முடியாவிடின் அடுத்தது என்ன? மறைவுக்குச் செல்லுதல் நிகழலாம். இதைப் போன்ற நிலைப்பாடு வரும்போது நிகழத்தக்கதில் இதுவுமொன்றெனக் கேள்விப்பட்டிருக்கலாம்.

மறைவுக்கு ஆதாரம் பெருந்துணிவு. அதில்லாத போது அடுத்தகட்டம் உள்முக விலகல். அவர் இந்தக் கட்டத்தில் நின்று கொண்டு தான் வாய்விட்டுச்சொல்லியிருக்கிறார். இந்த நிலையில் அவர் எதிர்பார்ப்பது தற்செயலாக நிறைவேறிவிட்டால் கிடைத்திருப்பது எந்நிலையில் இருந்தாலும் முழந்தாழிட்டு வணங்குவதற்கு தயங்கவேமாட்டார். கிடைத்திருப்பதை நாள் தோறும் போற்றித் துதித்துக் கொண்டேயிருப்பார். கிடைத்திருப்பதுடன் அன்பாகப் பேசிக்கொண்டே தனது தேவையைப் பக்குவமாக நிறைவேற்றிக் கொள்வார். கிடைத்திருப்பதையும் அதே பக்குவத்தோடு கையாள்வார். அன்றிலிருந்து அவரைப் போல ஒரு கலைஞனை இந்த உலகம் இதுவரை கண்டிருக்காது. அவரைப் போல ஒரு ரசிகனையும் இந்த உலகம் இதுவரை கண்டிருக்காது. இதுவரை அதிகாரத்தினாலும் கபடத்தனத்தாலும் மாயத் தந்திரத்தினாலும், திருட்டினாலும், அதைக் கையகப்படுத்தி பயன்படுத்திக் கொண்டிருப்போரையெல்லாம் அவர் தனக்குக் கிடைத்ததை உச்சமாகவும், பக்குவமாகவும், கலைத்துவமாகவும் கையாள்வதிலிருந்தே மாமிசம் தின்னும் கொடிய விலங்குகளாக்கி விடுவார் என்பதே உண்மையாகும்.

அவரைப் பார்த்தால் யாரும் இதை நம்பப் போவதில்லை. இது வழமையானதொன்று தான். வியப்பதற்கேதுமில்லை. ஆனால் அவர் பசியுந்தாகமுமாக இருக்கிறார் என்பதை நினைவில் வைத்திருங்கள். ஏற்கனவேயுள்ள வரையறைகளைத் தகர்த்துவிட்டு, அவருக்காக இரக்கம் காட்டுங்கள். அவராக உங்களிடம் வந்து இரக்கட்டும் எனப் பார்த்துக் கொண்டிருக்கவேண்டாம். ஏனெனில் அவருக்கு இரக்கும் வழிவகை எதுவும் தெரிந்திருப்பதில்லை. அவரிடம் அதிகாரமில்லை, கபடத்தனமில்லை. அவருக்கு மாயத்தந்திரமும் தெரியாது. திருடியும் பழக்கமில்லை. அவர் தனக்குள்ளே குறுகினார். அவரைப் போல் ஒடுக்கப்பட்டவர் யாருமில்லை. அவரைப் போல் அவமானப்பட்டவர் யாருமில்லை. சகபாடிகளே அதிகாரம் கைக்கு வந்ததும் அவரை ஒடுக்கினர். அவர் பணிந்து நடந்தார். கேள்வியேதும் கேட்கவில்லை. தன்னையிழந்து ஞானியானார்'

தற்போது இந்தளவே போதுமானதெனக் கருதுகிறேன். இன்னொரு வாய்ப்புக் கிடைத்தால் தவறவிட்டதையெல்லாம் பதிவு செய்து கொள்ளலாம்.

(தொடரும்)

# இரும்பு மனங்களும் இறுகும் நிஜங்களும்....

ஆறையில் மட்டும்
ஆடிய ஆட்டம் இப்போ
அம்பலத்திற்து வருகிறது!

ஆண்டுகள் பல கடந்து
அரவணைப்புக்காக என்ற பெயரில்
அரளிச்செடிகளின் அட்டகாசம்
பரவிக்கொள்கிறது.

கறுப்புத் துணிக்கும்
களவுப் பணிக்கும்
மீண்டும் பட்டாபிசேகம்!

தெரிவுகள் நெரிக்கப்பட
உரிமைகள் எரிக்கப்பட
மரிக்கப்பட்ட உயிர்களின் மேல்
மாளிகை மனிதங்களும்
மாமிச மனிதங்கள்!

துப்பாக்கி கரங்களிற்கும்
சப்பாத்துக் கால்களிற்கும்மறுபடியும்
மாலை மரியாதை புஜாபிசேகம்!


தாடிகளும் கோடிகளும்
பிற்பாடிகளும் ஒட்டிக்கொள்ள
ஆடியில் அமர்க்களம்
ஆவணியில் கொலைக்களம்!

அன்னை கட்டியெழுப்பிய
அரைப்புலிடையும் உருவி

அடுத்த வீட்டு அன்ரிக்கு
அன்பளிப்பு!

எல்லாம் தெரிந்தும்
காலம் பேசாமல் இருக்கிறது.
அது ஒரு தவம்.
காலங்கடந்தாலும்
வரவிருக்கும் ஒரு
ஒற்றைச் சூரியனுக்கான மாபெரும்
தவமிருப்பு!!

- தமிழிச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org